# APPOLO STUDY CENTRE

## நடப்பு நிகழ்வுகள்
## மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் 2020

# உள்ளடக்கம்


| தலைப்புகள் | பக்க எண் |
|---|---|
| முக்கிய தினங்கள் | 3 |
| தமிழ்நாடு | 9 |
| மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் | 20 |
| தேசிய நிகழ்வுகள் | 27 |
| பன்னாட்டு நிகழ்வுகள் | 38 |
| நியமனங்கள் | 44 |
| திட்டங்கள் | 46 |
| குழுக்கள் | 52 |
| அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் | 55 |
| மாநாடுகள் | 65 |
| பாதுகாப்பு | 71 |
| பொருளாதாரம் | 75 |
| விளையாட்டுகள் | 81 |
| விருதுகள் | 85 |
| நூல்கள் மற்றும் ஆசிரியர்கள் | 96 |
| நினைவில் இருப்பவர்கள் | 98 |
| செயலிகள் மற்றும் இணையதளங்கள் | 100 |
| அட்டவணை, தரவரிசை மற்றம் அறிக்கை | 105 |
| கலாச்சாரம் / பண்பாடு | 109 |
| மே - மாத தகவல்கள் | 112 |

APPOLO STUDY CENTRE

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக்கரு |
|---|---|---|
| மே 1 | சர்வதேச தொழிலாளர் தினம் | |
| மே 1 | மகாராஷ்டிரம் தினம் மற்றும் குஜராத் தினம் | |
| மே 2 | உலக ட்யூனா தினம் | |
| மே 2 | சர்வதேச வானவியல் தினம் | |
| மே 3 | உலக பத்திரிக்கை சுதந்திர தினம் | "அச்சமற்ற இதழியல்" |
| மே 4 | சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் | |
| மே 5 | உலக காசநோய் தினம் | "போதும் காசநோய் இறப்பு" |
| மே 5 | சர்வதேச பேறுகால உதவியாளர் தினம் | பெண்களுடன் மருத்துவச்சிகள்: இப்போது கொண்டாடவும், நிரூபிக்கவும், அணிதிரட்டவும், ஒன்றுபடவும் |
| மே 5 | உலக கைகள் தூய்மை தினம் | |
| மே 7 | வெசாக் தினம் | |
| மே 7 | உலக தடகள தினம் | |
| மே 8 | உலக செஞ்சிலுவை தினம் | |
| மே 8 | உலக குருதியழிவு தினம் | "The dawning of a new era for thalassemia: Time for a global effort to make novel therapies accessible and affordable to patients." |
| மே 9 | உலக பறவைகள் இடம்பெயர்வு தினம் | "பறவைகள் நமது உலகை இணைக்கின்றன" |
| மே 11 | தேசிய தொழில்நுட்ப தினம் | |
| மே 12 | சர்வதேச தாதிகள் தினம் | "ஆரோக்கியத்திற்கு உலகை பராமரியுங்கள்" |
| மே 15 | சர்வதேச குடும்ப தினம் | |
| மே 16 | ஆயுதப்படைகள் தினம் | |
| மே 16 | சர்வதேச ஒளி தினம் | |
| மே 16 | தேசிய டெங்கு தினம் | |
| மே 17 | உலக தொலைதொடர்பு மற்றும் தகவல் சமூகத்தினம் | 2030ஐ இணைக்கவும்: நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பம் |
| மே 17 | உலக உயர் இரத்த அழுத்த தினம் | உங்கள் இரத்த அழுத்தத்தை அளங்கள், அதனை கட்டுபடுத்தி, நீடித்து வாழுங்கள் |
| மே 18 | சர்வதேச அருங்காட்சியகம் தினம் | சமத்துவத்திற்கான அருங்காட்சியகங்கள்: பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் |

| | | |
|---|---|---|
| மே 20 | உலக தேனி தினம் | Bee engaged |
| மே 20 | உலக அளவியல் தினம் | உலகளாவிய வர்த்தகத்திற்கான அளவீடுகள் |
| மே 21 | உலக விவாதம் மற்றும் வளர்ச்சிக்கான கலாச்சார பன்முகத்தன்மை தினம் | |
| மே 21 | சர்வதேச தேயிலை தினம் | |
| மே 21 | தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் | |
| மே 22 | சர்வதேச உயிரியல் பன்முகத்தன்மை தினம் | நமக்கான தீர்வு இயற்கையிடம் உள்ளது |
| மே 23 | உலக ஆமை தினம் | தத்தெடுங்கள், வாங்காதீர்கள் |
| மே 23 | உலக தைராய்டு தினம் | |
| மே 25 | சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம் | |
| மே 28 | சர்வதேச பெண்கள் நல நடவடிக்கை தினம் | |
| மே 28 | உலக பசி தினம் | |
| மே 29 | சர்வதேச ஐ.நா. அமைதி காப்போர் தினம் | அமைதி காப்பதில் பெண்கள்: அமைதி திறவுகோல் |
| மே 30 | கோவாவின் மாநில தினம் | |
| மே 31 | உலக புகையிலை எதிர்ப்பு தினம் | Protecting Youth from Industry Manipulation and preventing them from tobacco and nicotine use |

| நாள் | தினம் | மையக்கரு |
|---|---|---|
| ஜுன் 1 | உலக பால் தினம் | 2020ஆம் ஆண்டின் மையக்கரு: உலக பால் தினம் 20வது ஆண்டு நிறைவு |
| ஜுன் 1 | உலக பெற்றோர்கள் தினம் | "உலகின் அனைத்து பெற்றோர்களையும் பாராட்டுதல்" |
| ஜுன் 2 | தெலுங்கானா மாநில உருவாக்க தினம் | |
| ஜுன் 3 | உலக மிதிவண்டி தினம் | |
| ஜுன் 4 | சர்வதேச அப்பாவி குழந்தைகள் தினம் | |
| ஜுன் 5 | உலக சுற்றுச்சூழல் தினம் | இயற்கைக்கான நேரம்<br>பங்களிப்பு நாடுகள் கொலம்பியா மற்றும் ஜெர்மனி |
| ஜுன் 6 | ருஷ்ய மொழி தினம் | |
| ஜுன் 7 | உலக உணவு பாதுகாப்பு தினம் | உணவு பாதுகாப்பு அனைவரின் கடமையாகும் |
| ஜுன் 8 | உலக பெருங்கடல்கள் தினம் | நிலையான கடலுக்கான கண்டுபிடிப்பு |
| ஜுன் 9 | உலக அங்கீகார தினம் | அங்கீகாரம்: உணவு பாதுகாப்பை மேம்படுத்தல் |
| ஜுன் 12 | உலக குழந்தை தொழிலாளர் | "COVID-19 – குழந்தைகளை |

| | | |
|---|---|---|
| | எதிர்ப்பு தினம் | குழந்தை தொழிலில் இருந்து இப்போதும் எப்போதும் பாதுகாப்போம்'' |
| ஜுன் 13 | சர்வதேச வெளிறல் விழிப்புணர்வு தினம் | Made to shine |
| ஜுன் 14 | உலக இரத்த கொடையாளி தினம் | பாதுகாப்பான இரத்தம் உயிர்களை காப்பாற்றுகிறது |
| ஜுன் 15 | உலக மூத்தோரை தவறாக பயன்படுத்தல் தினம் | Lifting up voices |
| ஜுன் 15 | உலக காற்று தினம் | |
| ஜுன் 17 | உலக பாலைவனமாதல் மற்றும் வறட்சி எதிர்ப்பு தினம் | உணவு, தீவனம், நார்ச்சத்து – நிலத்திற்கும் நுகர்வுக்கும் இடையிலான இணைப்புகள் |
| ஜுன் 18 | நிலையான அறுசுவை உணவு தினம் | |
| ஜுன் 18 | முகக்கவசம் தினம் | |
| ஜுன் 19 | பாலியல் வன்முறைகளை அகற்றுவதற்கான சர்வதேச தினம் | |
| ஜுன் 20 | உலக அகதிகள் தினம் | ஒவ்வொரு செயலும் கணக்கிடப்படுகிறது |
| ஜுன் 21 | சர்வதேச யோகா தினம் | உடல்நலத்திற்கு யோகா – வீட்டில் யோகா |
| ஜுன் 21 | சர்வதேச சங்கிராந்தி கொண்டாட்ட தினம் | |
| ஜுன் 21 | உலக இசை தினம் | |
| ஜுன் 21 | உலக நீர்நிலையியல் தினம் | தன்னியக்க தொழில்நுட்பங்களை இயக்கும் நீர்நிலையியல் |
| ஜுன் 23 | உலக ஒலிம்பிக் தினம் | Move, learn and discover |
| ஜுன் 23 | ஐ.நா. பொதுச்சேவை தினம் | கோவிட்-19 பெருந்தொற்று சேவையில் அரசு ஊழியர்களை கௌரவித்தல் |
| ஜுன் 23 | சர்வதேச விதவைகள் தினம் | கண்ணுக்கு தெரியாத பெண்கள், கண்ணுக்கு தெரியாத சிக்கல்கள் |
| ஜுன் 25 | கடற்படை தினம் | கடற்படையினர் முக்கிய தொழிலாளர்கள் |
| ஜுன் 26 | சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கு ஆதரவான சர்வதேச தினம் | மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் |
| ஜுன் 26 | போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதத்திற்கு எதிரான சர்வதேச தினம் | சிறந்த கவனிப்புக்கு சிறந்த அறிவு |
| ஜுன் 27 | குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம் | கோவிட் 19: சிறந்த முடக்குதல் மற்றும் சிறுதொழிலில் அதன் தாக்கம் |
| ஜுன் 29 | தேசிய புள்ளியியல் தினம் | SDG 3: (ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிசெய்து அனைவருக்கும் நல்வாழ்வை |

| | | |
|---|---|---|
| | | ஊக்குவித்தல்)<br>SDG 5: (பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் பெண்களுக்கு அதிகாரம்) |
| ஜுன் 30 | சர்வதேச சிறுகோள் தினம் | |
| ஜுன் 30 | சர்வதேச நாடாளுமன்றவாத தினம் | |

| நாள் | தினம் | மையக்கரு |
|---|---|---|
| ஜுலை 1 | தேசிய மருத்துவர்கள் தினம் | கோவிட் - 19 இறப்பை குறைத்தல் |
| ஜுலை 1 | பட்டய கணக்காளர்கள் தினம் | |
| ஜுலை 1 | தேசிய அஞ்சலக தொழிலாளர்கள் தினம் | |
| ஜுலை 1 | கனடா தினம் | |
| ஜுலை 2 | உலக UFO தினம் | |
| ஜுலை 2 | உலக விளையாட்டு பத்திரிக்கையாளர்கள் தினம் | |
| ஜுலை 3 | சர்வதேச நெகிழிபைகள் அற்ற தினம் | |
| ஜுன் 28 முதல் ஜுலை 4 வரை | உலக ஒவ்வாமை தினம் 2020 | Allergy care does not stop with COVID 19 |
| ஜுலை 4 | சர்வதேச கூட்டுறவு தினம் | காலநிலை நடவடிக்கைக்கு கூட்டுறவு |
| ஜுலை 4 | அமெரிக்க சுதந்திர தினம் | |
| ஜுலை 6 | உலக விலங்குவழிபரவும் நோய்கள் தினம் | |
| ஜுலை 7 | உலக மிட்டாய் தினம் | |
| ஜுலை 11 | உலக மக்கள்தொகை தினம் | இப்போது பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது |
| ஜுலை 12 | உலக மலாலா தினம் | |
| ஜுலை 14 | சர்வதேச சுறா விழிப்புணர்வு தினம் | |
| ஜுலை 15 | கல்வி வளர்ச்சி தினம் | மறைந்த முதலமைச்சர் காமராஜர் பிறந்தநாள் நினைவாக ஜுலை 15 கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது |
| ஜுலை 15 | உலக இளைஞர் ஆற்றல் தினம் | |
| ஜுலை 17 | உலக சர்வதேச நீதி தினம் | |
| ஜுலை 17 | உலக எமோஜி தினம் | |
| ஜுலை 18 | சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் | |
| ஜுலை 20 | முதல் சர்வதேச சதுரங்க தினம் | யாரேனும் ஒருவருக்கு சதுரங்கம் எவ்வாறு விளையாடுவது என கற்பியுங்கள் |
| ஜுலை 23 | சர்வதேச ஒளிபரப்பு தினம் | |

| | | |
|---|---|---|
| ஜுலை 26 | கார்கில் வெற்றி தினம் | |
| ஜுலை 26 | மாலத்தீவுகளின் 55வது சுதந்திர தினம் | |
| ஜுலை 26 | சர்வதேச சதுப்புநில சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் | |
| ஜுலை 27 | மத்திய ரிசர்வ் போலிஸ் படையின் 85வது எழுச்சி தினம் | |
| ஜுலை 28 | உலக மஞ்சள்காமாலை தினம் | Find the missing millions |
| ஜுலை 29 | சர்வதேச புலிகள் தினம் | அவர்களின் பிழைப்பு நமது கையில் உள்ளது |
| ஜுலை 30 | உலக மனித கடத்தலுக்கு எதிரான தினம் | |
| ஜுலை 30 | சர்வதேச நட்பு தினம் | |

| நாள் | தினம் | மையக்கரு |
|---|---|---|
| ஆகஸ்ட் 1 | உலக நுரையீரல் புற்றுநோய் தினம் | |
| ஆகஸ்ட் 1–7 | உலக தாய்பாலூட்டும் வாரம் 2020 | நலமான கோளுக்கு தாய்பாலூட்டுவதை ஆதரியுங்கள் |
| ஆகஸ்ட் 3 | உலக சமஸ்கிருத தினம் 2020 | |
| ஆகஸ்ட் 6 | ஹிரோஷிமா தினம் (அணு எதிர்ப்பு தினம்) | |
| ஆகஸ்ட் 7 | தேசிய கைத்தறி தினம் | |
| ஆகஸ்ட் 8 | வெள்ளையனே வெளியேறு இயக்கத் தினம் | |
| ஆகஸ்ட் 9 | நாகசாகி தினம் | |
| ஆகஸ்ட் 9 | சர்வதேச பழங்குடி மக்கள் தினம் | COVID 19 and indigenous peoples' resilience |
| ஆகஸ்ட் 10 | உலக உயிரிஎரிவாயு தினம் | Biofuels towards Atmanirbhar Bharat |
| ஆகஸ்ட் 10 | உலக சிங்கம் தினம் | |
| ஆகஸ்ட் 12 | உலக யானைகள் தினம் | |
| ஆகஸ்ட் 12 | சர்வதேச இளைஞர்கள் தினம் | |
| ஆகஸ்ட் 13 | சர்வதேச இடதுகை பழக்கமுடையோர் தினம் | |
| ஆகஸ்ட் 13 | உலக உடல்உறுப்பு தான தினம் | |
| ஆகஸ்ட் 19 | உலக மனிதாபிமான தினம் | |
| ஆகஸ்ட் 19 | உலக புகைப்படக்கலை தினம் | |
| ஆகஸ்ட் 20 | உலக கொசு தினம் | |
| ஆகஸ்ட் 20 | இந்திய அக்ஷய் உர்ஜா தினம் | To raise awareness about the development of renewable energy in India. It is a campaign that is celebrated since 2004. This day commemorates the birthday of former Prime Minister |

| | | |
|---|---|---|
| | | Rajiv Gandhi |
| ஆகஸ்ட் 20 | நல்லெண்ணம் தினம் | to commemorate the birth anniversary of late erstwhile Prime Minister, Rajiv Gandhi |
| ஆகஸ்ட் 21 | உலக முதியோர்கள் தினம் | |
| ஆகஸ்ட் 21 | பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நினைவு தினம் மற்றும் அஞ்சலி | |
| ஆகஸ்ட் 22 | மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் வன்முறை செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நினைவு தினம் | |
| ஆகஸ்ட் 23 | அடிமை வர்த்தகத்தை நினைவுகூருவதற்கான சர்வதேச நாள் மற்றும் அதனை ஒழித்தல் | |
| ஆகஸ்ட் 24-28 | உலக தண்ணீர் வாரம் 2020 | Theme Home is 'Water and Climate change: accelerating action |
| ஆகஸ்ட் 29 | சர்வதேச அணு சோதனை எதிர்ப்பு தினம் | |
| ஆகஸ்ட் 29 | தேசிய விளையாட்டு தினம் | |
| ஆகஸ்ட் 30 | சர்வதேச கட்டாய காணாமல் போனவர்கள் தினம் | |

APPOLO STUDY CENTRE

# தமிழ்நாடு

- **இந்தியாவிலுள்ள 150-தலைசிறந்த அரசு பல்கலைக்கழகங்களிடையே 2020-2021-ம் ஆண்டிற்கான கல்வியியல் உலக இந்திய அரசுப் பல்கலைக்கழகங்கள் தரப்படுத்துதலில் சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகம் 5-வது இடத்தைப் பெற்றுள்ளது.**

  - இதில் முதல் இடத்தைப் பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனம்(IISc) பெற்றுள்ளது.

- **ஆவடியிலுள்ள 'The Combat Vehicles Research & Development Establishment' என்ற நிறுவனம் ஆவடி மாநாகராட்சியில் COVID–19 தொற்றுகளை ஆய்வு செய்வதற்காக ஒரு புதிய கவசம்(KAVASAM) என்ற மென்பொருளை வடிவமைத்துள்ளது.**

- **மே-7ம் நாள் தமிழக அரசாங்கம் அதன் அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 59-வருடங்களாக அதிகரித்துள்ளது.**

  - இது, அனைத்து அரசு ஊழியர்கள், அரசாங்கம் மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள், அரசியலமைப்பு ரீதியனா அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்கள், ஆணையங்கள் மற்றும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.
  - ஏற்கனவே ஏப்ரல்-1979ல் அப்போதைய முதல்வர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான மாநில அரசாங்கம் அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58-வருடங்களாக உயர்த்தியது.

- **தமிழக அரசாங்கம் சமீபத்தில் மாநில திட்ட ஆணையத்தை (State Planning Commission) மாநில மேம்பாட்டு கொள்கை கவுன்சிலாக (State Development Policy Council-SDPC) மாற்றியமைத்து அதற்குரிய ஆணையையும் வெளியிட்டுள்ளது.**

- **தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் C. விஜயபாஸ்கர் "நம்ம சென்னை COVID–19 உள்ளடக்க திட்டத்தை" (Namma Chennai COVID–19 Containment Programme) தொடங்கி வைத்தார்.**

- **அக்டோபர்-1,2020 முதல் 'ஒரு தேசம் ஒரு அட்டை' (One Nation One Card) என்ற திட்டத்தில் சேர்ந்து அமல்படுத்தும் என்று மாநில அரசாங்கம் அறிவித்துள்ளது.**

- **மே-22ல், சென்னையிலுள்ள முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதாவின் வசிப்பிடமாகிய போயஸ் தோட்டத்திலுள்ள வேதா நிலையத்தை தற்காலிகமாக கையகப்படுத்தும் ஒரு இடைக்காலச் சட்டத்தை தமிழக அரசாங்கம் இயற்றியுள்ளது.**

- **திருச்சியிலுள்ள தொழில்நுட்ப தேசிய நிறுவனம் (The National Institute of Technology-NIT) வெகுவிரைவில் ரூ.17.11-கோடி செலவு மதிப்பிலான ஒரு சூப்பர்கணினியைப்(Super Computer) பெற உள்ளது.**

    - இந்த சூப்பர்கணினி, திருச்சி தொழில்நுட்ப தேசிய நிறுவனத்தால் தேசிய சூப்பர்கம்ப்யூட்டிங் திட்டத்திற்கு (National Supercomputing Mission – NSM) சமர்ப்பித்த முன்மொழிவு அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது.
    - இந்த புதிய சூப்பர்கணினி இந்திய அரசாங்கத்தால் ஒரு திட்டமாக NSM-ன் ஒரு பகுதியாக கொண்டுவரப்படும்.

- **2020-ம் ஆண்டிற்கான உலகிலுள்ள நான்கு சிறந்த கண்சிகிச்சை நிறுவனங்களுள் ஒன்றாக சங்கர் நேத்ராலயாவை பன்னாட்டுச் செய்தி இதழான 'Newsweek' தரப்படுத்தியுள்ளது.**

- **தமிழ்நாடு அரசாங்கம், மாநிலத்தில் COVID-19 தொற்றின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு பொருளாதார நிபூணர்கள், தொழிலதிபர்கள், வங்கியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் அடங்கிய 24-உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைத்துள்ளது.**

    - COVID-19 தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் C. ரங்கராஜன் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவை தமிழக அரசாங்கம் அமைத்துள்ளது.
    - இந்த தொற்றின் உயர்வை சமாளிப்பதற்கு மாநில அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட 16-வது குழு இதுவாகும்.
    - இக்குழு, மூன்று மாதத்திற்குள் மாநில அரசாங்கத்திற்கு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்.
    - இக்குழுவில், முன்னாள் தலைமைச்செயலர் N. நாராயணன், TVS மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணுசீனிவாசன், சென்னை தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழக துணைவேந்தர் N. குமார், சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் P. துரைசாமி போன்றவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

- **2018-ல் தமிழ்நாடு குழந்தை இறப்புவீதம் (IMR) 1000-பிறப்புக்கு 16-லிருந்து 15-ஆகக் குறைந்துள்ளது.**

- **மே-27ல் தமிழ்நாடு அரசாங்கம், மாநிலத்தில் ரூ.15,128 கோடி முதலீட்டை கொண்டு வருவதற்கு 17-வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டது.**

    - அவற்றில் பங்கேற்ற சில முக்கிய நிறுவனங்கள் பின்வருமாறு:
        1. Daimler India Commercial, Germany.
        2. Vivid Solaire Energy Private Limited, France.

3. HDCI Data Centre Holdings LLP, USA.
4. Salcomp PLC, Finland.

- **தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி K. பழனிச்சாமி மே-28ல் சென்னையிலிருந்து காணொளிக்காட்சி மூலமாக நொய்யல் ஆற்று சீரமைப்புத் திட்டத்தை ரூ. 230 கோடி செலவு மதிப்பீட்டில் தொடங்கி வைத்தார்.**
  - இத்திட்டத்தின்கீழ், ஏற்கெனவே உள்ள 18-அணைக்கட்டுகள் புதுப்பிக்கப்பட்டு மேலும், 4-புதிய அணைக்கட்டுகள் கட்டப்படவுள்ளன மற்றும் ஆற்றின் கரையிலுள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படவுள்ளன.
  - இந்த நொய்யல் ஆறு கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி பின்னர் திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்கள் வழியாக பாய்கிறது.

- **மே-12ல் தமிழ்நாட்டின் இரண்டு மென்மையான கைவினைப்பொருள்களான தஞ்சாவூர் நெட்டி பணிகள் (Netti works) மற்றும் அரம்பாவூர் மரக்கடைசல்கள் ஆகியவற்றிற்கு புவிசார் குறியீடு(Geographical Indication – GI) வழங்கப்பட்டுள்ளது.**

- **மே-24ல் சிங்கம்பட்டி கடைசி ஜமீன்தார் T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி தனது 92-வது வயதில் காலமானார்.**
  - அவர் தென்னிந்தியாவின் கடைசி ஜமீன்தார் ஆவார்.
  - சிஙகம்பட்டி என்பது தென்தமிழ்நாட்டில் அப்போதைய 72-பாளையங்களில் ஒன்றாக விளங்கியதாகும். இது அம்பாசமூத்திரம் வட்டத்தில் மேற்குதொடர்ச்சிமலை அருகில் அமைந்துள்ளது.

- **தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்திலுள்ள விஞ்ஞானிகள் நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு புதிய கைகளை தூய்மைப்படுத்தும் தொற்றுத் தடைப்பொருளை(Hand Sanitizer) உருவாக்கியுள்ளது.**

- **தமிழ்நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீடு (FBI) 2018-2019ம் நிதியாண்டில் இருந்த ரூ.18,164-கோடி, 2019-2020ல் ரூ.16,624-கோடி அதாவது 8.5% குறைந்துள்ளது.**

- **மாநில அரசாங்கம் கிராமப்புற தொழில் நிறுவனங்களின் சீரமைப்பிற்காக COVID-19 உதவித்திட்டம் என்றழைக்கப்படுகின்ற ரூ.300-கோடிக்கான திட்டத்தைத் தொடங்கியுள்ளது.**

- **தமிழ்நாடு விவசாயத்துறை, புன்செய்நில விவசாயத்தை மேம்படுத்துவதற்கு கோயம்புத்தூர் மாவட்டத்தின் அனைத்து 12-ஊராட்சி ஒன்றியங்களிலும் நிலையான புன்செய்நில மேம்பாடு மீதான தமிழ்நாடு திட்டத்தை(TamilNadu Mission on Sustainable Driland Development- TNMSDD) தொடங்கியுள்ளது.**

- **மதுரையில் சிலப்பதிகாரப் பூங்கா (தாவரவியல் பூங்கா) அமைய உள்ளது.**

  - இத்திட்டம், தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள மரங்களை திரும்ப கொண்டுவரும் நோக்கம் பெற்றுள்ளது.

- **நெகிலிப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மத்திய நிறுவனம் (Central Institute of Plastics Engineering & Technology – CIPET) என்பது பெட்ரோலிய வேதிப்பொருள்கள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மத்திய நிறுவனம் (Central Institute of PetroChemicals Engineering & Technology – CIPET) என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.**

  - இந்த CIPET இந்திய அரசாங்கத்தின் வேதியியல் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஒரு பிரதான தேசிய நிறுவனமாகும்.
  - இந்நிறுவனத்தின் பெயர்மாற்றம் 1975-ம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுகள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- **R. சந்திரசேகர் என்பவர் செம்மொழித் தமிழ் மத்திய நிறுவனத்தின் முதலாவது நிரந்தர இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- **தமிழக முதல்வர் நாமக்கலில் அடைக்கப்பட்ட உயிரி வாயு உலையைத் தொடங்கி வைத்தார்.**

- **தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க சக்தியின் உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது.**

  - மாநிலத்தில் 20322-மெகாவாட் நீர் மின்சாரமும், 8523-மெகாவாட் காற்றாலை மின்சாரம், 4054-மெகாவாட் சூரியசக்தி மின்சாரம், 266-மெகாவாட் உயிர்த்திரள் மின்சாரம் மற்றும் 711-மெகாவாட் இணை மின்னாக்கம் ஆக மொத்தம் 15,876-மெகாவாட் மொத்த மின்சாரத்திறன் ஆகும்.

- **இடஒதுக்கீடு மீதான இடைக்காலச் சட்டம்:**

  - ஜுன்-15ல் தமிழக அமைச்சரவை, இந்த வருடத்திலிருந்து மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு கொடுப்பதற்கான ஒரு இடைக்காலச் சட்டத்தை இயற்றுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- அரசுப்பள்ளி மாணவர்கள் தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வில்(NEET) தகுதி பெற்றிருக்க வேண்டுமென்பது அடிப்படையாகும்.
- சட்டசபைக் கூட்டத்தொடர் இல்லாதபோது இடைக்காலச் சட்டத்திற்கான வழிவகையை மாநில அரசாங்கம் தேர்வு செய்தது.
- 'ஒதுக்கீட்டிற்குள் ஒதுக்கீடு' (Quota within Quota) என்பது தனியார் கல்லூரிகளில் அரசாங்க இருக்கைகளையும் உள்ளடக்கும்.
- இந்த முன்மொழியப்பட்ட இடைக்காலச்சட்டம் ஆளுநர் பன்வாரிலால் புரோகித்-தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.
- மாநில அரசாங்கம் அனைத்துப் பிரிவுகளுக்கும் 10% கிடைமட்ட ஒதுக்கீட்டைப் விரிவாக்கவும் முன்மொழிந்துள்ளது.

❖ **சப்போட்டா இலைகளிலிருந்து 'Mazapotin' என்ற ஒரு புதிய கூட்டுப்பொருளைக் கண்டுபிடித்ததற்காக ஒரு காப்புரிமை சென்னை பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.**

- இந்த 'Mazapotin' புற்றுநோய் மற்றும் சர்க்கரைநோய் போன்றவற்றை குணப்படுத்தும் தன்மை கொண்டதாகும்.

❖ **தமிழக அரசு ஊழியர்களின் COVID-19 சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டம்.**

- தமிழக அரசு, புதிய சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் (New Health Insurance Scheme- NHIS) கீழ் **COVID-19**கான மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் சிகிச்சையை உள்ளடக்கியுள்ளது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், COVID-19 கொடூரத்தைக் குறைப்பதற்கு உலக வங்கித் திட்டத்தின் சேமிப்பு ரூ.376-கோடியை ஒதுக்கியுள்ளது.**

- உலக வங்கி, தமிழ்நாட்டின் கடலோர பேரிடர் அபாயக் குறைப்பு (Coastal Disaster risk reduction-CDRR) திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.376-கோடியை மாநிலத்தில் COVID-19 பரவுவதைத் தடுப்பதற்கு தமிழக அரசு உலக வங்கியிடம் இருந்து அனுமதி பெற்றுள்ளது.

❖ **தமிழ்நாட்டிலுள்ள குறைந்த வருமானக் குழுக்களுக்கு மலிவுவிலை வீடு வழங்குவதற்கான கடன் ஒப்பந்தங்களில் இந்திய அரசாங்கமும், உலக வங்கியும் கையொப்பமிட்டுள்ளன.**

❖ **பணிபுரியும் பெண்களின் அமைப்பு, ஜெயா அருணாச்சலம் என்ற ஒரு பிரபலமான சமூகப் பணியாளரின் பெயரில் தென்னிந்தியாவிலுள்ள பெண்களின் கூட்டுறவுகளில் ஒரு புதிய விருதைப் ஆரம்பித்துள்ளது.**

- அந்த வரிசையில், இந்தியக் கடலோரக் காவல்படை கடற்கரை ரோந்துப்படைக் கப்பலான ICGS-Sujay என்பதை ஒரிசா-வில் உள்ள பிரதீப்-லிருந்து சென்னைக்கு இயக்குகிறது.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், புதிதாக பதிவு செய்துள்ள வழக்கறிஞர்களுக்கு முதலிரண்டு வருடங்கள் மாதம் ரூ.3000-யை வழங்குவதாக அறிவித்துள்ளது.**

❖ **மத்திய அரசாங்கம், ஏப்ரல் மாதத்திலிருந்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பிரதான் மந்திரி ஹாரிப் கல்யான் அன்ன யோஜனா(PMGKAY) மற்றும் ஆத்ம நிர்பார் பாரத் பேக்கேஜ் - திட்டங்களின் கீழ் ரூ.5585-கோடி மதிப்பிலான உணவு தானியத்தை இலவசமாக வழங்குவதற்கு ஒதுக்கியுள்ளது.**

❖ **சென்னை IIT, திட்டமிடல் மற்றும் தின அறிவியலின் உலகின் முதலாவது ஆன்லைன் பட்டப்படிப்பு (B.Sc) மற்றும் பட்டயப்படிப்புகளைத் தொடங்கியுள்ளது.**

- பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் எவரும் இந்த ஆன்லைன் பாடத்திட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.
- இத்திட்டத்தின் கீழ் கற்போர்களுக்கு வயது தடையல்ல.

❖ **இந்திய ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, 2020-2021-க்கான சந்தைக் கடன் பெறுவதில் இந்தியாவிலுள்ள மாநிலங்களிடையே ரூ.30,500-கோடி சேகரித்து தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது.**

- எனவே, பத்திரங்கள் மூலமாக சந்தைக் கடன் பெறுவதில் தமிழ்நாடு 17%தை வசூலித்து முதலிடம் வகிக்கிறது.
- அதைத்தொடர்ந்து, மகாராஷ்டிரா ரூ.25,500-கோடி (14%) பெற்று இரண்டாம் இடத்தையும், ஆந்திரப்பிரதேஷ் ரூ.17,000-கோடி (9%) பெற்று மூன்றாம் இடத்தையும் மற்றும் ராஜஸ்தான் ரூ.17,000-கோடி (9%) பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுள்ளன.

❖ **தமிழ்நாடு பிரதான பயிர் விவசாயத்தில் 1-லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பை அதிகரித்துள்ளது.**

- தமிழ்நாட்டில், கடந்த ஆண்டுகளை விட நெல், பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயிர்வகைகள் உள்ளடங்க பிரதான பயிர் விவசாயத்தில் 1-இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு அதிகரித்துள்ளது.
- சென்ற ஆண்டில் 2.939-இலட்சம் ஹெக்டேர் நிலத்தில் இவ்வித விவசாயம் நடைபெற்றபோது, இந்த வருடம் அவ்வித விவசாய நிலப்பரப்பு 3.785-இலட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

- **மாநில அரசாங்கம், M. தணிகாசலம் என்ற முன்னால் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையின்கீழ் ஒரு புதிய 7-உறுப்பினர் அடங்கிய பின்னிலை வகுப்பினர் குழுவை அமைத்துள்ளது.**

- **தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் தளத்தில் தொல்லியல் அறிஞர்களால் நாலடி உயரமுள்ள முதுமக்கள் தாழி தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.**

  - இத்துடன், மே-25ல் தொடங்கி நிகழும் அகழாய்வில் இதுவரை 10-வேறுபட்ட அளவுகளில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- **தமிழ்நாடு வெகுவிரைவில் மேற்கத்திய மாநிலங்களுக்கு காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்சாரம் உள்ளடங்க புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை விநியோகிக்க உள்ளது.**

  - இந்த வரிசையில், தமிழ்நாடு மொத்தம் 6000-மெகாவாட் திறன் கொண்ட மின்சாரத்தை விநியோகிக்க உள்ளது.

- **தமிழ்நாடு, இந்த நிதியாண்டின் முதல் கால் வருடத்தில் நாட்டின் முதன்மையான முதலீட்டு மாநிலமாக முன்னேறியுள்ளது.**

  - இதை, 'Project Today'-என்ற தன்னாட்சி அமைப்பால் வெளியிடப்பட்ட 'Projex Survey' கூறுகிறது.
  - அதன்படி, நாட்டிலேயே தென்னக மாநிலமான தமிழ்நாட்டில் 18.63%ஆன 97,859-கோடி முதலீட்டில் 1241-திட்டங்கள் அமல்படுத்தப்பட உள்ளன.

- **தமிழ்நாடு தனது இரண்டாவது பிராமணர் அல்லாத கோவிலைப் பெறுகிறது.**

  - தமிழ்நாட்டில் மாநிலத்தின் இரண்டாவது பிராமணரல்லாத அர்ச்சகராக மதுரையைச் சேர்ந்த P. தியாகராஜன் வந்துள்ளார்.
  - அவர், நாகமலைப் புதுக்கோட்டையிலுள்ள சித்தி விநாயகர் கோயிலில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- **தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகள்:**

  - தமிழக முதல்வர் எடப்பாடி K. பழனிச்சாமி, அரியலூர், கள்ளக்குறிச்சி மற்றும் நீலகிரியில் அமையவுள்ள புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.
  - ராமநாதபுரம், திருப்பூர், நீலகிரி, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விருதுநகர், திண்டுக்கல், நாமக்கல், நாகப்பட்டினம், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 11-மாவட்டங்களில் மத்திய அரசின் ஒப்புதலுடன் புதிய மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படும்

- இதுவரையில், தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 23-மருத்துவக் கல்லூரிகளுடன் 11-புதிய கல்லூரிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதனால் கூடுதலான மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

❖ **சென்னை மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு மொழித்திறனை மேம்படுத்துவதற்காக 'தாரா' (Tara) என்ற ஒரு கணினிக்குரள் ஆசிரியரை பயன்படுத்தத் தொடங்கி உள்ளனர்.**

❖ **முதல்வர் எடப்பாடி K. பழனிச்சாமி கீழடியிலுள்ள அருங்காட்சியகத்திற்கான அடிக்கல் நாட்டலை திறந்து வைத்தார்.**

- ஜுலை-20ல் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி மூலமாக பண்டைய கீழடி தளத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்துவதற்கு கொந்தகை கிராமத்தில் அருங்காட்சியகத்திற்கான அடிக்கல்லை அவர் நாட்டினார்.

❖ **ஜுலை-31ல் முன்னாள் முதல்வர்கள் சி. என். அண்ணாதுரை, எம்.ஜி. இராமச்சந்திரன் மற்றும் ஜெ. ஜெயலலிதா ஆகிய மூவரின் பெயர்களுக்குப் பின்பு சென்னையிலுள்ள மூன்று மெட்ரோ இரயில் நிலையங்களின் பெயரை முதலமைச்சர் எடப்பாடி K. பழனிச்சாமி அறிவித்துள்ளார்.**

- அதன்படி, ஆலந்தூர் இரயில் நிலையம் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ என்று அழைக்கப்படும்.
- சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையம் புரட்சித் தலைவர் டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ என்று அழைக்கப்படும்.
- CMBT (கோயம்பேடு) இரயில் நிலையம் புரட்சித்தலைவி டாக்டர். ஜெ. ஜெயலலிதா CMBT மெட்ரோ என்று அழைக்கப்படும்.

❖ **2018 இந்தியாவின் புலிகள் கணக்கெடுப்பு மீதான சமீபத்திய அறிக்கையின்படி தமிழ்நாடு மொத்தம் 321-புலிகளைக் பெற்றுள்ளது.**

- தமிழ்நாட்டில், முதுமலை புலிகள் காப்பகம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் களக்காடு முண்டந்துரை புலிகள் காப்பகம் ஆகிய 4-புலிகள் காப்பகங்கள் உள்ளன.

❖ **தமிழ்நாடு அரசாங்கம், திய்யா மற்றும் இலவா ஜாதிகளுக்கு பின்னிலை வகுப்பினர் அந்தஸ்தை வழங்கியுள்ளது.**

- வருவாய்த்துறைச் செயலர் அதுல்ய மிஸ்ரா-வால் தலைமை வகித்த நான்கு உறுப்பினர் கொண்ட குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இவ்விரு ஜாதிகளுக்கும் பின்னிலை வகுப்பினர் அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளன.

❖ **தமிழ்நாட்டின் முன்னாள் தலைமை வழக்கறிஞரும், மூத்த வழக்கறிஞருமான A.L. சோமையாஜி என்பவர் சிறப்பு முக்கியத்துவம் மற்றும் சிக்கலான தன்மையுள்ள வழக்குகளை கையாளுவதற்கு மாநில அரசாங்கத்திற்கான சிறப்பு மூத்த வழக்கறிஞராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ **ஜுலை-27,2020, மாநிலத்திலுள்ள பொதுவிநியோகமுறை மூலமாக இலவச முகக்கவசங்கள் வழங்குவதை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.**

- இத்திட்டத்தின் கீழ், மாநில முழுவதுமுள்ள 2.08-கோடி குடும்ப அட்டைகளுடன் தொடர்புடைய 6.74-கோடி நபர்களுக்கு இரண்டு முகக்கவசங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ **பிரதமர் நரேந்திர மோடி, ஜுலை-26ல் தனது 'மங்கிபாத்' திட்டத்தில் +2-தேர்வில் சமீபத்தில் சிறந்து விளங்கிய நாமக்கல் மாணவியான N. கணிகாவுடன் கலந்துரையாடினார்.**

- N. கணிகா என்ற மாணவி CBSC- வாரியத் தேர்வில் 500-க்கு 490-மதிப்பெண் பெற்றுள்ளார்.
- அவருடைய தந்தை LPG-லாரி ஓட்டுனர் மற்றும் தாய் இல்லத்தரசி ஆவார்.

❖ **தமிழ்நாடு அரசாங்கம் ரூ.5,137-கோடி முதலீட்டைக் கொண்டுவந்து 6555-நபர்களின் வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கும் 16-நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது.**

❖ **தமிழ்நாடு, விவசாய கட்டுமான நிதிக்காக ஒதுக்கப்பட்ட 1-இலட்சம் கோடியின் கிட்டத்தட்ட 6%ஆன ரூ.5990-கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

- இந்த நிதி, மே-12ல் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட ஆத்மநிர்பார் பாரத் அபியான் (Atmanirbhar Bharath Abhiyan) திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.20-இலட்சம் கோடியின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது.

❖ **தமிழ் மேம்பாடு மற்றும் தகவல் தொடர்புத்துறை, சென்னையில் போயஸ் தோட்டத்தின் அமைவிடத்திலுள்ள முன்னால் முதல்வர் ஜெ. ஜெயலலிதாவின் வசிப்பிடமான வேதா நிலையத்தின் கையகத்தை முறைப்படி எடுத்துக் கொண்டது.**

- மாநில அரசாங்கம், வேதா நிலையத்தை முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதாவின் நினைவகமாக மாற்றுவதற்கு முடிவு செய்துள்ளது.
- அவ்வில்லம், வெகுவிரைவில் தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா நினைவில்லம் என்று மாற்றப்படும்.

- **தமிழ்நாடு, இந்தியாவின் முதலாவது மருத்துவ அவசர ஊர்தி பெண் ஓட்டுநரை நியமித்துள்ளது.**

  - இப்புதிய முயற்சி தமிழ்நாடு முதலமைச்சரால் மேற்கொள்ளப்பட்டது.
  - M. வீரலட்சுமி என்பவர் 108-மருத்துவ அவசர ஊர்தியின் ஓட்டுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - தமிழ்நாடு அரசாங்கத்தின் கருத்துப்படி, இது நாட்டிலேயே முதலாவது நிகழ்வாகும்.

- **தமிழ்நாடு, மின்சார ஊர்தி உற்பத்தி சுற்றுச்சூழல் முறைக்காக மட்டுமே ஒரு பூங்காவை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.**

  - இது, நாட்டின் முதலாவது மின்சார வாகனப் பூங்கா ஆகும்.
  - இதற்கான முதலீடு கிட்டத்தட்ட ரூ. 50,000-கோடி ஆகும்.

- **முத்ரா கடன் திட்ட பயனாளிகளின் வரிசையில் தமிழகப் பெண்கள் முதலிடம் வகிக்கின்றனர்.**

  - பிரதான் மந்திரி முத்ரா யோஜனா(PMMY) தொடங்கப்பட்டதிலிருந்து கடன் பெறும் பெண்கள் அட்டவணையில் தமிழகப் பெண்கள் முதலிடம் பெற்றுள்ளனர்.
  - இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் ரூ.4.78-இலட்சம் கோடி 15-கோடி பேருக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.
  - மார்ச்-31,2020ல் உள்ளபடி, தமிழக பெண்கள் ரூ.58,227-கோடி கடன் பெற்று முதலிடம் வகிக்கின்றனர்.
  - இதைத்தொடர்ந்து, மேற்குவங்கப் பெண்கள் ரூ.55,232-கோடி கடன் பெற்று இரண்டாம் இடத்தையும், கர்நாடகப் பெண்கள் ரூ.47,714-கோடி கடன் பெற்று மூன்றாம் இடத்தையும், பீகார் பெண்கள் ரூ.44,879-கோடி கடன் பெற்று நான்காம் இடத்தையும் மற்றும் மகாராஷ்டிரப் பெண்கள் ரூ.42,000-கோடி கடன் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

- **மத்திய அரசாங்கத்தால் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு மருத்துவ ஆலோசனைக்கான e-சஞ்சீவினி மூலமாக அதிகபட்ச எண்ணிக்கையுள்ள மருத்துவ ஆலோசனைகளைப் பெறும் மாநிலங்களின் வரிசையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.**

- **ஆகஸ்ட்-14ல் தமிழக முதல்வர், அம்மா COVID-19 இல்லக் காப்பு திட்டத்தின்கீழ் தலா ரூ.2,500-மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் வழங்குவதைத் தொடங்கி வைத்தார்.**

  - இந்த மருத்துவத் தொகுப்பு COVID-19 அறிகுறி காணப்பட்டு வீட்டில் தணிமைப் படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும்.

- ஆகஸ்ட்-23, சென்னை மற்றும் அதன் புறநகர் மக்கள், அதே நாளில் செக்கோஸ்லோவேக்கியாவில் வால்நட்சத்திரம் மையம் கொண்ட 'Markos 1957' என்பதை நினைவுகூர்ந்தனர்.

- ஆகஸ்ட்-20ல் சென்னை துறைமுகத்தில் நிகழ்ந்த விழாவில் தமிழ்நாடு தலைமைச் செயலர் K. சண்முகத்தால் C-449 என்ற ஒரு புதிய கப்பல் இந்தியக் கடலோர காவல் படைக்குள் அறிமுகப்படுத்தப்பட்டது.

- தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஜி.சுகுமாரை நியமித்துள்ளார்.

APPOLO STUDY CENTRE

# மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்

- ஆந்திரப்பிரதேசம், மாநிலத்திலுள்ள விவசாயிகளின் தேவைகளை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன் CMAPP (விவசாயம் மற்றும் விலை மற்றும் கொள்முதலின் ஒட்டுமொத்த மதிப்பீடு – Comprehensive Monitoring of Agriculture, Prize and Procurement) என்ற கைபேசி செயலியை தொடங்கியுள்ளது.

- ஆந்திரப்பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் இயங்கி வந்த எல்.ஜி.பாலிமர்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து 'ஸ்டைரின்' என்ற வாயு கசிந்ததால் மக்கள் கொத்துக்கொத்தாக மயங்கி விழுந்தனர்.

- தெலுங்கான மாநிலம், அதன் விவசாயிகள் என்ன மற்றும் எப்போது பயிரடலாம் என்பதற்கு வழிகாட்டும் ஒரு முன்னோடித் திட்டத்தை நாட்டிலேயே முதல் மாநிலமாக தொடங்குவதற்கு முன்வந்துள்ளது.

- யதார்த்திரி புவனகிரி மாவட்டத்தில் உருவாக்கப்படும் தெலுங்கானாவின் 'Telia Rumal' சென்னையிலுள்ள புவிசாரக் குறியீடு பதிவகத்திடம் இருந்து புவிசார்க் குறியீடு சான்று பெற்றுள்ளது.

- ஜார்க்கண்ட்-ன் Sohrai Khovar painting, சென்னை புவிசார்க் குறியீடு பதிவகத்தால் புவிசார்க் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- மணிப்பூர் மாநிலத்தில் உலகின் மிக உயர்ந்த கப்பல்பாலத்தை இந்திய இரயில்வே அமைத்து வருகிறது.
    - இப்பாலம் 141-மீ உயரம் கொண்டதாகும்.
    - ஐரோப்பாவின் மாண்டிநெக்ரோவிலுள்ள 'மாலா – ரிஜாகா' பாலத்தின் 139-மீ உயரத்தைவிட இது உயரமானது
    - இப்பாலம் 111-கி.மீ நீளமுள்ள 'ஜிரிபம் - துப்புள் - இம்பால்' இரயில்வேவழித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- மிசோரம் மாநிலத்தில் விளையாட்டுகளுக்கு தொழில் அந்தஸ்து கொடுக்கப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் விளையாட்டுகளை தொழிலாக்குவதாகும்.

- மதிய உணவு படி வழங்குவதற்கு நாட்டில் முதல் மாநிலமாக மத்தியப்பிரதேசம் முன்வந்துள்ளது.

- கர்நாடக மாநில அரசாங்கம், அதன் அனைத்து குடிமக்களின் தகவலை சேகரிப்பதற்கு மாநில சுகாதார பதிவேட்டை(State Health Register) தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது. இந்தப் பதிவேடு நாட்டில் முதன்முதல் உருவாக்கப்பட்டதாகும்.

- மே-30,2020ல் கோவா தனது மாநில அந்தஸ்து தினத்தை கொண்டாடியது. கோவா 25-வது மாநிலமாக இந்திய ஒன்றியத்தில் சேர்ந்தது.

- **உத்திரப்பிரதேச அரசாங்கம் மாநிலத்தில் தொடர்ச்சியாக 800-கிலோமீட்டர் தூரத்தில் மூலிகை சாலைகள் திட்டத்தை (Herbal Roads Project) அமல்படுத்த உள்ளது.**

- **இமாச்சலப்பிரதேச அரசாங்கம், நகர்ப்புறங்களில் வசிப்போர்களுக்கு 120-நாள் வேலை வழங்குவதற்கு முக்கிய மந்திரி சஹாரி ரோஜ்கார் உத்திரவாதத் திட்டத்தை (Mukhya Mantri Shahari Rojgar Guarantee Yojana) தொடங்க உள்ளது.**

- **புதிய ஜம்மு மற்றும் காஷ்மீர் குடியேற்றச் சட்டம் மே-24ல் அந்த யூனியன் பிரதேசத்தில் நடைமுறைக்கு வந்தது.**

- **மத்தியப்பிரதேச மாநில அரசாங்கம், மக்கள் காவல் நிலையங்களுக்குச் சென்று முதல் தகவல் அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கு பதிலாக வீட்டிலிருந்தே அவற்றைத் தாக்கல் செய்யக்கூடிய முதல் தகவல் அறிக்கை ஆப் கீ துவார் யோஜனா (Aapke Dwar Yojana) தொடங்கியுள்ளது. இதற்காக, போபாலில் புதிய காவல் கட்டுப்பாட்டறை தொடங்கப்பட்டுள்ளது.**

- **உத்திரகாண்ட் மாநில அரசாங்கம், வேலையில்லாத இளைஞர்கள் வேலை பெறும் வாய்ப்புகளுக்கு உதவுவதற்கு 'HOPE' (Helping Out People Everywhere) என்ற இணைய முகப்பை தொடங்கியுள்ளது.**

- **உத்தரகாண்ட் மாநிலத்தின் கோடைக்கால தலைநகராக 'Gairsain' உள்ளது.**
  - உத்திரகாண்ட் மாநில ஆளுநர் பேபிராணி மௌரியா புதிய கோடைக்கால தலைநகராக 'Gairsain' அறிவிக்க ஒப்புக்கொண்டார்.
  - 'Gairsain' னை Bhararisen என்றும் அழைக்கலாம்.

- **தெலுங்கானா உருவான தினம் ஜூன்-2 ஆகும்.**
  - தெலுங்கான மாநிலம் June-2, 2014 ல் உருவானது.

- **The Kerala Fibre Optic Network (K-FON) திட்டம் டிசம்பர்-2020 வாக்கில் ஆரம்பிக்கப்பட உள்ளது.**
  - இத்திட்டம், ஏழை மக்கள் இலவச இணையதள வசதி பெறும் நோக்கத்தில் உள்ளது.
  - குடிமக்களின் அடிப்படை உரிமையாக இணையதளத்தை அறிவித்த முதல் மாநிலம் கேரளா ஆகும்.

- **உத்திரகாண்ட் மாநிலம் அதன் மிகப்பெரிய உயிரி பன்முகத்தன்மைப் பூங்காவை தொடங்கி உள்ளது.**
  - உத்தரகாண்டின் இந்த மிகப்பெரிய உயிரிப் பன்மைத்தன்மைப் பூங்கா உலக சுற்றுச்சூழல் தினக் கொண்டாட்டத்தின் மீது ஜூன்-5,2020ல் ஹால்டுவானில் தொடங்கப்பட்டது.

- இந்தப் பூங்காவிற்கு **'உத்திரகாண்ட் வன ஆராய்ச்சிப் பிரிவு உயிரிப் பன்முகத்தன்மைப் பூங்கா'** எனப் பெயரிடப்பட்டுள்ளது.

❖ **மஹாராஷ்டிர மாநில அரசாங்கம் வெள்ள எச்சரிக்கை முறையைத்(Flood Warning System) தொடங்கியுள்ளது.**

- மஹாராஷ்டிரா அரசாங்கம் வெள்ள அபாயப் பகுதி மக்கள் விழிப்புணர்வு கொள்வதற்காக 'iFLOWS' என்றழைக்கப்படும் வெள்ள எச்சரிச்கை முறையைத் தொடங்கியுள்ளது.
- இந்த எச்சரிக்கை, 6-லிருந்து 72-மணி நேரத்திற்கு முன்னதாக ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மும்பையில் தொடங்கப்பட்டது.

❖ **திரிபுரா மாநில அரசாங்கம் 'சிறிதளவு விளையாடு, சிறிதளவுப் படி' (Play Little, Study Little) என்ற திட்டத்தைத் தொடங்க உள்ளது.**

- திரிபுரா மாநிலம் 'சிறிதளவு விளையாடு, சிறிதளவுப் படி' என்ற திட்டத்தின் அர்த்தத்தை உள்ளடக்கி 'Ektu Khelo, Ektu Padho' என்ற திட்டத்தை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது.
- இத்திட்டம் குறுஞ்செய்தி (அ) கட்செவி அஞ்சல்(WhatsApp) மூலமாக அமல்படுத்தப்படும்.

❖ **MGNREGA (Mahatma Gandhi National Rural Employment Guarantee Act) என்ற சட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு வழங்குவதற்கு முதல் மாநிலமாக உத்திரப்பிரதேசம் முன்வந்துள்ளது.**

- எனவே, இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற மக்களுக்கு அதிகபட்சமாக வேலைவாய்ப்பு வழங்கும் மாநிலப் பட்டியலில் முதலாவதாக உத்திரப்பிரதேசம் உள்ளது.
- வெளியிடப்பட்ட தகவலுக்கிணங்க, மாநிலத்தின் கிட்டத்தட்ட 57,000-கிராம பஞ்சாயத்துகளில் 57,12,975-பணியாளர்கள் வேலை பெற்றுள்ளனர். இது, இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தப்பணியில் 18% ஆகும்.

❖ **பிளாட்டினா திட்டத்தின்(Project Platina) கீழ் உலகின் மிகப்பெரிய பிளாஸ்மாதெரபி செயல்பாடு மஹாராஷ்டிராவில் தொடங்கப்பட்டது.**

❖ **COVID-19 நோயாளிகள் சிகிச்சைக்கு டெல்லியில் இந்தியாவின் முதலாவது பிளாஸ்மா வங்கி அமைக்கப்பட உள்ளது.**

❖ **உத்தரகாண்ட் மாநிலத்தில் இந்தியாவின் முதலாவது காளான் பூங்கா(Lichen Park) அமைந்துள்ளது.**

- ❖ குஜராத் மாநில அரசாங்கம் சிறுகுறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மற்றும் பெரிய தொழில்களுக்கான 'At One Click' முயற்சி என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- ❖ பழங்குடி விடுதிகளுக்கு ISO-சான்றிதழ் வழங்கப்பட்டு நாட்டில் முதல் மாநிலமாக ஒடிசா முன்வந்துள்ளது.

- ❖ பெங்களூரு பன்னாட்டு விமானநிலையம், விமானத்தின் தொடக்கம் மற்றும் முடிவு ஆகிய இரண்டிலும் விமான போக்குவரத்து காலநிலை மதிப்பீட்டுமுறையை (Aviation Weather Monitoring System – AWMS) நாட்டில் முதன்முதலில் பெற்றுள்ளது.
- ❖ இந்திய வானிலை ஆய்வுத்துறை (India Meteorological Department) அரபிக்கடல் மீதான நிசர்கா புயல் (Cyclone Nisarga) ஜுன்-3ல் மஹாராஷ்டிரா மற்றும் குஜராத்தைத் தாக்குமென்று அறிக்கை அளித்துள்ளது.

- ❖ இமாச்சலப்பிரதேசம் 100% இல்லங்களுக்கு LPG சமையல் வாயு இணைப்பை ஏற்படுத்தி நாட்டிலேயே முதல் மாநிலமாக திகழ்கிறது.

  - ➢ பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா(Pradhan Mantri Ujjawala Yojana) என்ற மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் கிராமப்புறப் பெண்களுக்கு இலவச சமையல் வாயு இணைப்பை இம்மாநிலம் ஏற்படுத்தியுள்ளது.
- ❖ கோவா மாநிலம், இந்தியாவின் முதலாவது கடல்சார் தொகுப்பை(Maritime Cluster) அமைப்பதற்கு 14,380-ச.மீ நிலத்தை ஒதுக்கியுள்ளது.

- ❖ உத்திரப்பிரதேசம் முழுவதும் 25-கோடி மரக்கன்றுகளை நடுவதற்கு 'ரிக்ஸ்சரோபான் திட்டம்-2020'ஐ (Mission Vriksharopan-2020) அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் தொடங்கியுள்ளார்.

- ❖ டெல்லி யூனியன்பிரதேச அரசாங்கம் "Paudhe Lagao, Paryanvaran Bachao' என்ற இயக்கத்தை தொடங்க உள்ளது.

  - ➢ ஒரு மெகா மரக்கன்றுகள் நடும் இயக்கம் டெல்லி அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
  - ➢ "Paudhe Lagao, Paryanvaran Bachao' என்ற இவ்வியக்கத்தின் பெயருக்கு 'மரங்களை நடு, சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடு' (Plant Trees, Save Environment) என்பது பொருளாகும்.

- ❖ உலகின் இரண்டாவது மிகப்பெரிய தகவல்மையம் மும்பை அருகில் தொடங்கப்பட்டுள்ளது.

- ❖ மத்தியப்பிரதேசம் 'நமது இல்லம், நமது பள்ளி'(Hamara Ghar, Hamara Vidyalaya) என்ற இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

- COVID-19 பரவுவதைத் தடுப்பதற்கு நாடு முழுவதும் முழுஅடைப்பு மேற்கொள்ளப்பட்ட வேளையில் ஒவ்வொரு மாணவரும் தனது இல்லத்தை பள்ளியாக நினைத்து செயல்படும் இயக்கத்தை மத்தியப் பிரதேச அரசாங்கம் தொடங்கியுள்ளது.

- **இந்தியாவின் முதலாவது e-லோக் அதாலத்தை சட்டீஸ்கர் மாநிலம் அமைத்துள்ளது.**
- **உணவு பதனிடும் தொழில்களுக்கான மத்திய காபினட் அமைச்சர் H.K. பாதல் மிசோரமில் ஜோராம் மெகா உணவுப் பூங்கா-வை (Zoram Mega Food Park) தொடங்கி வைத்துள்ளார்.**

- **உத்தரகாண்ட் மாநிலம், 'ஆற்றலுக்கான கழிவு' (Waste to Energy) எனப் பெயரிடப்பட்ட ஒரு திட்டத்தின்கீழ் கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது.**

- **மத்தியப் பிரதேச அரசாங்கம் 'ரோக்கோ டோக்கோ'(Rocko-Toko) இயக்கத்தைத் தொடங்கவுள்ளது.**

  - இந்த இயக்கத்தின்கீழ், மாநிலத்தில் பொதுஇடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப் பட்டிருப்பினும் அவற்றை அணியாத மக்களுக்கு மாநில அரசாங்கம் முகக்கவசங்களை வழங்கும்.

- **தெலுங்கானா மாநிலக் காவல்துறை 'CybHer' இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.**

- **தீவிர மெகா புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சூரிய சக்திப் பூங்கா திட்டத்துடன் (Ultra Mega Renewable Energy Solar Park Scheme) இணைந்து, மஹாராஷ்டிர மாநில மின்சார உற்பத்தி நிறுவனம் (Maharashtra State Power Generation Company – Mahagenco) துலே மாவட்டத்திலுள்ள சக்ரி-ல் 2500-மெகாவாட் மொத்தத்திறனுடன் சூரிய சக்தி உலைகளை அமைக்க உள்ளது.**

- **புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஏற்றுமதிக் கொள்கை 2020ஐ ஆந்திரப்பிரதேச அரசாங்கம் அறிவித்துள்ளது.**

  - அதன்படி, இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு மின்சாரம் விறகப்படும்.
  - இக்கொள்கை, 5-வருடங்களுக்கு நடைமுறையிலிருக்கும்.

- **கேரளாவின் கொச்சி துறைமுகத்தில் இந்தியாவின் முதலாவது நகரும் கப்பல் நிறுத்தப்பகுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

  - இது, இந்தியாவில் முதலாவது நகரும் கப்பல் நிறுத்தத் துறைமுகமாகக் கருதப்படுகிறது.

- **கேரளாவின் கண்ணூர் மாவட்டத்தில் பையனூர் பையனூர் அருகே அமைந்துள்ள எலிமாலா இந்திய கப்பற்படை கல்விக் கழகத்தில் இந்திய கப்பல் படையன் மிகப்பெரிய சூரிய சக்தி உலை(3-மெகாவாட்) தொடங்கப்பட்டுள்ளது.**

❖ **கர்நாடகா அரசாங்கம் வெகுவிரைவில் வாழ்க்கை அறிவியல் பூங்காவிற்கான அடிக்கல் நாட்டவுள்ளது.**

❖ **ஜம்மு மற்றும் காஷ்மீர் முழுவதும் சாலைகளை மேம்படுத்துவற்கான "Macadamisation Program" என்ற திட்டத்தை துணைநிலை ஆளுநர் கிரிஷ். சுந்திர மூர்மு அறிவித்துள்ளார்.**

❖ **மூன்று தலைநகரங்களைப் பெற்று இந்தியாவில் முதல் மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் வந்துள்ளது.**

- அதன்படி, சட்டத்துறை தலைநகராக அமராவதியும், செயல்முறை தலைநகராக விசாகப்பட்டினமும் மற்றும் நீதித்துறைத் தலைநகராக கர்னூலும் அமையவுள்ளது.
- ஆளுநர் மற்றும் முதலமைச்சரின் அலுவலகங்கள் விசாகப்பட்டினத்தில் செயல்படும்.
- மாநில சட்டசபைச் செயல்பாடுகள் அமராவதியில் நடைபெறும்.
- உயர்நீதிமன்றம் கர்னூலில் அமையவுள்ளது.

❖ **மஹாராஷ்டிர மாநிலம் கூகுளுடன் இணைந்து கல்விக்காக கூகுள் வகுப்பறையை ஏற்படுத்திய முதல் மாநிலமாக இந்தியாவில் திகழ்கிறது.**

❖ **மஹாராஷ்டிர மாநிலம் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை வர்த்தகம் செய்து அவர்களுக்கு உதவுவதற்காக 'Mag Net' திட்டத்தைத் தொடங்கியுள்ளது.**

❖ **இந்திய அறிவியல் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது நகரும் COVID-19 சோதனை ஆய்வகம் பெங்களூரில் தொடங்கப்பட்டுள்ளது.**

❖ **இந்தியாவின் ஒட்டுமொத்த இரும்புத் தொழில்களின் மையமாக ஒடிசா மாநிலத்தை ஏற்ப்படுத்துவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.**

❖ **தெண்டு இலை (Tendu leaf) சேகரிப்பவர்களுக்காக ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை சத்தீஸ்கர் அரசாங்கம் தொடங்கியுள்ளது.**

- மாநிலத்தில் தெண்டு இலை சேகரிப்பவர்களுக்கான "Shaheed Mahendra Karma Tendupatta Sangrahak Samajik Suraksha Yojana" என்ற ஒரு சமூக பாதுகாப்புத் திட்டத்தை அம்மாநில முதல்வர் பூபேஷ் பாகல் தொடங்கி வைத்துள்ளார்.
- தெண்டு இலைகள் பீடி தயாரிப்பதற்காக பயன்படுகின்றன. இவ்வித தெண்டு இலைகளை காடு மற்றும் மலைகளில் வசிப்போர் சேகரித்து பீடி செய்யப் பயன்படுத்துகின்றனர்.

❖ **குவாலியர் - சாம்பல் துரிதவழிக்கு முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

❖ **மத்திய ஆட்சேர்ப்பு முகமையால் (National Recruitment Agency – NRA) நடத்தப்படும் பொது தகுதித் தேர்வில் (Common Eligibility Test – CET) பெற்ற**

மதிப்பெண்கள் அடிப்படையில் வேலைகள் வழங்கும் முதல் மாநிலமாக மத்தியப் பிரதேசம் திகழ்கிறது.

- ❖ இந்தியாவின் முதலாவது பன்னாட்டு பெண்கள் வர்த்தக மையம் கேரளாவில் அமைக்கப்பட உள்ளது.
- ❖ கேரளாவில் முதலாவது டிராகன்பிளை திருவிழா(Dragonfly Festival) கொண்டாடப்படுகிறது.

APPOLO STUDY CENTRE

# தேசிய நிகழ்வுகள்

❖ **வெட்டுக்கிளி தாக்கி விவசாயப் பயிர்களை அழித்தல்**

- ➢ விவசாயிகளின் எதிரியான வெட்டுக்கிளிகள் ராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் விவசாயப் பயிர்களை பேரளவிற்கு அழித்தப்பின்பு, தற்போது மஹாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் விவசாயப் பயிர்களை அழித்து வருகின்றன.
- ➢ பொதுவாக, இவ்வித வெட்டுக்கிளிகள் மேற்கத்திய மற்றும் மத்திய இந்தியாவின் தனது தாக்குதலைத் தொடுத்து விவசாயப் பயிர்களை அழிக்கின்றன.
- ➢ கடந்த 30-ஆண்டுகளில் நடைபெற்ற வெட்டுக்கிளி தாக்குதலில் இதுவே மிகவும் மோசமானதாகும் என்று தொடர்புடைய மாநில அரசாங்கங்கள் கூறியுள்ளன.

❖ **எல்லைச் சாலைகள் அமைப்பு (Border Roads Organization – BRO)**

- ➢ இந்த அமைப்பு உத்தரகாண்ட் மாநிலத்தில் ரிஷிகேஷ் - தரசு ரோடு தேசிய நெடுஞ்சாலையின் மீது சம்பா நகரம் என்ற அதிக மக்கள்தொகை உள்ள நகரத்திற்கு கீழே 440-மீ நீளமுள்ள ஒரு சுரங்கத்தைக் கட்டி ஒரு புதிய சாதனையை படைத்துள்ளது.
- ➢ சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் MSME-க்கான மத்திய அமைச்சர் நிதின் கட்கரி சர்தாம் பாரியோஜனா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட இந்தச் சாம்பா சுரங்கத்தை காணொளிக்காட்சி மூலமாகத் தொடங்கிவைத்தார்.

❖ **'எனது வாழ்க்கை எனது யோகா' (My Life My Yoga) என்ற காணொளிப் போட்டியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.**

❖ **The Indian Air Force – has performed 3 formations of Su-30MKI, MiG-29 and Jaguar fighter jets along with a flypast of C–130 Transport aircraft on Rajapath in Delhi.**

❖ **மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தகவலின்படி, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் உத்திரவாதத் திட்டத்தின் (MGNREGS) கீழ் வேலைவாய்ப்பு வழங்குவதில் இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட சத்தீஸ்கர் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து ராஜஸ்தான் 2-இடத்தையும் மற்றும் உத்திரப்பிரதேசம் 3-ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.**

❖ **மத்திய அமைச்சர் டாக்டர். ஹர்ஷ் வர்தன் 'ஆயுஷ் சஞ்சீவனி' (AYUSH Sanjivani) என்ற கைபேசி செயலியை தொடக்கி வைத்தார். இச்செயலி, ஆயர்வேதா, யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி-க்கான (AYUSH) மத்திய அமைச்சகம் மற்றும் மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான மத்திய அமைச்சகம் (MEITY) ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கப்பட்டதாகும்.**

- **முதல் முறையாக இந்திய வானிலை ஆராய்ச்சித்துறை (Indian Meteorological Department – IMD) அதன் காலநிலை கணிப்பில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் பகுதிகளான GilgitBaltistan மற்றும் Muzaffarabad பிராந்தியத்தை உள்ளடக்கியுள்ளது.**

- **கல்கரி நிலக்கரி(coking coal) மீதான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் ரஷ்யாவும் கையொப்பமிட்டுள்ளன.**

- **அடல் ஓய்வூதியத்திட்டம் (APY) மே-9,2020ல் அதன் அமலாக்கத்தின் 5-ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இத்திட்டம், அமைப்புசாரா துறையிலுள்ள பணியாளர்களுக்கு அவர்களின் வயதான கால சமூகப் பாதுகாப்பிற்காக 2015ல் தொடங்கப்பட்டது.**

- **இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தையிடல் மேம்பாட்டு கூட்டமைப்பு (Tribal Co-operative Marketing Development Federation of India – TRIFED) மற்றும் வாழுங்கலை அமைப்பு (Art Of Living – AOL) ஆகிய இரண்டும் இணைந்து பழங்குடியினர் தொழில்களை மேம்படுத்துவதற்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.**

- **இந்தியாவின் முதலாவது தேசிய 'செயற்கை நுண்ணறிவு இணைய முகப்பு' (Artificial Inteligence – AI Portal) தொடங்கப்பட்டுள்ளது.**

  - 'www.ai.gov.in' என்று கூறப்படும் இந்தியாவின் தேசிய செயற்கை நுண்ணறிவு இணைய முகப்பை மே-30,2020ல் மின்னணு மற்றும் தகவல்தொழில்நுட்பம், சட்ட மற்றும் நீதி மற்றும் தகவல் தொடர்புகளுக்கான மத்திய அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் தொடங்கி வைத்தார்.

- **விமானம் மூலமான 'வந்தே பாரத் திட்டம்' (Vande Bharat Mission) என்பது கொரானா வைரஸ் அதிகமுள்ள நாடுகளில் வசிக்கும் இந்தியர்களை விமானம் மூலம் இந்தியாவிற்கு கொண்டு வருவதாகும்.**

- **பிரதமர் நரேந்திர மோடி ஒரு சிறப்புப் பொருளாதாரத் தொகுப்பை (Special Economic Package) அறிவித்துள்ளார்.**

  - பிரதமர் நரேந்திர மோடி இந்தியா சுயசார்பு அடைவதற்கான ரூ.20-இலட்சம் கோடி மதிப்புள்ள ஒரு சிறப்பு பொருளாதாரத் தொகுப்பை அறிவித்துள்ளார்.
  - இத்தொகுப்பு, இந்திய GDP –ன் திட்டத்தட்ட 10%க்குச் சமமாகும்.

- **பிந்தைய 1980-களில் இராமாணந்த சாகரால் எடுக்கப்பட்ட இராமாயண காவியத்தை இதுவரை ஒட்டுமொத்த உலகில் ஒரு பொழுபோக்கு அம்சமாக மிக அதிகமான மக்கள் கண்டுகளித்துள்ளனர் என்பது ஒரு உலகப் பதிவு மற்றும் சாதனையாகும்.**

  - ஏப்ரல்-16,2020வரை இந்த இராமாயண காவியத்தை உலகம் முழுவதும் 7.7-கோடி மக்கள் கண்டுகளித்துள்ளனர்.
  - இதற்கு முன்பு 1.96-கோடி மக்கள் பார்த்து இரசித்த "Game of Thrones" என்பது உலகச் சாதனையாக இருந்தது.

- **அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக்கான கவுன்சில் (Council of Scientfic and Industrial Research – CSIR) கிசான் சபா செயலியை (Kisan Sabha App) தொடங்கியுள்ளது. இந்தச் செயலி விவசாயிகளை குறிப்பாக பொருட்கள் விநியோகத்தில் இணைக்கக்கூடிய ஒன்றாகும்.**

- **ஆறு இந்திய நகரங்கள் குப்பையில்லா நகரங்களாக அறிவிக்கப்பட்டு 5-நட்சத்திர தரத்தைப் பெற்றுள்ளன.**

  - வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கூற்றுப்படி, மைசூர், அம்பிகாவூர், ராஜ்கோட், சூரத், நாவி மும்பை மற்றும் இந்தூர் ஆகிய 6-நகரங்கள் குப்பையில்லா நகரங்கள் என்று அறிவிக்கப்பட்டு 5-நட்சத்திர தரத்தைப் பெற்றுள்ளன.

- **மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் சுற்றுச்சூழல் ரீதியாக உணர்வுப்பூர்வப் பகுதிகள் (Ecologically Sensitive Areas – ESA)**

  - மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகள் தொடர்பான சுற்றுச்சூழல் ரீதியான உணர்வுப்பூர்வ அறிவிப்பு தொடர்பான பிரச்சினைகளை விவாதிப்பதற்கு ஒரு காணொளிக்காட்சி மூலமாக 6-மாநில முதல்வர்களுடன் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான மத்திய அமைச்சர் கலந்துரையாடினார்.
  - அந்த 6-மாநிலங்களாவன, கேரளா, கர்நாடகா, கோவா, மஹாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழ்நாடு.

- **ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை 29% உயர்ந்துள்ளது. ஆசியாவில் 2015ல் 523-சிங்கங்கள் இருந்தன மற்றும் அவற்றின் எண்ணிக்கை 2020ல் 674ஆக உயர்ந்தது, அதாவது 29% உயர்ந்துள்ளது.**

  - ஆனால் இந்தியாவில் சிங்கங்களின் எண்ணிக்கை 36% உயர்ந்துள்ளது.

- **இந்திய சக்திப் பரிமாற்றம் (Indian Energy Exchange) என்ற அமைப்பு அதன் முதலாவது வாயு வர்த்தக மேடையைத் தொடங்கியுள்ளது.**

  - இதை, பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயுவிற்கான மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்.
  - இந்திய வாயுப் பரிமாற்றம் என்பது ஆன்லைன் வர்த்தகத்தில் செயல்படும் அமைப்பாகும் மற்றும் அது மானிய விலையில் ஜூலை-2020ல் தொடங்கப்பட உள்ளது.

- **இந்தியாவில் நித்தி ஆயோக் கார்பன் குறைப்புப் போக்குவரத்துத் (Decarbonising Transport) திட்டத்தைத் தொடங்கவுள்ளது.**

  - நாட்டின் போக்குவரத்தில் கார்பன்-டை-ஆக்ஸைடு-ன் உமிழ்வைக் குறைப்பதற்காக பன்னாட்டு போக்குவரத்து அமைப்புடன் (International Transport Forum – ITF) உடன் நித்தி ஆயோக் (NITI Aayog) இணைந்து இத்திட்டத்தை அமல்படுத்துகிறது.

➢ இந்தியாவின் கார்பன் குறைப்புப் போக்குவரத்து முயற்சி என்பது வளர்ச்சி பொருளாதாரத்தில் கார்பன் குறைப்புப் போக்குவரத்தின் (Decarbonising Transport in Emergin Economics – DTEE) ஒரு பகுதியாகும்.

❖ **IIT-சென்னை ஆய்வாளர்கள் ஒடிசாவின் சிலிக்கா ஏரியில் இரவாடி டால்பின் எண்ணிக்கையை 3-மடங்காக்க உதவும் அகழி முறைமையைப் (Dredging Methodology) பயன்படுத்துகின்றனர்.**

➢ சிலிக்கா ஏரி என்பது, ஆசியாவின் மிகப்பெரிய மற்றும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய நீர்நிலை அமைப்பாகும் மற்றும் அதில் அதிக எண்ணிக்கையுள்ள கொடூரமான விலங்குகளும், பூச்சிகளும் மற்றும் தாவரங்களும் உள்ளன.

❖ **மத்திய கலாச்சார அமைச்சகம் ஜுன்-28 முதல் ஜுலை-12 வரை 'சங்கல்ப் பர்வா' (Sangal Parva) கொண்டாடி வருகிறது. இம்முயற்சி, ஒவ்வொரு அலுவலக வளாகத்திலும் குறைந்தது 5-மரக்கன்றுகளை நடவேண்டும் என்பதற்காக தொடங்கப்பட்டுள்ளது.**

❖ **இந்திய இரயில்வே, தனது மேற்கத்திய இரயில்வேயில் முதலாவது இரண்டடுக்கு மின்சார இரயிலை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இது உலகின் முதலாவது மிகப்பெரிய சாதனையாகும் மற்றும் இது பசுமை இந்தியாவின் விருப்பத் திட்டங்களை மேம்படுத்துமென்று கருதப்படுகிறது.**

❖ **பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் சீனச் செயலிகளைத் தடை செய்தபிறகு பொறியாளர்கள் மற்றும் புதிய தொழில்களுக்கு ஆத்மநிர்வார் புத்தாக்க சவாலை (Aatmanirbhar Innovation Challenge) சவாலை அறிவித்துள்ளார்.**

➢ பொறியாளர்கள் மற்றும் புதிய தொழில் அமைப்புக்கள் இந்திய செயலிகளில் உலகத் தரத்தை ஏற்படுத்துவதற்கு வசதியாக ஆத்மநிர்வார் பாரத் செயலி புத்தாக்க சவால் (Aatmanirbhar Bharath App Innovation Challenge) என்பதைத் தொடங்கி வைத்தார்.

➢ இத்திட்டம், மின்னணு மற்றும் தகவல்தொழில்நுட்ப மத்திய அமைச்சகத்தால், அடல் புத்தாக்கத் திட்டம் மற்றும் நித்தி ஆயோக்-ன் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது.

❖ **மனிதவள மேம்பாட்டிற்கான மத்திய அமைச்சகம் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திற்கான மத்திய அமைச்சகம் ஆகிய இரண்டும் இணைந்து மருந்து கண்டுபிடிப்பு ஹேக்கத்தான்-2020ஐ (Drug Discovery Hackathaon - DDH-2020) தொடங்கியுள்ளன.**

❖ **கோவாக்சின் (COVAXIN) என பொதுவாக அறியப்படும் COVID–19 தடுப்பூசி BBV152.**

➢ இத்தடுப்பூசியை உருவாக்குவதற்கு முதல்கட்ட மற்றும் இரண்டாவது கட்டத்திற்கான 12-நிறுவனங்களை தேர்வுசெய்து, ஹைதராபாத்தில் அமைந்துள்ள பாரத் பயோடெக் (Bharath Bio-tec)அமைப்புடன் இணைந்து

மருத்துவ ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் (ICMR) முயற்சி மேற்கொண்டுள்ளது.

- ❖ **சர்தார் பட்டேல் கோவிட் கவன மையம் மற்றும் மருத்துவமனை(Sardar Pattel COVID Care Centre And Hospitals – SPCCCH) என்ற COVID-19 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனை புதுடெல்லியில் சமீபத்தில் தொடங்கப்பட்டது.**
    - ➢ இதில், 10,000 படுக்கை கொண்ட வசதி உள்ளது மற்றும் இது உலகின் மிகப்பெரிய C0VID-19 சிகிச்சை மற்றும் கவன மையமாகும்.
    - ➢ இந்த மருத்துவமனை டெல்லி துணைநிலை ஆளுநர் அனில் வாய்சால் என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது.

- ❖ **இந்தியாவால் கிழக்கத்திய நேபாலில் கட்டப்பட்ட சமஸ்கிருத வித்தியாலயா சமீபத்தில் காணொளிக்காட்சி மூலமாக தொடங்கி வைக்கப்பட்டது.**

- ❖ **சமஸ்கிருத சப்தகி (Sanskirt Saptahiki)**
    - ➢ அகில இந்திய ரேடியாவின் F.M செய்தி அலைவரிசை, சமஸ்கிருத சப்தகி என்று சமஸ்கிருத மொழியில் பெயரிடப்பட்ட அதன் முதலாவது செய்தித் திட்ட ஒளிபரப்பு தொடங்கப்பட்டுள்ளது.

- ❖ **முதலீட்டு மேலாளர் வாரியத்திற்கான முதலாவது கட்டுமான முதலீட்டு பொறுப்புக் கழகக் குழு-வை(InvIT) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையகம்(NHAI) அமைக்கவுள்ளது.**
    - ➢ இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையகம் (NHAI), இந்தியாவின் முதலாவது அரசு அல்லது பகுதி அரசு பொருப்புக் கழகமான கட்டுமான முதலீட்டு பொறுப்புக் கழகத்தை (Infrastructure Investment Trust – InvIT) அமைப்பதற்கு முடிவு செய்துள்ளது.

- ❖ **இந்தியாவின் முதலாவது NPNT (No Permission No Takeoff) என்ற Complaint Drone Flight வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. இதை, மும்பையிலுள்ள Quidich Innovation Labs Private Ltd., என்ற நிறுவனம் வெற்றிகரமாக முடித்ததை அறிவித்துள்ளது.**

- ❖ **முன்னாள் இந்தியப் பிரதமர் P.V. நரசிம்மராவை பெருமைப்படுத்தும் விதத்தில் தபால்வில்லை வெளியிடப்படும் என்று மத்திய அமைச்சர் கூறியுள்ளார்.**
    - ➢ முன்னாள் பிரதமர் P.V. நரசிம்மராவின் 100-வது பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் மத்திய அரசால் தபால்வில்லை வெகுவிரைவில் வெளியிடப்படும் என்று மத்திய அமைச்சர் ஜி. கிசான்ரெட்டி கூறியுள்ளார்.
    - ➢ P.V. நரசிம்மராவ் 1991-லிருந்து 1996-வரை இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக சேவைபுரிந்தவர் ஆவார்.

- அவர், ‘இந்தியப் பொருளாதார சீர்திருத்தங்களின் தந்தை’ என மதிக்கப்படுகிறார்.

- **எண்ணியல் திறன்களுடன் இந்திய இளைஞர்களை அதிகாரப்படுத்துவதற்கு மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன், தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (National Skill Development Corporation - NSDC) இணைந்துள்ளது.**

- **தூய ஆற்றலுக்கான இந்திய – அமெரிக்க ஒத்துழைப்பு**

  - தூய ஆற்றல் மேம்பாட்டுக்கான இந்திய – அமெரிக்க ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு ஜுலை-7,2020ல் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான மத்திய அமைச்சகமும் (Ministry of New And Renewable Energy – MNRE), பன்னாட்டு மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமையும் (US Agency for International Development – US AID) இணைந்துள்ளன.

- **சபாஹர் இரயில் திட்டத்திலிருந்து (Chabahar Rail Project) இந்தியாவை ஈரான் விலக்கியுள்ளது.**

  - ஆப்கானிஸ்தான் வழியாக சபஹர் துமைமுகத்திலிருந்து ஜஹிடன்-க்கு செல்லும் இரயில் வழியை உள்ளடக்கிய ஜபஹர்-இரயில் திட்டத்திலிருந்து இந்தியாவை ஈரான் நீக்கியுள்ளது.

- **மாணவர்களுக்கான “மனோதர்பன்” (Manodarpan) திட்டத்தை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் தொடங்கியுள்ளார்.**

- **மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம், எண்ணியல் (அ) ஆன்லைன் கல்விக்கான ‘பிராக்கியாதா’ (Pragyata) வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.**

  - அந்த வழிகாட்டுதலின்படி, ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு வகுப்பு 30-நிமிடங்களுக்கு மேல் இருக்கக் கூடாது.
  - வகுப்பு 1 முதல் 8 வரை 30-லிருந்து 45-நிமிடங்கள் வரையுள்ள 2-ஆன்லைன் வகுப்புகளும், வகுப்பு 9-லிருந்து 12-வரை 4-வகுப்புகளும் நடத்தப்பட வேண்டும்.

- **இந்திய இரயில்வே 2030-வாக்கில் பசுமை இரயில்வேயாக (Green Railway) வருவதற்கு திட்டமிட்டுள்ளது.**

- **இந்தியாவின் முதலாவது பொது மின்சார வாகன (Electric Vehicle) மின்னேற்றும் வளாகம் புதுடெல்லியிலுள்ள செம்ஸ்போர்டு மன்றத்தில் தொடங்கிவைக்கப்பட்டது.**

- **மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர், இரமேஷ் பொக்கிரியால் நிஷான் என்பவரால் ஆந்திரப்பிரதேசத்தில் முதலாவது ஆன்லைன் ‘நிஷ்தா’ (Nishtha) திட்டம் தொடங்கப்பட்டது.**

  - இத்திட்டம் ஆந்திரப்பிரதேசத்தின் 1200 மிக முக்கிய ஆதார நபர்களுக்காக (Key Resource Person) தொடங்கப்பட்டுள்ளது.

- COVID-19 பரவுகின்ற காரணத்தால் இவ்விதத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

❖ **இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே உருவாக்கிய நிமோனியா தடுப்பூசிக்கு (Pneumonia Vaccine) தடுப்பூசிக்கு இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் (Drug Controler General of India - DCGI) ஒப்புதல் அளித்துள்ளார்.**

- முழுவதும் இந்திய நாட்டிற்குள்ளேயே உருவாக்கப்பட்ட 'Pneumococcal Polysaccharide Conjugate Vaccine' (Pneumonia Vaccine) என்பது இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- இது, மிகவும் அதிகமாக குழந்தைகளிடையே பரவக்கூடிய "Streptococcus Pneumonia" பரவக்கூடிய நோயிற்கு தடுப்பூசியாக பயன்படுத்தப்படுகிறது.

❖ **யுனிசெப் இந்தியா (UNICEF INDIA), மறுபிரவேச இயக்கத்திற்காக (Reimagine Campaign) வர்த்தக மற்றும் தொழிலுக்கான இந்திய கழகங்களின் கூட்டமைப்புடன் (Federation of Indian Chambers of Commerce and Industry – FICCI) இணைந்துள்ளது.**

- யுனிசெப்-ன் மறுபிரவேச இயக்கத்தை மேம்படுத்துவதற்கு வர்த்தக மற்றும் தொழிலுக்கான இந்திய கழகங்களின் கூட்டமைப்பின் (FICCI) சமூகப் பொருளாதார மேம்பாட்டு அமைப்புடன் (Socio–Economic Development Foundation – SEDF) யுனிசெப் இந்தியா இணைந்துள்ளது.
- COVID-19 தாக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்தை இவ்வியக்கம் பெற்றுள்ளது.

❖ **ஸ்ரீபத்மநாபசாமி கோயில் தீர்ப்பு: கேரளக் கோயில் நிர்வாகத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானக் குடும்பத்தின் உரிமைகளை உச்சநீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது.**

- இந்தத் தீர்ப்பு, நாட்டின் செல்வச் செழிப்புமிக்க கோயில்களில் ஒன்றான ஸ்ரீபத்மநாபசாமி கோயிலின் நிர்வாகம் மற்றும் மேலாண்மை மீதான மிக நீண்ட காலச் சச்சரவை தெளிவாக்கியுள்ளது.

❖ **2005 லிருந்து 2016 வரை 273-மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீண்டுள்ள உலகின் மிக அதிகமான வறுமைக்குறைப்பை இந்தியா பதிவு செய்துள்ளது என்று ஆக்ஸ்போர்டின் ஐ.நா. ஆய்வு கூறுகிறது.**

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவுடன் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு திட்டத்தால் (Oxford Poverty and Human Development Initiative – OPHI) நடத்தப்பட்ட ஓர் ஆய்விற்கிணங்க, 2005-2006 மற்றும் 2015-2016 ஆகிய ஆண்டுகளுக்கிடையே 10-வருடங்களில் பல்வேறு வகையான வறுமைத் தன்மையிலிருந்து திட்டத்தட்ட 273-மில்லியன் இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

❖ **'கனவுக்குத் துணிவு 2.0' (Dare to Dream 2.0)**

- முன்னாள் இந்திய ஜனாதிபதி மற்றும் மிகச்சிறந்த விஞ்ஞானி டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் ஐந்தாவது நினைவுதினமான ஜுலை-27, 2020ல் 'கனவுக்குத் துணிவு 2.0' என்ற புத்தாக்கப் போட்டியைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (Defence Research and Development Organization – DRDO) தொடங்கியுள்ளது.

❖ **KRC Net**

- இந்திய அரசாங்கத்தின் எண்ணியல் இந்தியா திட்டத்தின்கீழ் ஒரு உலகத்தரம் வாய்ந்த 'அறிவு ஆதார மையம்' இணைப்பணியை (Knowldege Resource Center Network – KRC Net) புவி அறிவியலுக்கான மத்திய அமைச்சகம் தொடங்கியுள்ளது.

❖ **பாம்பே பறக்கும் மன்றம் (Bombay Flying Club) இந்தியாவின் முதலாவது DGCA ஒப்புதலித்த ட்ரோன்-பயிற்சிப் பள்ளியாக முன்வந்துள்ளது.**

❖ **ஹரியானாவின் சோஹ்னா அருகிலுள்ள இரயில்வேயின் 'Western Dedicated Frieght Corridor' மீதான ஆரவள்ளி மலைகளிடையே உலகின் முதலாவது மின்படுத்தப்பட்ட இரண்டடுக்கு சுரங்கத்தை இந்திய இரயில்வே கட்டி வருகிறது.**

❖ **வங்காளதேசத்திற்கு 10-ற்கும் மேற்பட்ட அகன்ற வழி இரயில்வே பெட்டிகளை இந்தியா வழங்குகிறது.**

❖ **இந்திய இராணுவ வீரர்களுக்கான யுத்த நினைவுச் சின்னத்தை வங்காளதேசம் கட்டவுள்ளது.**

- பாகிஸ்தானிடமிருந்து சுதரந்திரம் பெறுவதற்காக வங்கதேச போராட்டத்தின்போது அந்த யுத்தத்தில் 1971-ல் உயிர்த்தியாகம் செய்த இந்திய இராணுவ வீரர்களுக்கான நினைவுச் சின்னத்தை வங்கதேச நாடு ஏற்படுத்தும்.

❖ **மத்திய விவசாயத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், காணொளிக்காட்சி மூலமாக குஜராத்தின் ஆனந்த் என்ற இடத்திலுள்ள 'உலகத்தர வளர்ப்புத் தேன்நிலை சோதனை ஆய்வகத்தை' (World Class State of Art Honey Testing Labourity) தொடங்கி வைத்தார்.**

❖ **இந்தியாவில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்-2019 நடைமுறைக்கு வருகிறது.**

- இந்தியாவில் ஜுலை-20,2020லிருந்து 2019ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.
- இச்சட்டம், 1986ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்கு பதிலாக அமைகிறது.
- இப்புதியச் சட்டம், பாரம்பரிய விற்பனையாளர்கள் மற்றும் புதிய முறையான மின்னணு வர்த்தகம் போன்றவற்றிலிருந்து வாங்குவோரை பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- **அறிவியல் அடிப்படையிலான இலக்குகளை அடைவதற்கு (Science Based Targets initiative – SBTi) இந்தியாவில் முதல் துறைமுகமாகவும் உலகில் 7-வது துறைமுகமாகவும் அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனம் (Adani Ports and Special Economic Zone Limited – APSEZ) முன்வந்துள்ளது.**

- **விமானப் போக்குவரத்து மீதான வெளிநாட்டு நேரடி முதலீட்டு (FDI) விதிமுறைகளில் உள்ள மாற்றங்களை இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. அதன்படி ஏர் இந்தியாவின் 100% பங்குகளை சொந்தப்படுத்த வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

- **இந்தியாவின் முதல் விவாசாயி இரயில் (India's First Kissan Rail)**

  - இது, விவசாயிகளின் எல்லா வகைக் காய்கள் மற்றும் பழவகைகளை கொண்டு செல்லும் முதலாவது சேவை இரயில் ஆகும்.
  - முதலில் அழுகக்கூடிய பொருள்களுக்காக மட்டுமே இச்சேவை தொடங்கப்பட்டது.
  - இந்த இரயில், மஹாராஷ்டிராவிலுள்ள தியோலாலி மற்றும் பீகாரிலுள்ள தனப்பூர் இடையே 1519-கி.மீ தூரத்திற்கு 32-மணி நேரம் இயக்கப்படுகிறது.

- **இந்தியாவில் முதல்முறையாக புதிய வழித்தட கட்டுமான (New Track Construction – NTC) இயந்திரத்தை இரயில்வே பயன்படுத்துகிறது.**

  - Dedicated Freight Corridors முழுவதும் இவ்வித இயந்திரங்களால் கட்டப்படுகிறது.
  - இவ்வித திட்டங்கள் 2022-வாக்கில் அமல்படுத்தப்படும்.

- **உத்தரகாண்ட் மாநிலத்தின் உத்தரகாசி மாவட்டத்தில் பைரான்காட்டி பாலத்தின் அருகிலுள்ள லங்கா இடத்தில் இந்தியாவின் முதலாவது பனிச்சிறுத்தை பாதுகாப்பு மையம் அமைக்கப்பட உள்ளது.**

- **'சுனாமி தயார் (Tsunami Ready)' – ஒடிசா கிராமங்கள்**

  - சுனாமியை எதிர்கொள்ள தங்களின் ஒட்டுமொத்த தயாரிப்பிற்கான 'சுனாமி தயார்' என்ற ஒடிசாவின் கிராமங்களான வெட்கட்ராய்பூர் மற்றும் நோலியாசாகி ஆகியவற்றை ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், மற்றும் கலாச்சார அமைப்பு (United Nations Educational, Scientific and Cultural Organization – UNESCO) அங்கீகரித்துள்ளது.

- **'வித்யார்த்தி விக்கியான் மாந்தன் 2020-2021' என்ற தேசிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.**

  - வகுப்பு 6 முதல் 11 வரை உள்ள பள்ளி மாணவர்களிடையே அறிவியலைப் பிரபலப் படுத்துவதற்கு துவங்கப்பட்டுள்ளதே இந்த தேசிய திட்டமாகும்.

- **சென்னை மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கிடையேயான (CANI Project) இணைப்பிற்காக முதலாவது கடலுக்கடியில் ஏற்படுத்திய 'ஆப்டிகல் பைபர் கேபிளை (Optical Fibre Cable - OFC) பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்து நாட்டிற்கு அர்ப்பணித்தார்.**

- **தொடர்ந்து 7-முறை சுதந்திரதின உரையாறறிய பெருமையை பெற்ற முதல் காங்கிரஸ் அல்லாத பிரதமராக நரேந்திர மோடி முன்வந்துள்ளார்.**

  - பிரதமர் நரேந்திர மோடி அடல் பிஹாரி வாஜ்பாயைவிட நீண்டகாலம் பணிபுரிந்த காங்கிரஸ் அல்லாத பிரதமராவார்.

- **'புதிய தேசிய கணினி பாதுகாப்பு கொள்கை – 2020'**

  - பிரதமர் நரேந்திர மோடி தனது 74-வது சுதந்திர கொண்டாட்ட உரையின்போது இப்புதிய கொள்கையை தொடங்குவதாக அறிவித்தார்.
  - 2020-இறுதி வாக்கில் இந்தியாவில் பாதுகாப்பான கணினி எல்லையை உருவாக்க இக்கொள்கை நோக்கம் கொண்டுள்ளது.

- **'ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டம்' (One Sun One World One Grid) என்ற திட்டம்**

  - பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின உரையில் மெகா திட்டமான 'ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டம்' என்ற திட்டத்தை குறிப்பிட்டுள்ளார்.
  - இது, நாடுகளுக்கிடையேயான் சூரியசக்தியை விநியோகிக்கும் மின்சார கட்ட திட்டமாகும்.
  - முதன்முதலில் இதற்கான எண்ணம் 2018ல் பிரதமர் நரேந்திர மோடியால் பன்னாட்டு சூரியசக்தி கூட்டு (International Solar Alliance – ISA) நடைபெற்றபோது உருவானதாகும்.

- **கௌஹாத்தி மற்றும் வடக்கு கௌஹாத்தியை இணைக்கும் பிரம்மபுத்திரா ஆற்றின் மீதான இந்தியாவின் மீதான 'மிக நீண்ட ஆற்று கயிறுவழி' (Longest River Ropeway) தொடங்கப்பட்டது.**

- **அடுத்த ஆயிரம் நாட்களில் ஆப்டிகல் பைபர் மூலம் அனைத்துக் கிராமங்களும் இணைக்கப்பட உள்ளன என்று பிரதமர் அறிவித்துள்ளார்.**

  - இத்திட்டத்தின்கீழ், இந்தியாவில் எதிர்வரும் 1000-நாட்களில் ஆப்டிகல் பைபர் இணையப்பணி-வுடன் 6-லட்சத்திற்கும் அதிகமான கிராமங்கள் இணைக்**கப்படும்.**

- **கலாச்சாரத்திற்கான மத்திய அமைச்சகம் இந்திய தொல்லியல் ஆய்வு சர்வே-யின் (ASI) ஏழு புதிய வட்டங்களை உருவாக்கி நாடுமுழுவதும் மொத்தம் 36-வட்டங்களாக உயர்த்தியுள்ளது.**

  - இப்புதிய வட்டங்கள் ஜபல்பூர்(மத்தியப்பிரதேசம்), திருச்சி(தமிழ்நாடு), ஜான்சி மற்றும் மீரட்(உத்திரப்பிரதேசம்), ஹம்பி(கர்நாடகா), ராய்கஞ்ச்(மேற்குவங்கம்) மற்றும் ராஜ்கோட்(குஜராத்) போன்றவையாகும்.

- சமூக நீதிக்கான மத்திய அமைச்சகம் **'KIRAN'** என்ற மனநல சுகாதார மறுவாழ்வு உதவிச் சேவையை தொடங்கியுள்ளது.

- இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும், பரஸ்பரமாக ஒப்புக்கொண்ட திட்ட அமலாக்கத்தை ஆய்வு செய்வதற்கு முதலாவது மெய்நிகர் தேசிய ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை கூட்டியுள்ளது.

- பல்வேறு அரசாங்க மற்றும் வங்கி வேலைகளுக்கான பொதுத்தேர்வை நடத்துவதற்கு தேசிய ஆள்சேர்ப்பு முகமையை **(National Recruitment Agency - NRA)** மத்திய அரசாங்கம் அமைக்கவுள்ளது.
  - மத்திய மற்றும் மாநில அரசுகளின் வங்கிகளில் வேலைக்கான பொது தகுதித் தேர்வை (Common Eligibility Test - CET) நடத்துவதற்கு இந்த தேசிய ஆள்சேர்ப்பு முகைமை (NRA) ஒரு பிரதான முகமையாகத் திகழும்.

APPOLO STUDY CENTRE

# பன்னாட்டு நிகழ்வுகள்

**ஐக்கிய நாடுகள்:**

- **ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரம் சாராத உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**
    - நிரந்தரம் சாராத ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலின் (United Nations Security Council – UNSC) ஐந்து இடங்களுக்கான தேர்தலில் 192-வாக்குகளில் 184-வாக்குகளைப் பெற்று இந்தியா வென்று அதில் ஒரு உறுப்பினராக உள்ளது.
    - அதன் 2-வருட பதவிக்காலம் ஜனவரி-1, 2021-லிருந்து தொடங்குகிறது. எனவே, ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரம் சாராத உறுப்பினராக இரண்டு வருடங்களுக்கு இந்தியா பதவி வகிக்கும்.
    - இக்கவுன்சிலின் நிரந்தரம் சாராத உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது 8-வது முறையாகும்.

- **ஐக்கிய நாடு சபையின் முடிவிற்கிணங்க, சக்தி வாய்ந்த 15-நாடுகள் இடம் பெற்றுள்ள ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தலைவராக ஆகஸ்ட்,2021ம் மாதத்திற்காக இந்தியா தலைவராக செயல்படும்.**

- **வறுமை ஒழிப்பிற்கான கூட்டு (Alliance for Poverty Eradication)**
    - ஐ.நா. பொதுசபை தலைவர் டிச்சானி முகம்மது பாண்டே ஜுன்-30,2020ல் முறைப்படியாக 'வறுமை ஒழிப்பிற்கான கூட்டை' தொடங்கி வைத்தார்.
    - இந்தியா அக்கூட்டில் ஒரு நிறுவன உறுப்பினராக இணைந்துள்ளது.

**உலக சுகாதார அமைப்பு (WHO)**

- **உலக சுகாதார அமைப்பின் (WHO) தலைமையை மே-2020ல் ஜப்பான் நிறைவு செய்த பிறகு, அத்தலைமைப் பொறுப்பை இந்தியா வகிக்கும் மற்றும் அப்பொறுப்பு மூன்று வருடங்களுக்கு தொடரும்.**

- **சிற்றம்மை ஒழிப்பின் 40-ஆண்டு நிறைவையொட்டி ஒரு பெருமை மிகுந்த தபால்வில்லையை உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐக்கிய நாடுகள் (UN) தபால் முகைமை ஆகிய இரண்டும் இணைந்து வெளியிட்டுள்ளன.**

- **உலக சுகாதார அமைப்புடனான (WHO) உறவை அமெரிக்கா ரத்து செய்து சீனாவுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்கிறது.**

- **தட்டம்மை மற்றும் அம்மை இல்லாத நாடுகளாக ஸ்ரீலங்கா மற்றும் மாலத்தீவு ஆகிய இரண்டு நாடுகளை உலக சுகாதார அமைப்பு(WHO) அறிவித்துள்ளது.**

**COVID - 19**

❖ **பன்னாட்டு ஆற்றல் முகமையின் (International Energy Agency – IEA) உலக ஆற்றல் ஆய்வு 2020-ன்படி, COVID–19-க்கிணங்க இந்தியாவின் ஆற்றல் தேவை 30% குறைந்துள்ளது. இந்த அறிக்கை, 2020ஆம் ஆண்டின் திட்டத்திட்ட 100-நாட்களின் பகுத்தாய்வை அடிப்படையாகக் கொண்டதாகும்.**

❖ **ஐரோப்பிய யூனியன் COVID-19 மீட்பு நிதியாக 750-யூரோவை முன்மொழிந்துள்ளது.**

❖ **'COVID-19' தொழில்நுட்ப அணுகல் குளம் (COVID-19 Technology Access Pool – C-TAP) என்று பெயரிடப்பட்ட ஒரு பன்னாட்டுத் திட்டத்தை உலக சுகாதார அமைப்பு (WHO) தொடங்கியுள்ளது.**

➢ உலக சுகாதார சச்சரவை போக்குவதற்கு தடுப்பூசிகள், மருந்துகள் மற்றும் இதர கருவிகளின் பொது உடமை மற்றும் உரிமைக்காக உலக சுகாதார அமைப்பிடம் குறைந்தது 37-நாடுகள் ஒன்றிணைந்து விண்ணப்பித்தப்பின்பு இத்திட்டம் தொடங்கப்பட்டது.

❖ **சாகர் திட்டத்தின்கீழ் COVID-19 தொடர்பான தேவையான மருந்துகளை வழங்குவதற்கு இந்திய கப்பற்படை கப்பல் 'கேசரி' செய்செல்ஸ்-ல் உள்ள விக்டோரியா துறைமுகத்தை அடைந்தது.**

➢ இந்த சாகர் திட்டம், COVID-19 தொடர்பான அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதற்கு இந்திய கப்பற்படையால் தொடங்கப்பட்டது.

**மற்றவை:**

❖ **இந்தியா – ஆசியான்(ASEAN) இடையேயான 3-வது இளைஞர் பேச்சுவார்த்தை ஜுன்-8 முதல் 10-வரை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தை மெய்நிகர் வழியில் நடத்தப்பட்டது. திறன்வளர்ச்சி, இளமைஆற்றல் மற்றும் கல்வி போன்றவற்றில் ஒத்துழைப்பை நல்குவதற்கு இந்தியா மற்றும் ஆசியா முடிவெடுத்துள்ளன.**

❖ **செயற்கை நுண்ணறிவின் உலகக் கூட்டமைப்பில் (Global Partnership of Artificial Intelligence – GPAI) ஒரு நிறுவன உறுப்பினராக இந்தியா இணைந்துள்ளது.**

➢ Gee-Pay (or) GPAI என்ற அமைப்பு செயற்கை நுண்ணறிவின் மேம்பாட்டை பல வழிகளில் வழிகாட்டுவதாக அமைகிறது.

❖ **பன்னாட்டு மதச் சுதந்திரம் மீதான அமெரிக்க ஆணையம் (US Commission on International Religious Freedom – US CIRF) தனது 2020ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையில், குறிப்பிட்ட தொடர்புடைய நாட்டின் (Country of Particular Concern -CPC) அட்டவணைக்குள் குறிப்பிட்டு இந்திய அந்தஸ்தை தாழ்த்தியுள்ளது.**

❖ **இரவீந்திரநாத் தாகூரின் 159-வது நினைவு நாளில் அவரின் பெயருக்குப் பின்பு ஒரு தெருவிற்கு இஸ்ரேல் பெயர் வைத்துள்ளது.**

- ❖ உலகிலுள்ள ஏழு செல்வந்த நாடுகளின் (G-7) குழுத் தலைவர்கள் செயற்கை நுண்ணறிவின் மீதான உலகக் கூட்டாண்மை அமைத்துள்ளனர்.

- ❖ வான்வெளி பாதுகாப்பு ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகவுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்கீழ், உறுப்பு நாடுகள் எவ்வித ஆயுதமில்லாத பாதுகாப்பு விமானங்களை பங்கேற்பு(உறுப்பினர்) நாடுகளின் ஒட்டுமொத்த எல்லையின்மீதும் இயக்கலாம்.

- ❖ இந்தியாவுடனான எல்லைப்பகுதி இடையேயான லிபுலேக், களபாணி மற்றும் லிம்பியாதுரா வரிசையை உள்ளடக்கி ஒரு புதிய வரைபடத்திற்கு நேபால் ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ சவூதி அரேபியா மதிப்புக்கூட்டு வரியை (VAT) 5% லிருந்து 15% மாக உயர்த்த உள்ளது.

- ❖ ஈரானின் தேசிய நாணயம் ரியால்-க்கு பதிலாக டோமன் (Toman) என்று மாற்றப்படும். அதன்படி, ஒரு டோமன் 10,000-ரியாலுக்குச் சமமாகும்.

- ❖ இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் காணொளிக்காட்சி மூலமாக புதிய மேம்பாட்டு வங்கியின் (New Development Bank – NDB) மூலமாக ஆளுநர்களின் சிறப்பு வாரியக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அக்கூட்டத்தில் NDB-யின் தலைவராக பிரேசில் நாட்டின் மார்க்கோஸ் ட்ராயோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- ❖ சேஷானா கேரவன் என்ற மிகப்பெரிய மின்சார விமானம் மின்சார இயந்திரத்தை பெற்று தரையிரங்குவதற்கு முன்பாக பாதுகாப்பாக மோசஸ் ஏரியில் திட்டத்திட்ட 290கி.மீ பறந்து சென்றது.

- ❖ இந்தியப் பெருங்கடலில் ஈரான் ஒரு நிரந்தரத் தளத்தை அமைக்கவுள்ளது.

  - ➢ ஈரானின் இஸ்லாமிய புரட்சி பாதுகாப்புப் படைகள் (Islamic Revolution Guards Corps –IRGC), பன்னாட்டு நீர்நிலைகளில் அதன் எல்லையை விரிவுபடுத்துவதற்கு இந்தியப் பெருங்கடலில் ஒரு நிரந்தர தளத்தை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது என்று அறிவித்துள்ளது.

- ❖ யுனைடெட் கிங்டம்(UK) 'Jet Zero' திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டம், வான்போக்குவரத்தின் உமிழ்வுகளை குறைக்கவும், கார்பனில்லாத போக்குவரத்தை முடிந்தளவிற்கு ஏற்படுத்தவும் நோக்கம் கொண்டுள்ளது. இந்நாடு, 2050-வாக்கில இவ்விலக்கை அடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றியின் 75-வது நிறைவு வருடம்

  - ➢ இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றியின் 75-வது நினைவு ஆண்டு மீதான இராணுவ அணிவகுப்புக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக முப்படைகளில் உள்ள 75-உறுப்பினர்களை இரஷ்யாவிற்கு இந்தியா அனுப்பியது.

- ❖ பலதரப்பட்ட இராணுவத் தளவாடங்கள் வர்த்தக ஒப்பந்தத்தில் (Arms Trade Treety –ATT) இணைவதற்கு சீனா முடிவு செய்துள்ளது.

- ❖ இந்தியாவிற்கு வெளியில் லாஸ்ஏஞ்சல்ஸ்-ல் உலகின் முதலாவது யோகா பல்கலைக்கழகமான 'விவேகானந்தா யோகா பல்கலைக்கழகம்' தொடங்கப் பட்டுள்ளது.

- ❖ சுவிட்சர்லாந்தின் வங்கிக் கணக்குகளில் அதிகம் வைத்துள்ள மூன்று உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாகும். மற்ற இரண்டு நாடுகள் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகும்.

- ❖ இஸ்ரேல், தாழ்வான புவி சுற்றுப்பாதைக்குள் (Low Earth Orbit – LEO) அதன் நுண்ணறிவு செயற்கைக்கோளான 'Ofek-16'-ஐ வெற்றிகரமாக ஏவியுள்ளது.

- ❖ 2030-வரை விளாடிமிர் புதின் தனது ஆட்சியை நீட்டிப்பதற்கு இரஷ்ய மக்கள் தெளிவான வழிவகுத்துள்ளனர்.
  - ➢ 2030வரை இரஷ்ய நாட்டில் தலைமை வகிப்பதற்கு விளாடிமிர் புதினை அனுமதிக்கும் அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவாக 77.95% இரஷ்ய மக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

- ❖ இந்தியாவும், ஆப்கானிஸ்தானும் 5-ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளன.
  - ➢ உயர்தாக்க சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்காக (High Impact Community Development Project – HICDP) ஆப்கானிஸ்தானுடன் 5-புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது.
  - ➢ இவ்வித ஒப்பந்தங்கள், ஆப்கானிஸ்தானின் 4-பிராந்தியங்களில் கல்விக் கட்டுமானத்தை மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

- ❖ 600-மெகாவாட் கோலோஞ்சூர் நீர்மின் திட்டத்திற்காக இணைமுயற்சி ஒப்பந்தத்தில் இந்தியாவும், பூடானும் கையொப்பமிட்டுள்ளன.

- ❖ பூடானிலுள்ள பசாகா மற்றும் மேற்கு வங்கத்தில் உள்ள ஜெய்கவுன் இடையேயான ஒரு புதிய வர்த்தக வழித்தடத்தை இந்தியாவும் பூடானும் திறந்துள்ளன.

- ❖ 2019-2020ம் ஆண்டில் இங்கிலாந்தில் 2-வது மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டாளராக இந்தியாவின் தரம் உயர்ந்துள்ளது. இதில் முதலிடத்தை அமெரிக்கா பெற்றுள்ளது.

- ❖ ஆசாத் பட்டன் நீர்மின்சாரத் திட்டத்திற்காக (Azad Pattan Hydel Power Project) பாகிஸ்தானும், சீனாவும் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.

- ❖ 2021-பழங்கள் மற்றும் காய்கறிகளின் பன்னாட்டு வருடமாகும். இந்தியா இவ்வியக்கதில் இணைந்துள்ளது. உலகில் பழங்கள் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்வதில் 2-வது மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது.

- ❖ பாகிஸ்தான் தாலிபன் தலைவர் நூர் வாலி மெஸ்ஸுது-ஐ ஒரு உலகத் தீவிரவாதியாக ஐ.நா. அறிவித்துள்ளது.

- ❖ மேடலின் சுவக்லே என்பவர் அமெரிக்காவின் 110-வருட வரலாற்றில் முதல் கருப்பினப் பெண் கப்பற்படை மாலுமியாக பதவியேற்றுள்ளார்.

- ❖ அமெரிக்காவில் ஒரு யுக்தியான பெட்ரோலிய இருப்பு மேம்பாட்டிற்காக, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.

- ❖ அடுத்த ஐந்தாண்டுகளுக்கான அறிவியல் ஒத்துழைப்பு மீதான ஒப்பந்தத்தின் புதுப்பிப்பை நோக்கி 15-வது இந்திய - ஐரோப்பிய யூனிய உச்சி மாநாட்டில் இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் முடிவு செய்துள்ளன.

- ❖ வடகொரியாவிற்கு ஒருமில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான மருத்துவ உதவியை இந்தியா வழங்குகிறது.

- ❖ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மாலத்தீவு பிரதமரும் இணைந்து ஜுலை-30ல் காணொளிக்காட்சி மூலமாக மாலத்தீவின் புதிய உச்சநீதிமன்றக் கட்டிடத்தை திறந்துவைக்க உள்ளனர்.

- ❖ பன்னாட்டு சூரியசக்தி கூட்டமைப்பு செயல்பணி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்வந்துள்ள 87-வது நாடாக நிகரகுவா உள்ளது.

- ❖ ஜெனிவாவில், ஜுலை-22,2020ல் நடைபெறும் உலக வர்த்தக அமைப்பின் பொதுக்கவுன்சில் கூட்டத்தில் உற்றுநோக்கர் அந்தஸ்து துர்க்மெனிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் இந்த அமைப்பின் 25-உற்றுநோக்கராக துர்க்மெனிஸ்தான் வந்துள்ளது.

- ❖ ஒரு புதிய 8-மில்லியன் பவுன்டுகள் இணைமருத்துவ ஆராய்ச்சிக்காக இந்தியாவும், இங்கிலாந்தும் இணைகின்றன.

- ❖ ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு பங்களிப்பு நிதி இந்தியாவிற்கு 15.46-மில்லியன் அமெரிகக டாலரை நிதிஉதவியாக அளிக்கிறது.

- ❖ அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடன் என்பவர் கமலா ஹாரிஸை துணை ஜனாதிபதி வேட்பாளராக தேர்வு செய்துள்ளார்.

  - ➢ கமலா ஹாரிஸ் முதலாவது கருப்பினப் பெண்மணியும் மற்றும் முதலாவது இந்திய வம்சாவழியினரும் ஆவார்.
  - ➢ தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி அருகிலுள்ள துளசேந்திரபுரம் என்ற சிறிய கிராமமே கமலா ஹாரிஸின் தாத்தா சொந்தக் கிராமமாகும்.

- ❖ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த UAE மற்றும் இஸ்ரேல் இடையேயான அமைதி ஒப்பந்தம்

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு மற்றும் அபுதாபியின் இளவரசர் மற்றும் UAE-யின் துணைத் தளபதியுமான செய்க் முகம்மது பின் சயித் நாகியான் ஆகியோர், இஸ்ரேல் மற்றும் UAE ஆகிய இரு நாடுகளிடையே இயல்பான பரஸ்பர உறவிற்கு ஒப்புக் கொண்டுள்ளனர்.

- **ரஷ்ய நாடு 'Sputnik-V' என்ற கொரானா வைரஸ் தடுப்பூசியை இறுதி சோதனை மூலமாக நிறைவு செய்துள்ளது. எனவே கொரானா வைரசுக்கான தடுப்பூசியை அலுவலகரீதியாக பதிவு செய்யும் உலகின் முதலாவது நாடாக ரஷ்யா முன்வந்துள்ளது மற்றும் அது பயன்பாட்டு தயாராக உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

- **ஜப்பானின் மிகநீண்ட காலம் பணிபுரிந்த பிரதமர் சிங்ஜோ அபே உடல்நலக் குறைவால் ராஜினாமா செய்துள்ளார்.**

    - உடல்நலக்குறைவு காரணமாக ஆகஸ்ட்-28,2020ல் பிரதமர் பதவியிலிருந்து தான் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.
    - 65-வயதுடைய அவர் உலகின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரத்தைப் பெற்றுள்ள ஜப்பான் நாட்டின் வரலாற்றில் பிரதமராக மிகநீண்ட காலம் அதாவது 7-வருடங்கள் மற்றும் 8-மாதங்கள் பணியாற்றியுள்ளார்.
    - அவர், டிசம்பர்-26,2015-லிருந்து ஜப்பான் பிரதமராக பணிபுரிந்துள்ளார்.

APPOLO STUDY CENTRE

# நியமனங்கள்

- உலக சுகாதார அமைப்பின் செயல்துறை வாரிய (Executive Board) தலைவர் - டாக்டர் ஹர்ஷ் வர்தன்

- மே-12ல் மூத்த IAS அலுவலர் V. வித்யாவதி, அமைச்சரவை நியமனக்குழுவால் புதிய இந்திய தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராக (Director General of Archaeological Survey of India – ASI) நியமிக்கப்பட்டுள்ளார்.

- உலக வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணராக Carmen Reinhart பதவி ஏற்றுள்ளார்.

- விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) தலைவராக கோவிந்தராஜுலு சிந்தாலா-வை மத்திய அரசாங்கம் நியமித்துள்ளது.

- ஈராக்கின் 6-வது பிரதமராக முஸ்தபா அல் ஹாதினி பதவியேற்றுள்ளார்.

- R. ஸ்ரீலேகா என்ற பெண் ஜுன்-1,2020ல் கேரள தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையின் புதிய தலைவராக பதவியேற்றுள்ளதால், கேரள காவல்துறை அதன் முதலாவது பெண் தலைமை இயக்குநரை (Director General) பெற்றுள்ளது.

- மேல்நிலைக் கல்வி மத்திய வாரியத்தின் (CBSC) புதிய தலைவராக மனோஜ் ஆகுஜா பொறுப்பேற்றுள்ளார்.

- புதிய மேம்பாட்டு வங்கியின் புதிய தலைவராக பிரேசில் நாட்டின் மார்க்கோஸ் டிராய்ஜோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - கே.வி.காமத்தின் பதவிக்காலம் முடிவடைவதால், புதிய மேம்பாட்டு வங்கியின் (New Development Bank – NDB) தலைவராக பிரேசில் நாட்டைச் சேர்ந்த மார்க்கோஸ் டிராய்ஜோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - அவ்வங்கியின் புதிய துணைத்தலைவராக இந்தியாவைச் சேர்ந்த அனில் கிஷோரா செயல்படுவார்.

- இராகுல் தேவ் என்ற சிறுபாண்மை இனத்தைச் சேர்ந்த முதலாவது இந்து இளைஞர் பாகிஸ்தான் விமானப்படையில் சேர்ந்துள்ளார்.

- புதிய உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநராக (Director General) டாக்டர். டெட்ரோஸ் ஆதாநம் ஹெப்ரியேசஸ் என்பவரை உலக சுகாதார சபை (World Health Assembly) தேர்ந்தெடுத்துள்ளது.

- ❖ சையத் அக்பருதீன் என்பவருக்கு அடுத்து ஐ.நா. வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக T.S. திருமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தால் இந்தியாவின் நல்லெண்ணத் தூதுவராக டியோ மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

# திட்டங்கள்

- சூரிய வேலி பண்ணை பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆரம்ப பணிகளை தமிழக அரசு தொடங்கியது.

   1. இத்திட்டம் மத்திய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

   2. மின்சார வேலியின் கட்டுமான செலவில் 50% (மின் உற்பத்திக்கு சோலார் பேனல்கள் அமைப்பது) மானியமாக விவசாயிகளுக்கு மத்திய வேளாண் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

- திரிபுரா மாநில அரசு ”முக்கிய மந்திரி யூபா யோகயோக், யோஜனா” என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகின் நன்மைகளைப் பயன்படுத்த உதவுவதற்கும், டிஜிட்டல் முறையில் மேம்படுத்துவதற்கும், இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஸ்மார்ட்போன்கள் வாங்குவதற்கான மானியங்களை இத்திட்டம் வழங்கும்.

**பிரதான் மந்திரி மதஸ்ய சம்பதா யோஜனா:**

- மீன்வளத் துறையை உயர்த்துவதற்காக சுமார் ரூ 20,000 கோடி முதலீட்டில் மத்திய அரசு பிரதான் மந்திரி மதஸ்ய சம்பதா யோஜனா என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- மகாராஷ்டிரா அரசு “மீ அன்னபூர்ணா” என்னும் திட்டம் தொடங்கியுள்ளது. இத்திட்டம் விவசாயிகள் மற்றும் பூமிபுத்ராக்களின் நலனுக்கான ஒரு முழுமையான திட்டம் ஆகும்.

- மூத்த குடிமக்களுக்கான பிரதான் மந்திரி வய வந்தனா ஓய்வூதியம் திட்டம் மேலும் மூன்றாண்டு காலத்துக்கு (2023 மார்ச் 31) வரை நீட்டிப்பு.

- ஆயுஷ்மான் பாரத் திட்டம் பயனாளிகளின் எண்ணிக்கை 1 கோடியை தாண்டியது.

ரூ 5 லட்சம் மதிப்பிலான சிகிச்சை பெறும் மருத்துவ பாதுகாப்பு மற்றும் நாட்டின் 10.74 கோடி ஏழைகளுக்கு நிதிப் பாதுகாப்பை உறுதி செய்வதுதான் இத்திட்டத்தின் இலக்கு ஆகும்.

- புலம்பெயர் தொழிலாளர்களுக்காக ரூ 50000 கோடி செலவில் கரீப் கல்யாண் வேலைவாய்ப்புத் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் இத்திட்டத்தை முன்னிருந்து செயல்படுத்தும்.

**”ஒருங்கிணைந்த பொது விநியோக மேலாண்மை திட்டம்”**

- ஒடிசா, சிக்கிம் மற்றும் மிசோராம் ஆகிய மூன்று மாநிலங்கள் “ஒருங்கிணைந்த பொது விநியோக மேலாண்மை திட்டத்தில் இணைந்ததாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. ராம் விலாஸ் பஸ்வான் அறிவித்தார்.

**பிரதமர் மோடி தொடங்கிய தொழில்நுட்பம் சார்ந்த தீர்வு “சாம்பியஸ்“ (CHAMPIONS):**

- பிரதமர் திரு. நரேந்திர மோடி ”சாம்பியன்ஸ்” என்னும் தொழில்நுட்பத் தளத்தை ஜீன் 1 2020 அன்று MSME துறைக்காக புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.

- CHAMPIONS – உற்பத்தி மற்றும் தேசிய வலிமையை அதிகரிப்பதற்கான நவீன நடைமுறைகளை கொண்ட இணக்கமான செயலி மற்றும் உருவாக்கத்துக்கு இது தளமாக விளங்கும்.

- சிறு, குறு, நடுத்தரத் தொழில் அமைச்சகத்தின் உண்மையான ஒற்றை நிலை இடமாக இது அமைந்துள்ளது.

**தெருவோர வியபாரிகளுக்கான பிரதமர் ஸ்வநிதி திட்டத்தை (Svanidhi) மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.**

- தற்சார்பு நிதி (பிரதமர் ஸ்வநிதி) திட்டத்தின் கீழ் 50 லட்சம் நகர்புற மற்றும் ஊரக தெருவோர வியபாரிகளுக்கு சிறப்பு நுண் கடன் வசதியை அளிக்கப்படும்.

- தெருவோர வியபாரிகள் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்க இந்த திட்டம் உதவும் மேலும் இத்திட்டத்தின் கீழ் ரூ 10000 நிதி உதவி வழங்கப்படும்.

**துலிப் (TULIP) பயிற்சி திட்டம்:**

- சமீபத்தில் பட்டப்படிப்பை முடித்தவர்களுக்குப் பயிற்சி வகுப்புகளை வழங்குவதற்கு துலிப் (TULIP – The urban learning internship program) என்னும் முன்மாதிரியானத் திட்டத்தை நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் (ULB), பொலிவுறு நகரங்களிலும் (smart cities) செயல்படுத்தப்படும்.

**நகர வன திட்டம்:**

- உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பிரகாஷ் ஜவடேகர் “நகர வன“ திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

- இத்திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாடு முழுவதும் 200 நகரப்புற காடுகள் உருவாக்கப்படும் இத்திட்டம் நகரங்களில் காடுகளை உருவாக்குவதில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**2020 – 21 FY, MGNREGS – காக இதுவரை இல்லாத அளவிற்கு ரூ 1,01,500 கோடி ஒதுக்கீடு:**

- நடப்பு நிதியாண்டில் (2020 – 2021) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு இதுவரை இல்லாத அளவில் ரூ 1,01,500

கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக அதிக அளவில் ஒதுக்கப்பட்ட நிதி இதுவே ஆகும்.

**ஜெகண்ணன்னா செடோடு:**

- கோவிட் - 19 தொற்று நோயால் வாழ்வாதாரத்தை இழந்த தையல்காரர்கள், முடிதிருத்தும் தொழிலாளர்கள் மற்றும் துவைப்பிகள் ஆகியோருக்கு நிதி உதவி வழங்க ஆந்திர மாநில முதல்வர் ஜகன் மோகன் ரெட்டி "ஜகன்னண்ணா செடோடு" திட்டத்தை தொடங்கினார்.

**இந்திரா ரசோய் யோஜனா:**

- சமுகத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள வகுப்பினருக்காக சுத்தமான மற்றும் ஊட்டச்சத்து உணவை அளிப்பதற்கு ராஜஸ்தான் அரசு "இந்திர சமையல் (ரசோய்) திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது.

**மரியாதை, சமத்துவம், அதிகாரமளித்தல் மூலம் அவள் வெற்றி பெறுகிறாள் (STREE):**

- வீட்டு வன்முறை உள்ளாக்கப்படும் பெண்களுக்கு ஆதரவளித்தல், அதிகாரமளித்தல் என்ற நோக்கத்துடன் ஹைதராபாத் அரசு "STREE" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.

**PMFME (பிரதம மந்திரி உணவு பதப்படுத்துதல் சிறுதொழில்களை முறைப்படுத்தும்) திட்டம் - "சப்னோ கி உதான்"**

- PMFME திட்டத்திற்கு "சப்னோ கி உதான்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் 2020 – 21 முதல் 2024 – 2025 வரை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

**பலராம் திட்டம்:**

- நிலமற்ற விவசாயிகளுக்கு பயிர் கடன்களை வழங்க ஒடிசா மாநில அரசு பலராம் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- கைத்தறி நெசவாளர்களுக்காக கர்நாடகா அரசு "நேக்கர் சம்மன் யோஜனே" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

- MSME மற்றும் ஜவுளி தொழில்களுக்காக குஜராத் அரசு "அட் ஒன் க்ளிக்" (at one click) என்ற ஆன்லைன் பண உதவி முன் முயற்சியை அறிமுகப்படுத்தியது.

- உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதியத்யநாத் பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடிகள் இனத்தவர்களுக்காக "நவீன ரோஜ்கர் சத்ரி யோஜனா" என்ற வேலைவாய்ப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

- இத்திட்டம் 2020 – 2021 ஆம் ஆண்டில் சுமார் 7.5 லட்சம் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் பொருளாதாரம் மற்றும் சமூக சமத்துவத்தை இலக்காக கொண்டுயுள்ளது.

**கோதான் நியாய யோஜனா:**

- கிராமப்புறங்களில் விவசாயிகளிடமிருந்தும், கால்நடை வளர்ப்பாளர்களிடமிருந்தும் ஒரு கிலோவுக்கு ரூ 2 வீதம் மாட்டு சாணத்தை கொள்முதல் செய்யும் (கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக) “கோதான் நியாய யோஜனா” என்னும் திட்டத்தை சத்தீஸ்கர் அரசாங்கம் தொடங்கியுள்ளது.

**முக்கிய மந்திரி கர் கர் ரேஷன் யோஜனா”**

- வீட்டு வாசலில் ரேஷன் விநியோகத்தைப் பெற டெல்லி அரசு ”முக்கிய மந்திரி கர் கர் ரேஷன் யோஜனா” திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**விருக்ஷாரோபன் அபியான்:**

- நாட்டிற்காகவே தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்த லோக்மான்ய பாலகங்காதர திலகர் மற்றும் சந்திரசேகர் ஆசாத் பிறந்த நாள் 23 ஜீலை 2020 அன்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் ”விருக்ஷாரோபன் அபியான்” எனப்படும் மரக்கன்று நடும் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

**IRDAI இந்தியன் தொற்று அபாயக் குளம்“ குறித்த ஒரு குழுவை உருவாக்கியுள்ளது:**

- இந்தியாவின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) தொற்று அபாயக் குளம்“ என்ற செயற்குழுவை உருவாக்கியுள்ளது.

- மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அகர்பத்தி உற்பத்தியில் இந்தியாவை சுயசார்பாக மாற்றுவதற்கு “காதி அகர்பத்தி சுயசார்பு இயக்கம்” என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

- மத்திய பிரதேச அரசு ”ஏக் மாஸ்க் - அனெக் ஜிந்தகி” (ஒரு மூகமுடி பல உயிர்கள்) என்ற பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.

**மேலும் 4 மாநிலங்கள் (மொத்தம் 24) “ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை” திட்டத்தின் கீழ் இணைந்துள்ளன.**

- இத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகளின் நாடு தழுவிய பெயர்வுத்திறன் வசதியின் துணையோடு அனைத்து தகுதியுடைய பயனாளிகளுக்கு உரித்தான பொருள்களை நாட்டில் எங்கு வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளும் வசதியை

அளிப்பதற்காக மீதமுள்ள மாநிலங்களை மார்ச் 2021-குள் இணைக்கப்பட வேண்டும்.

**கிராமாத்யோக் விகாஸ் யோஜனா":**

- மத்திய அரசின் சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறை அமைச்சகம் 30 ஜீலை 2020 அன்று கிராமாத்யோக் விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும் அகர்பத்தி தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் நன்மைக்காகவும் பரிசோதனைக் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

**ஹரியானா மாநில அரசு இரண்டு திட்டங்கள் தொடங்கியுள்ளது:**

- மஹிலா எவம் கிஷோரி சம்மன் யோஜனா" என்ற திட்டத்தில் வறுமை கோட்டுக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு 10 முதல் 45 வயதுக்குட்பட்ட பருவ வயது பெண்கள் மற்றும் பெண்களுக்கு இலவச சுகாதார நாப்கின்கள் வழங்கப்படும்.

- முக்கிய மந்திரி தூத் உபர் யோஜனா" திட்டத்தின் கீழ் வலுவூட்டப்பட்ட சுவையூட்டப்பட்ட பால் பொடியை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும்.

**ஷாஹீத் மகேந்திர கர்மா டெண்டுப்பட்டா சங்கிராக் சமாஜிக் சுரக்ஷா யோஜனா:**

- சத்தீஸ்கர் மாநிலம் டெண்டு இலைகள் சேகரிப்பாளர்களுக்காக ஒரு சமூக பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இத்திட்டம் 12 லட்சத்துக்குப் மேற்பட்ட குடும்பங்களை உள்ளடக்கிய (பெரும்பாலும் பழங்குடியினர் மற்றும் வனவாசிகள்) திட்டமாக இருக்கும்.

**குஜராத் அரசு விவசாயிகளின் பயிர் இழப்பை ஈடுசெய்யும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது:**

- குஜராத் முதல்வர் விஜய் ரூபானி "பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா" திட்டத்திற்கு பதிலாக 2020 – 21 ஆம் நிதியாண்டிற்கு மட்டும் "முக்கிய மந்திரி கிசான் சஹாய் யோஜனா" திட்டம் செயல்படும் என அறிவித்துள்ளார்.

## AMRUT திட்டம் தரவரிசை 2020

- புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்துக்கான அடல் திட்டத்தின் (AMRUT) தரவரிசையில் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஒடிசா மாநிலம் முதல் இடத்தில் உள்ளது.

- நாகலாந்து முதலமைச்சர் "மஞ்சள் சங்கலி" என்ற மையப்படுத்தப்பட்ட மின் வணிக தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். பொருள்கள் அல்லது சேவைகள் தங்கள் சொந்த இடங்களிலிருந்து நிலையான வணிகங்களை உருவாக்க இத்திட்டம் உதவுகிறது.

**ஜல் ஜீவன் இயக்கம்:**

- 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் ஒவ்வொரு கிராமப்புற வீட்டுக்கும் செயல்படும் வீட்டு குழாய் இணைப்புகளை (FHIC) வழங்குவதையும் அதன் மூலம் போதுமான அளவு குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதையும் ஜீல் ஜீவன் இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**"இந்திரா வான் மிதன் யோஜனா"**

- உலக பூர்வீக மக்களின் சர்வதேச தினத்தை முன்னிட்டு சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகேல் "இந்திரா வான் மிதன் யோஜனா" என்னும் திட்டத்தை அறிவித்தார். சத்தீஸ்கர் வனவாசிகளை ஆதரிப்பதற்கும் மற்றும் தற்சார்பு அடைவதற்கும் இது ஒரு முயற்சி ஆகும்.

**முவ்வுணவு (Trifood) திட்டம்:**

- 20 ஆகஸ்ட் 2020 அன்று, பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பு இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் (TRIFED) முவ்வுணவு (Trifood) திட்டத்தை காணொலி வாயிலாக மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. அர்ஜீன் முண்டா தொடங்கி வைத்தார்.

- பழங்குடியினர் வன சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்பட்ட சிறு வன உற்பத்தியை (MFP) சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலமும், மதிப்பு சேர்ப்பதன் மூலமும் பழங்குடியினரின் வருமானம் மேம்படும். இதுவே இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஒருனோடோய் திட்டம் (ORUNODOI)**

- பெண்களுக்கான நிதி அதிகாரமளித்தல் திட்டமாக இது இருக்கும்

- 17 லட்சம் குடும்பங்கள் பயனாளிக்கும் இத்திட்டம் அசாம் அரசாங்கத்தின் மிகப்பெரிய நேரடி நன்மை பரிமாற்ற திட்டமாக இருக்கும்:

# குழுக்கள்

❖ **செகத்கார் குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.**

➢ எல்லைக் கட்டுமானத்தை ஏற்படுத்துவது தொடர்பான லெப்டினட் ஜென்ரல் D.B. செகத்கார் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் அமல்படுத்தியுள்ளது.

➢ இது, பெரும்பாலும் எல்லைப் பகுதிகளின் சாலைக் கட்டுமானத்தை துரிதப்படுத்துவது தொடர்பானதாகும்.

❖ **மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா-வால் பாராளுமன்றத்தின் பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக ஆதித் ரஞ்சன் சவுத்ரி மறுமுறை நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ **செகத்கார் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இராணுவ பொறியியல் பணிகளில் 9,304-பதிவிகளின் ரத்திற்கு மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.**

❖ **மாநிலப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் மீதான COVID-19 தொற்றின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு C. ரங்கராஜனால் தலைமை வகிக்கப்படும் ஒரு உயர்மட்டக்குழுவை தமிழ்நாடு மாநில அரசாங்கம் அமைத்துள்ளது.**

❖ **பின்வரும் 7-குழுக்களின் நோக்கம் மற்றும் தலைமை போன்றவற்றை அறியலாம்.**

| **வ. எண்** | **நோக்கம்** | **அமைத்தது** | **தலைவர்** |
|---|---|---|---|
| 1 | முழு அடைப்பால் வேலையிழந்த இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்த | நித்தி ஆயோக் | அமிதாப் காந்த் |
| 2 | இந்திய தனியார்த்துறை வங்கிகளின் அமைப்பை ஆய்வு செய்வதற்கு | இந்திய ரிசர்வ் வங்கி | P.K. மொகந்தி |
| 3 | தனியார் நொடிப்புநிலை தீர்மானம் மற்றும் பணப்புழக்கம் மீதான ஆலோசனைக்குழு | இந்திய நொடிப்புநிலை மற்றும் திவால்நிலை வாரியம் (IBBI) | உதய் கோட்டக் |
| 4 | இந்தியாவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான கேபினட் செயலர் தலைமை வகிக்கும் 7-அதிகாரச் செயலர் - | மத்திய அரசாங்கம் | ராஜீவ் கவுபா |

| | | | |
|---|---|---|---|
| | உறுப்பினர்கள் அடங்கியக் குழு | | |
| 5 | சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் நலனுக்கான 9-உறுப்பினர் கொண்ட குழு | மத்திய உள்துறை அமைச்சகம் | ஜி.கிசான் ரெட்டி |
| 6 | MSME கடன் திட்டங்களுக்கு ரூ. 3-லட்சம் கோடியை அமல்படுத்த | மத்திய அரசாங்கம் | ராஜ்நாத் சிங் |
| 7 | தாய் மரணவிகிதம் மற்றும் பெண்கள் நலத்தை ஆய்வு செய்ய | பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் | ஜெயா ஜேட்லி |

- **இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (Insurance Regulatory and Development Authority of India – IRDAI), இந்தியக் காப்பீட்டுத் தொழிலால் பாதுகாப்பு பத்திரங்களை வழங்கும் பொருத்தத்தை ஆய்வு செய்வதற்கு G. சீனிவாசனால் தலைமை வகிக்கப்படும் 9-உறுப்பினர் கொண்ட பணிக்குழுவை நியமித்துள்ளது.**

- **தேசிய மனித உரிமைகள் ஆணையம்(NHRE), மனித உரிமைகள் மீதான கொரானா-19 தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு டாக்டர். K.S. ரெட்டியால் தலைமை வகிக்கும் ஒரு குழுவை நியமித்துள்ளது.**

- **உஷா தோரட் குழு**
  - இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (Securities and Exchange Board of India – SEBI) இக்குழுவை மாற்றியமைத்துள்ளது.
  - இக்குழு, பரஸ்பர நிதித் தொழிலின் முறைப்படுத்துதல் மற்றும் மேம்பாடு தொடர்பாக அமைக்கப்பட்டதாகும்.

- **தகவல் பாதுகாப்பு மீதான கிரிஸ் கோபாலகிருஷ்ணன் குழு அதன் வரைவறிக்கையை சமர்ப்பித்துள்ளது.**
  - நாட்டின் தகவல் பாதுகாப்பு மற்றும் முற்றுரிமையை தடுத்தல் தொட்பாக, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இன்போசிசின் இணை நிறுவனர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன் தலைமை வகிக்கும் தனிநபர் சாராத தகவல் ஆளுமை செயல்பணி மீதான நிபுணர்குழு (Expert Committee on Non-Personal Data Governance Framework) தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

- ❖ இந்திய மாணவர்களை நாட்டிற்குள்ளேயே நிலைநிறுத்துவது தொடர்பாக பல்கலைக்கழக மாநிலக்குழு தலைவர் D.P. சிங் என்பவரால் தலைமை வகிக்கும் ஒரு குழுவை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அமைத்துள்ளது.

- ❖ தேசிய நிதி அறிக்கை ஆணையத்தின் தொழில்நுணுக்க ஆலோசனைக்குழுத் தலைவராக பேராசிரியர் R. நாராயணசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ பன்னாட்டு நிதிச் சேவை மையங்களின் ஆணையம் (International Financial Services Centres Authority – IFSCA), பன்னாட்டு சில்லறை வர்த்தகத்தை மேம்படுத்த உரிய திட்டத்தை உருவாக்குவதற்கு பிரதீப் ஷா என்பவர் தலைமை வகிக்கும் ஒரு குழுவை நியமித்துள்ளது.

- ❖ COVID-19 மற்றும் அதன் தாக்கம் தொடர்பாக நிதி அளவுகோள்களுக்கான ஒரு குழுவை K.V. காமத் தலைமையில் இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.

- ❖ ஏற்றுமதிப் பொருட்கள் மீதான கட்டணங்கள் மற்றும் வரிகளின் நிவாரணத் திட்டத்தின்கீழ் உச்சவரம்பு விகிதங்களை நிர்ணயிப்பதற்கு G.K. பிள்ளை தலைமையில் ஒருகுழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

- ❖ COVID-19க்காக தடுப்பூசி நிர்வாகம் மீதான தேசிய நிபுணர்குழு டாக்டர். V.K. பால் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

- ❖ பணக்கொள்கைக் குழு மீதான (Monitory Policy Committee - MPC) புதிய மூன்று அரசாங்க பிரதிநிதிகளைப் பரிந்துரைக்க தேடுதல் மற்றும் தேர்வுக்குழுவை ராஜீவ் கௌபா தலைமையில் மத்திய அரசாங்கம் அமைத்துள்ளது.

- ❖ சமத்துவம் மற்றும் பங்கேற்பில் நோக்கங்கொண்ட மூன்றாம் பாலினத்தவர்களுக்கான கொள்கையை உருவாக்குவதற்கு தேசிய கவுன்சிலை மத்திய அரசாங்கம் அமைத்துள்ளது. இந்தக் கவுன்சிலின் இயல்புவழித் தலைவராக சமூகநீதி மற்றும் அதிகாரத்துவத்திற்கான மத்திய அமைச்சர் இருப்பார். தற்போது அதன் தலைவராக தாவார்சந் கேலாட் உள்ளார்.

- ❖ DRDO (Defence Research and Development Organization) சாசனத்தை மறுஇலக்கணப் படுத்துவதற்கு டெல்லி IIT-யின் இயக்குநர் V. ராமகோபால் ராவ் என்பவரின் தலைமையின்கீழ் 5-உறுப்பினர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

**ISRO:**

- **இந்திய வானியல் ஆராய்ச்சி அமைப்பு (ISRO) மற்றும் ஆரியப்பட்டா உற்றுநோக்கு அறிவியல்களின் ஆராய்ச்சி நிறுவனம் (Aryabhatta Research Institute of Observational Sciences – ARIOS) ஆகிய இரண்டும் இணைந்து ஒரு புதிய புரிந்தணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.**
  - வானியல் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு (Space Situational Awareness – SSA) மற்றும் வான் இயற்பியல் கலங்களில் ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தத்தில் இவ்விரு அமைப்புகளும் கையொப்பமிட்டுள்ளன.

- **இந்தியாவின் செவ்வாய் சுற்றுவட்டபாதைத் திட்டம் (Mars Orbiter Mission - MOM) செவ்வாய் உட்புற நிலவின் உருவத்தைப் படம் பிடித்துள்ளது.**
  - இந்திய வானியல் ஆராய்ச்சி அமைப்பு (ISRO) செவ்வாயின் உட்புற நிலவின் படங்களை வெளியிட்டுள்ளது. செவ்வாயின் உட்புற நிலவு மிகவும் பெரியதாகும்.
  - அவ்வித உருவங்கள் செவ்வாய் வர்ண புகைப்படக்கருவியால் (Mars Colour Camera – MCC) படம் பிடிக்கப்பட்டு இந்திய செவ்வாய் சுற்றுவட்டப்பாதைத் திட்டத்தில் (MOM) இணைக்கப்பட்டது.

- **பிரேசில் நாட்டின் அமேசானியா-1 (Amazonia-1) என்ற செயற்கைக்கோளை ISRO ஏவவுள்ளது.**
  - PSLV மூலமாக ஏவப்படும் இந்த செயற்கைக்கோள் அமேசான் பகுதிகளில் காடழிப்பை மதிப்பீடு செய்து உற்றுநோக்குவதற்கு உதவிகரமாக இருக்கும்.
  - இது, புவியை உற்றுநோக்குவதற்கான முதலாவது செயற்கைக்கோளாக இருக்கும்.

- **ISRO-வின் சந்திராயன்-II நிலவின் உருவங்களைப் படம்பிடித்துள்ளது. அங்கு காணப்பட்ட பல்வேறு கிண்ணக்குழிகளில் ஒரு குழிக்கு விக்ரம் சாராபாய் பெயருக்குப் பின்பு சாராபாய் கிண்ணக்குழி (Sarabhai Crater) என்று பெயரிட்டுள்ளனர்.**

**NASA:**

❖ **'Ingenuity'(கூர்மதி) என்ற நாசா (NASA) செவ்வாய் சுற்றுக்காக கட்டப்படும் முதலாவது ஹெலிகாப்டரை பெயரிட்டு, 17-வயதுடைய இந்திய வம்சாவழி பெண் வணிலா ரூபினி போட்டியை வென்றுள்ளார்.**

❖ **நாசா (NASA), அதன் முதலாவது தலைமை வானியலறிஞர் 'நான்சி கிரேஷ் ரோமன்' என்ற பெயருக்கடுத்து Wide – Field Infrared Survey Telescope (WFIRST) என்ற அதன் அடுத்த தலைமுறை வானியல் நுண்ணோக்கிக்கு மறுபெயர் இட்டுள்ளது.**

- ➢ எனவே, தற்போது WFIRST என்பது நான்சி கிரேஷ் ரோமன் வானியல் தொலைநோக்கி அல்லது ரோமன் வானியல் தொலைநோக்கி என்றழைக்கப்படும்.
- ➢ இந்தத் தொலைநோக்கி 2025-ல் தொடங்கப்படவுள்ளது.

❖ **வானியல் நிறுவனங்களில் மிகவும் பிரபலமான 'SpaceX' என்ற நிறுவனம் சந்திரனில் இறங்கக்கூடிய விண்கலங்களை வடிவமைக்கவுள்ளது.**

- ➢ 2024-வாக்கில் சந்திரனில் இறங்கக்கூடிய விண்கலங்களை கட்டுவதற்காக SpaceX, Blue Orgin மற்றும் Dynetics ஆகிய மூன்று வானியல் நிறுவனங்களை நாசா (NASA) தேர்வு செய்துள்ளது.

❖ **நாசா(NASA) அதன் வாஷிங்டன் DC தலைமையிடத்திற்கு, அந்த முகமையில் முதலாவது கருப்பினப் பெண் பொறியாளராகப் பணிபுரிந்த மேரி W. சேக்சன் பெயருக்குப்பின் பெயரிடப்பட்டுள்ளது.**

- ➢ தற்போது அத்தலைமையிடம் மேரி W. சேக்சன் நாசா தலைமையிடம் என்று அழைக்கப்படுகிறது.
- ➢ மேரி W. சேக்சன் 1951-ல் நாசாவில் சேர்ந்து பொறியாளராக பணியாற்றத் தொடங்கினார்.
- ➢ அடிப்படையில் இவர் கணிதவியல் அறிஞர். எனவே, இவர் நாசாவுக்கான கைக்கணக்கீடுகளை மனிதக் கணினியாக செயல்பட்டு திறம்பட செய்துள்ளார்.

❖ **அமெரிக்காவின், தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (National Aeronautics and Space Administration – NASA) மற்றும் ஒருங்கிணைந்த ஏவும் கூட்டமைப்பு (United Launch Alliance – ULA) ஆகிய இரண்டு அமைப்புகளும் இணைந்து, செவ்வாய்-2020 விடாமுயற்சி சுற்றுப்பாதைத் திட்டத்தை (Mars-2020 Perseverance Rover Mission) தொடங்கியுள்ளன.**

❖ **மனிதனின் பண்டைய வாழ்க்கை முறை அடையாளங்களைத் தேடுவதற்கு செவ்வாய்-2020 விடாமுயற்சி சுற்றுவட்டப்பாதைத் திட்டத்தை நாசா**

தொடங்கியுள்ளது. அவ்வித சுற்றுவட்டப்பாதை சிவப்புகிரகத்தின் மீது பிப்ரவரி-18, 2021இல் இறங்கும்.

❖ கால்பந்து விளையாட்டு மைதான அளவிலான பலூனை பயன்படுத்தி பிரபஞ்சத்தை ஆய்வு செய்வதற்கு 'ASTHROS' திட்டத்தை NASA தொடங்க உள்ளது.

**CHINA:**

❖ சீனா, அதன் முதலாவது தன்னிச்சையான செவ்வாய் திட்டமான 'Tianwen-1' என்பதை ஏவியுள்ளது.

❖ சீனா தனது முதலாவது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மனிதரற்ற ஹெலிகாப்டரை சமீபத்தில் பீடபூமி செயல்பாடுகளில் மையப்படுத்தி அதன் உச்சத்தைக் கண்டது.

❖ சீனா, நிலவில் இறங்கும் திட்டங்களுக்கு வழிவகுக்கும் 'Long March 5B' எனப் பெயரிடப்பட்ட ஒரு புதிய ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது.

❖ சீனா அதன் தகவல் தொடர்பு செயற்கைக்கோளான 'APSTAR-6D' என்பதை வெற்றிகரமாக ஏவியுள்ளது.

- ➢ உலகம் முழுதும் பரந்த அளவில் செயற்கைக்கோள் தகவல்தொடர்பு முறைக்கான சீனாவின் முதலாவது செயற்கைக்கோள் இதுவாகும்.
- ➢ இது, உலகம் தழுவிய இணையதள தகவல்தொடர்பு இணைப்பணியை உள்ளடக்கிய GPS (Global Positioning System) போன்றதாகும்.

❖ 'Gaofen-9 05' என்ற ஒளியியல் தொலையுணர்வு செயற்கைக்கோளை சீனா ஏவியுள்ளது.

**UAE:**

❖ செவ்வாய் கிரகத்தை நோக்கிய முதலாவது வானூர்தியான 'HOPE' என்பதை UAE வெற்றிகரமாக ஏவியுள்ளது.

**IIT:**

❖ தானியங்கி மற்றும் விமானப் பாகங்களில் பயன்படுத்தப்படும் இரும்பு மற்றும் அலுமினியத்திற்கு பதிலாக இலகுவான கனமுடைய கலவை உலோகத்தை (Alloy) சென்னை IIT உருவாக்கியுள்ளது.

❖ ஒரு சூரியசக்தி 'பரவளைய தொட்டி சேகரிப்பாளர்' (Parabolic Trough Collector – PTC) முறையை சென்னை IIT ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- ➢ பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் நிறுவனம் மற்றும் இங்கிலாந்திலுள்ள கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகமும் இணைந்து, பருவமழை, புயல் மற்றும்

காலநிலைத் தொடர்பான முன்கணிப்புக்களை தெளிவாகக் கணிப்பதற்காக மூலம் (அ) அடிப்படையை கண்டறிந்துள்ளனர். அதனடிப்படையில், சென்னை IIT ஆய்வாளர்கள் இந்த முறையை(PTC) உருவாக்கியுள்ளனர்.

❖ **பாம்பே IIT "Dhruva" என்ற ஒரு Homegrown Receiver chip-ஐ உருவாக்கி உள்ளது.**

➢ இது, உள்நாட்டிற்குள் உள்ள அமைவிடங்கள் மற்றும் வழித்தடங்களை கண்டுபிடிப்பதற்கு திறன்பேசிகள் மற்றும் வழிகாட்டும் கருவிகளில் பயன்படுத்தப்படுகிறது.

➢ இது, அனைத்து காலநிலைகளிலும் இந்தியா மற்றும் அமெரிக்க தெளிவாக செயற்கைகோள் அடிப்படைகளான வழிகாட்டல்களை பெறும்.

❖ **IITயின் முன்னாள் மாணவர்கள் இரஷ்யாவுடன் இணைந்து உலகின் மிகப்பெரிய மற்றும் அதிவேக கலப்பின குவாண்டக் கணினியை (Hybrid Quantum Computer) உருவாக்க உள்ளனர்.**

❖ **IIT கான்பூர், மொபைல் மாஸ்டர்ஜி (Mobile Masterjee) எனப் பெயரிடப்பட்ட ஒரு மெய்நிகர் வகுப்பறை முறைமையை ஏற்ப்படுத்தியுள்ளது.**

➢ அது, திறன்பேசிகளைப் பயன்படுத்தி ஆசிரியர்களின் விரிவுரைகள் மற்றும் இதர நிபந்தனைகளை பதிவுசெய்வதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துகிறது.

❖ **ஐதராபாத் தொழில்நுட்ப இந்திய நிறுவனம் (Indian Institute of Technology Hydrabad – IITH), பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனமான NVIDIA-வுடன் இணைந்து இந்தியாவின் முதலாவது 'NVIDIA' செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மையத்தை (NVIDIA AI Technology Centre – NVAITC) அமைத்துள்ளது. இது, செயற்கை நுண்ணறிவு மற்றும் அதன் வர்த்தகம் மீதான ஆய்வை துரிதப்படுத்துவதற்கு உதவுகிறது.**

❖ **தனியார் பொருட்களை கிருமிநீக்கம் செய்வதற்கு 'Unisaviour' என்ற தொற்றுநீக்க பெட்டியை IIT ரூர்கீ உருவாக்கியுள்ளது.**

❖ **"Medi CAB" என்று அழைக்கப்படும் ஒரு நகரும் மருத்துவமனையை சென்னை IIT தொழிற்துவக்க நிறுவனம் உருவாக்கியுள்ளது.**

➢ "Medi CAB" என்று அழைக்கப்படும் இந்த நகரும் மருத்துவமனை அலகை எவ்விடத்திலும் இரண்டு மணிநேரத்திற்குள் நான்கு நபர்களால் உருவாக்கப்படும்.

❖ **திறன்பேசி இயக்கும் கையடக்க புறஊதா தொற்றுநீக்க உதவியாள் (SmartPhone operated Handy Ultraviolet Disinfection Helper - SHUDH) என்று அழைக்கப்படும் ஒரு புறஊதா தொற்றுநீக்க கருவியை IIT கான்பூர் உருவாக்கியுள்ளது.**

➢ இக்கருவி ஒவ்வொன்றும் 15-Watt-களின் 6-UV Lights –ஐப் பெற்றுள்ளது.

❖ **எளிதான கலோரி மெட்ரிக் சோதனையைப் பயன்படுத்தி நீரின் தன்மையை மதிப்பிட்டு பகுத்தாய்வதற்காக ஒரு மென்திறன் கருவியான பத்மாவதி (PADMAVADHI) என்பதை கான்பூர் IIT உருவாக்கியுள்ளது.**

❖ **சமூக இடைவெளியை ஊர்ஜிதம் செய்வதற்கான 'Veli Band'-ஐ IIM கோழிக்கோடு உருவாக்கியுள்ளது.**

**COVID:**

❖ **பூனேயிலுள்ள வைரஸ் ஆய்வுக்கான தேசிய நிறுவனம் (National Institute of Virology – NIV), COVID-19னை கண்டறியும் 'Covid Kavach Elisa' எனப் பெயரிடப்பட்ட ELISA சோதனையை உருவாக்கியுள்ளது.**

❖ **உலகின் மிகக்குறைவான விலையில் 'Corosure' என்ற COVID-19 தொற்றறியும் கருவியை (COVID-19 Diagnostic Kit) டெல்லி IIT உருவாக்கியுள்ளது.**

➢ கோரானா வைரசுக்கான ஒரு உள்நாட்டு ELISA சோதனையை முதன்முதலாக இந்தியா உருவாக்கியுள்ளது.

❖ **COVID-19 நோயாளிகளை கண்காணிப்பதற்கு AIIMS நாக்பூர் Smart Wristband-ஐ தொடங்கியுள்ளது.**

**மற்றவை:**

❖ **வனவிலங்குக் கணக்கெடுப்பை மிகஅதிக எண்ணிக்கையுள்ள புகைப்படக் கருவிகளின் உதவியுடன் மேற்கொண்டு கின்னஸ் உலகப்பதிவை இந்தியாவின்-2018 புலிகள் கணக்கெடுப்பு ஏற்படுத்தியுள்ளது.**

➢ அப்படிப் பொருத்தப்பட்ட புகைப்படக் கருவிகள் மொத்தம் 3,48,58,623 வனவிலங்குப் படங்களை எடுத்துள்ளன. இதில் 76,651-புலிகள், 51,277-சிறுத்தைகள் மற்றும் மீதமுள்ளவை மற்ற விலங்குகளின் படமாகும்.

➢ உலக புலிகள் எண்ணிக்கையில் இந்தியா ஏறக்குறைய 75% பெற்றுள்ளது.

- **இந்தியாவில் உலகின் முதலாவது மீன் கிரையோ வங்கி அமைக்கப்படும் என்று கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்திற்கான மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் அறிவித்துள்ளார்.**

- **61-ஆண்டுகளுக்குப்பிறகு 'Ypthima Watsoni' என்ற வண்ணத்துப்பூச்சி வகையை திரிபுரா மாநில வனவிலங்கு ஆய்வாளர்கள் மறுகண்டுபிடிப்பு நிகழ்த்தியுள்ளனர்.**

  - இத்திட்டம் பிளாரிடாவிலுள்ள Cape Canaveral Air Force Station-ல் Space Launch Complex-41 லிருந்து ஏவப்பட்டது.

- **சிலேறு ஆற்றின் மாசீர்(Mahseer) என்ற அரியவகை மீனை ஆந்திரப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.**

- **நீருக்கடியிலான ஓர் ஆய்வுக்குப்பின்னர், மன்னார் வளைகுடாவில் நறுமணத்திற்காண போதிய இயற்கை ஆதாரமாக உள்ள ஒரு சிவப்புகடற்பாசியை (Red Seaweed), கடற்கரை ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் (National Centre for Coastal Research – NCCR) ஒரு ஆய்வுக்குழு கண்டுபிடித்துள்ளது.**

  - 'Portieria Hornemannii' என்று அறியப்படும் இந்த சிவப்புகடற்பாசி புற்றுநோய் மற்றும் பாக்டீரிய குணாதிசியங்களை போக்கவல்லதாகும்.
  - இவ்வகை சிவப்புகடற்பாசி இறந்த பவளப்பாறைகளின் மீது வளருகிறது மற்றும் இது இயற்கையிலேயே மிகச்சிறந்த நறுமணத்தை ஏற்படுத்துகிறது.

- **ஆர்டிக் காலநிலை மற்றும் சுற்றுச்சூழலை மதிப்பீடு செய்வதற்கு டிசம்பர்-9,2020 வாக்கில் 'ஆர்டிகா-எம் செயற்கைக்கோளை' (Arktika-M Satellite) ரஷ்யா ஏவவுள்ளது.**

- **ஜப்பான் புதிய விண்வெளி செயல்பாட்டுப் படைப்பிரிவை (Space Operations Squadron) தொடங்கியுள்ளது.**

  - அச்சுறுத்தகளிலிருந்து ஜப்பானிய செயற்கைக் கோள்களை பாதுகாப்பதற்கு வான் சுய-பாதுகாப்புப் படையின் (Air Self–Defense Force - ASDF) ஒரு பகுதியாக விண்வெளி செயல்பாட்டு படை என்றழைக்கப்படும் ஒரு புதிய வானியல் பாதுகாப்பு அலகை ஜப்பான் தொடங்கியுள்ளது.

- **'NAFTA 2.0' ஒப்பந்தம் ஜுலை-1,2020 முதல் நடைமுறைக்கு வருகிறது.**

  - அமெரிக்கா, மெக்ஸிகோ மற்றும் கனடா ஆகிய நாடுகளிடையேயான ஒரு புதிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் (NAFTA 2.0) ஜுலை-1,2020 முதல் நடைமுறைக்கு வருகிறது.
  - இப்புதிய ஒப்பந்தம் (NAFTA 2.0), இம்மூன்று நாடுகளுக்கிடையேயான 26-வருட செயல்பாட்டில் வட அமெரிக்கா போன்றவையிடையேயான முந்தைய தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை (North Americal Free Trade Agreement – NAFTA) விலக்கிவிடுகிறது.

- அதாவது, NAFTA 2.0 என்பது NAFTA-வின் மேம்படுத்தப்பட்ட ஒப்பந்தமாகும்.

- **அதிக தொற்றுள்ள பகுதிகளின் விரைவான தொற்றுநீக்கத்திற்கான ஒரு புதிய புறஊதா (Ultraviolet - UV) தொற்றுநீக்க கோபுரத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஏற்படுத்தியுள்ளது.**

  - இந்தப் புதிய வேதிப்பொருளற்ற கோபுரம் "UV Blaster" என்றும் அறியப்படுகிறது. இது புறஊதா அடிப்படையிலான களக்கிருமிநாசினி(Area Sanitizer) ஆகும்.

- **'சைபிரினிடே' குடும்பம் (Family Cyprinidae) என்ற ஒருபுதிய சிறிய தூய தண்ணீர் மீன்வகையான சில்வர் மீன் குஞ்சுகள் தமிழ்நாட்டில் வேளாங்கன்னியில் விடப்பட்டுள்ளன.**

- **தற்போது பருவமழைகள் மிகவும் துள்ளியமாக முன்கணிக்கப்படுகின்றன.**

- **ஜுன்-21,2020ல் வருடாந்திர சூரிய கிரகணம்**

  - வருடத்தின் மிக நீண்ட பகலைக் கொண்டுள்ள ஜுன்-21,2020ல் தீக்கிரகண வளையம் என்று பிரபலமாக அழைக்கப்படும் ஒரு விநோதமான வருடாந்திர சூரிய கிரகணத்தைக் காணலாம்.
  - வடக்கத்திய புவி அரைக்கோளத்தில் மிக நீண்ட பகலைக் கொண்ட இந்தக் கோடை நாளில் இந்தச் சூரியக்கிரகணம் நிகழ்கிறது.

- **பூனேயிலுள்ள அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக்கான கவுன்சிலின் (Council of Scientific and Industrial Research – CSIR) தேசிய வேதியியல் ஆய்வுக்கூடத்தில் உள்ள விஞ்ஞானிகள், இல்லங்கள் மற்றும் மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் எடுத்துச் செல்லக்கூடிய ஆக்ஸிஜன் அலகை வடிவமைத்துள்ளனர்.**

- **வானியல் அறிஞர்கள் இரண்டு அருமை புவிகளை (Super-Earths) கண்டறிந்துள்ளனர்.**

  - இவ்வித புவிகள், இயல்பான புவியிலிருந்து 11-ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளன.
  - இந்த ஆய்வின் முடிவுகள் அறிவியல் இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

- **கேத்தரின் D. சுள்ளிவன் என்ற முதலாவது அமெரிக்கப் பெண்மணி விண்வெளியில் நடந்தவராவார்.**

- விண்வெளியில் நடந்த அமெரிக்காவின் முதலாவது பெண்மணியான கேத்தரின் D. சுள்ளிவன் என்பவர் முன்னாள் நாசா வானியலறிஞர் ஆவார்.
- அவர், தற்போது பெருங்கடலிலுள்ள மிக ஆழமான இடத்தை அடையும் முதலாவது பெண்மணியாகவும் உலகப் பதிவை ஏற்படுத்தியுள்ளார்.
- புவியில் மிகவும் ஆழமான பெருங்கடல் அகழியாக 'மரியானா அகழி' உள்ளது. இது 'சவாலர்களின் ஆழம்' (Challenger Deep) என்றும் அழைக்கப்படுகிறது.

❖ **கோவாக்சின் (Covaxin) என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியாவின் முதலாவது கொரானா வைரஸ் தடுப்பூசி ஆகும்.**

- ஹைதராபாத்தில் அமைந்துள்ள தடுப்பூசி உருவாக்கும் பிரதான நிறுவனமான பாரத் பயோடெக் (Bharath Biotech), கொரானா வைரசுக்கான நாட்டின் முதலாவது தடுப்பூசியான கோவாக்சினின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்ட சோதனைகளுக்கான ஒப்புதலை அறிவித்துள்ளது.
- இச்சோதனைகள், இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளரால் (Drug Controler General of India – DCGI) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.
- இந்நிறுவனம், இந்த தடுப்பூசியை மேம்படுத்துவதில் மருத்துவ ஆராய்ச்சிக்கான இந்தியக் கவுன்சில்(ICMR) மற்றும் பூனேயிலுள்ள வைரஸ் ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் ஆகிய இரண்டு அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டுள்ளது.

❖ **முதல்முறையாக விண்ணில் ஐந்தாவது பொருள் நிலையை (Fifth State of Matter) விஞ்ஞானிகள் உற்றுநோக்கி கண்டறிந்துள்ளனர்.**

- போஸ், ஐன்ஸ்டீன் சுருங்கல் பொருள்கள் (Bose, Einstein Condensates – BECs) ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன்பு ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் கணிதவியல் அறிஞர் சத்யேந்திரநாத் போஸ் ஆகிய இருவராலும் முன்கணிக்கப்பட்டது.

❖ **மத்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (Science and Engineering Research Board – SERB), அதனோடு தொடர்புடைய 'அறிவியல் துரிதப்படுத்தும் திட்டம் மற்றும் இணையமுகப்பை' (Accelerate Vigyan Scheme and Portal) தொடங்கியுள்ளது.**

- இந்த அறிவியல் துரிதப்படுத்தும் திட்டம் ஆராய்ச்சியாளர்களுக்கான திட்டமாகும்.

❖ **டெல்லியிலுள்ள ஓகாலாவில் கழிவிலிருந்து ஆற்றல் தயாரிக்கும் ஆலையை அமைப்பதற்கு, இந்தியன் ஆயில், NTOC மற்றும் தெற்கு டெல்லி மாநகராட்சி ஆகிய மூன்று அமைப்புகளிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது.**

❖ **இந்திய இரயில்வே 'பீனா' என்ற இடத்தில் ஒரு சூரியசக்தி ஆற்றல் உலையை அமைக்கவுள்ளது.**

- இரயில்வே மேல்நிலைப்பகுதி மின்தொடரில் நேரிடியாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு மத்தியப்பிரதேசத்தின் பீனா என்ற இடத்தில் ஒரு சூரியசக்தி ஆற்றல் உலையை அமைப்பதற்கு இரயில்வே அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இத்திட்டத்தின் உதவியால் வருடத்திற்கு ஏறக்குறைய 25-இலட்சம் அலகு ஆற்றல் உற்பத்திச் செய்யப்படும் மற்றும் ஒவ்வொரு வருடமும் இந்திய இரயில்வேக்கு ஏறக்குறைய ரூ.1.37-கோடி சேமிப்பு ஏற்படும்.

❖ **ஓரிசா முதலமைச்சர் நவீன்பட் நாயக், புவனேஷ்வர் நிலப்பயன்பாடு புலனாய்வு முறைமையை (Bhubaneswar Land Use Intelligence System – BLUIS) தொடங்கி வைத்துள்ளார்.**

- இத்திட்டம், அம்மாநிலத்தின் பொதுநிர்வாகம் மற்றும் பொதுமக்கள் குறைகளைக் களையும் துறைகளின் ஒரு முன்னோடியான மேம்பாட்டு திட்டமாகும்.

❖ **பத்து முறை கழுவக்கூடிய உலகின் முதலாவது மறுபயன்பாட்டு தனிநபர் பாதுகாப்புக் கருவியை (personal Protective Equipment – PPE) Loyal Textile Mills நிறுவனம் தொடங்கியுள்ளது.**

❖ **செவ்வாய் கிரகத்திற்கான 'Hope' திட்டத்தை ஐக்கிய அரபு எமிரேட் தொடங்கியுள்ளது.**

- முதன்முறையாக தின மற்றும் பருவகால மாற்றங்களை ஆய்வு செய்து செவ்வாய் வளிமண்டலத்தின் ஒரு முழுமையான படத்தை ஏற்படுத்துவதற்கு இத்திட்டம் உதவி புரியும் என்று அந்நாடு நோக்கம் கொண்டுள்ளது.

❖ **இந்தியா, ரஷ்யா இடையேயான கூட்டு தொழில்நுட்ப மற்றும் துரிதப்படுத்தப்பட்ட வர்த்தகமையத் திட்டம் (Joint Technology Assessment and Accelerated Commercialization Programme) தொடங்கப்பட்டுள்ளது.**

❖ **அணுசக்தியை உற்பத்தி செய்யும் முதல் அரேபிய நாடாக ஐக்கிய அரபு எமிரேட் முன்வந்துள்ளது. அபுதாபியில் உள்ள வராக்கா அணு உலை-யின் முதலாவது அலகு ஜுலை-31, 2020இல் நடைமுறைக்கு வந்தது.**

- **9-பில்லியன் ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டத்திலிருந்து புறஊதாக்கதிர் வெளிச்சத்தை ‘Astro Sat’ என்ற இந்தியச் செயற்கைக்கோள் கண்டறிந்துள்ளது.**
  - AUDFs01 என்று அழைக்கப்படும் நட்சத்திரக் கூட்டத்திலிருந்து ஒரு அரிதான புறஊதாக்கதிர் வெளிச்சத்தை, இந்தியாவின் முதலாவது வெளிச்சத்தை பன்முக அலைநீள செயற்கைக்கோளான (Multi-Wavelength Satellite) ‘Astro Sat’ கண்டறிந்துள்ளது.
  - இந்த நட்சத்திரக் கூட்டம் புவியிலிருந்து 9.3 பில்லியன் ஒளியாண்டு தூரத்தில் உள்ளது.

- **‘Arrow-2’ என்ற ஒரு மேம்பட்ட ஏவுகளை பாதுகாப்பு முறைமையை இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் இணைந்து வெற்றிகரமாக சோதனை செய்துள்ளன.**

APPOLO STUDY CENTRE

# மாநாடுகள் மற்றும் உச்சிமாநாடுகள்

**BRICS:**

- **BRICS** போதை மருந்து எதிர்ப்பு பணிக்குழுவின் நான்காவது கூட்டத்திற்கு ரஷ்யா தலைமை ஏற்றது. காணொளிக்காட்சி மூலமாக நடத்தப்பட்ட இந்த அமர்வில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். போதை மருந்து கட்டுப்பாட்டுக் கழகத்தின் தலைமை இயக்குநர் ராகேஷ் அஸ்தனா இந்தியப் பிரதிநிதிகளுக்கு தலைமை வகித்து அக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

- ஐந்தாவது மெய்நிகர் **BRICS** தொழில் அமைச்சர்கள் கூட்டத்தில் சோம் பிரகாஷ் உரையாற்றினார்.

    - 5-G மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்றவற்றை உள்ளடக்கி பல்வேறு களங்களில் உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஆகஸ்ட்-24,2020ல் காணொளிக்காட்சி மூலமாக இம்மாநாடு நடத்தப்பட்டது.
    - இம்மாநாட்டில், வர்த்தகம் மற்றும் தொழிலுக்கான மத்திய அமைச்சர் சோம் பிரகாஷ் பங்கேற்றார்.
    - BRICS-ன் தற்போதைய தலைமை நாடான ரஷ்யா-வால் செப்டம்பர்,2020ல் BRICS வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது

- ரஷ்யாவின் தலைமையின்கீழ் 6-வது **BRICS (Brazil, Russia, India, China and South Africa)** சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டத்தில், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் பங்கேற்றுள்ளார். இந்தியா 2021ல் **BRICS**-ன் தலைமையை ஏற்கும்.

**ASEAN:**

- இணக்கமான மற்றும் பொறுப்பான ஆசியானின் **(Cohesive and Responsive ASEAN)** மையக்கருத்துடன் வியட்நாம் பிரதமர் **Nguyen Xuan Phuc** என்பவரின் தலைமையின்கீழ் காணொளிக்காட்சி மூலமாக 36-வது **ASEAN** உச்சிமாநாடு நடத்தப்பட்டது.

- ஆகஸ்ட்-27,2020ல் நடைபெற்ற **ASEAN**-இந்திய மெய்நிகர் வர்த்தக கவுன்சில் கூட்டத்தில் வர்த்தகம் மற்றும் தொழிலுக்கான மத்திய அமைச்சர் பியுஸ் கோயல் உரையாற்றினார்.

- மெய்நிகர்ரீதியாக நடத்தப்பட்ட எட்டாவது கிழக்காசிய உச்சிமாநாட்டில் (பொருளாதார அமைச்சர்களின் கூட்டம்) மத்திய அமைச்சர் பியுஸ் கோயல் பங்கேற்றுள்ளார்.

- இந்தக் கூட்டத்தில், ASEAN-ன் பத்து உறுபபு நாடுகளைத் தவிர, இந்தியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், தென்கொரியா, ரஷ்யா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய எட்டு நாடுகளும் பங்கேற்றன.
- இந்த கிழக்காசிய உச்சிமாநாடு-2020க்கு, வியட்நாம் நாட்டின் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் டிரான் டுவான் ஆன் தலைமை வகித்தார்.

**மற்றவை:**

- **மே-13,2020 சாங்காய் கூட்டுறவு அமைப்பின் (Shanghai Cooperation Organization – SCO) வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றுள்ளது.**

  - 8-உறுப்பினர் கொண்ட இக்கூட்டம் காணொளிக்காட்சி மூலமாக நடந்தது மற்றும் இக்கூட்டம், தற்போதைய தலைமை நாடானா ரஷ்யா-வால் கூட்டப்பட்டது.
  - அக்கூட்டத்தில், சீனா மற்றும் பாகிஸ்தான் உள்ளடங்கிய அனைத்து 8-நாடுகளிலிருந்தும் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்றனர்.

- **காணொளிக்காட்சி மூலமாக மே-18,2020இல் நடைபெற்ற 73-வது உலக சுகாதார சபையில் (World Health Assembly) இந்தியாவை மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் பிரதிபலித்தார்.**

  - உலக சுகாதார அமைப்பின் (WHO) முடிவாக்கம் மேற்கொள்ளும் அமைப்பாக இந்த உலக சுகாதார சபை (WHA) உள்ளது.

- **ஐ.நா.வின் வருடாந்திர காலநிலை மாநாடு 2021ல் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது.**

- **அஜர்பைசான் குடியரசுத்தலைவரால் நடத்தப்பட்ட 'COVID-19 க்கு எதிராக இணைவோம்' (United against COVID-19) என்ற கருத்து மீதான அணிசேரா இயக்க (Non–aligned Movement -NAM) தொடர்புக்குழுவின் ஆன்லைன் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்றுள்ளார்.**

- **கோரானா தொற்றை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்த உலக எண்ணியல் பதிவேடுக்கான G-20 எண்ணியல் அமைச்சர்கள் உச்சிமாநாடு கூட்டப்பட்டது. இதில் நிலையான பொருளாதார மற்றும் சமூக நிலையை உருவாக்குவது இந்நாடுகளின் பொறுப்பாகும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.**

- **செப்டம்பர் 2020வரை G-7 உச்சிமாநாட்டை அமெரிக்கா ஒத்திவைத்துள்ளது.**

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் செப்டம்பர் 2020வரை G-7 உச்சிமாநாட்டை ஒத்திவைத்துள்ளார்.
- ரஷ்யா, ஆஸ்திரேலியா மற்றும் தென்கொரியா ஆகிய மூன்று நாடுகள் மற்றும் இந்தியா போன்ற உலகின் சிறந்த பொருளாதார நாடுகளை உள்ளடக்கி, G-7 அமைப்பை G-10 (அ) G-11 என்று விரிவாக்கம் செய்வதற்கு அவர் விரும்பினார்.
- தற்போது G-7 அமைப்பில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மற்றும் இங்கிலாந்து ஆகிய 7-நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

❖ **உலக பொருளாதார அமைப்பின் (World Economic Forum) 51-வது உச்சிமாநாடு தாவோசில் 2021இல் கூட்டப்படவுள்ளது.**

- கொரானா தொற்றை மனதில் வைத்துக்கொண்டு உலக பொருளாதார அமைப்பின் 51-வது உச்சிமாநாடு தள்ளிப்போடப்பட்டுள்ளது.
- சிறந்த மீட்புக் (The Great Reset) கருத்துடன் ஜனவரி-2021இல் உலக சுகாதார அமைப்பின் ஒரு விநோத இரட்டை உச்சிமாநாடு (A Unique Twin Summit) கூட்டப்படவுள்ளது.

❖ **இங்கிலாந்தால் தலைமை வகிக்கப்பட்ட உலக தடுப்பூசி மாநாட்டில் (Global Vaccine Summit) பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றுள்ளார்.**

- தடுப்பூசிகள் மற்றும் தடுப்பு மருந்திற்கான உலகக் கூட்டமைப்பிற்கு (Global Alliance for Vaccines and Immunization – GAVI) 15-மில்லியன் அமெரிக்க டாலரை இந்தியா வழங்கும் என்று அந்த உச்சிமாநாட்டில் பிரதமர் அறிவித்துள்ளார்.

❖ **இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரீசன் ஆகிய இருவரும் இணைந்து இந்தியாவின் முதலாவது மெய்நிகர் இருதரப்பு உச்சிமாநாட்டை கூட்டியுள்ளனர்.**

- ஆஸ்திரேலியாவுடன் நல்லுறவை ஏற்படுத்தி மற்றும் அதனைப் பலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் வாய்ந்த இந்த இருதரப்பு மெய்நிகர் உச்சிமாநாட்டை (Bilateral Virutual Summit) பிரதமர் நரேந்திர மோடி நடத்துவது இதுவே முதல்முறையாகும்.

❖ **சீனா மீதான நாடுகளுக்கிடையேயான பாராளுமன்ற கூட்டு (Inter-Parlimentary Alliance)**

- இக்கூட்டு, ஜப்பான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜெர்மனி, லிதுவேனியா, நார்வே, நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளால் அமைக்கப்பட்டதாகும்.
- சீனா தொடர்பாக விவாதிக்கப்பட்ட உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஐரோப்பிய யூனியனும் பங்கேற்றது.

❖ **மெய்நிகர் ரீதியான இந்திய உலக வாரம்-2020 (India Global Week-2020) என்ற மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தொடக்க உரையாற்றினார்.**

- இது இங்கிலாந்தில் கூட்டப்பட்ட ஒரு மெய்நிகர் மாநாடாகும்.
- "மறுமலர்ச்சியாக திகழ்க: இந்தியாவும் ஒரு சிறந்த புதிய உலகமும்" (Be The Revival: India and a Better New World) என்ற மையக்கருத்துடன் தொடங்கப்பட்ட இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து 5000-பேர் பங்கேற்றனர் மற்றும் 75-அமர்வுகளில் 250-உலக அளவிளான நிபுணர்கள் உரையாற்றினர்.

❖ **காலநிலை செயல்பாடு மீதான நான்காவது மெய்நிகர் அமைச்சகம் மாநாட்டில் பிரகாஷ் ஜவடேஷ்கர் பங்கேற்றுள்ளார்.**

❖ **மூன்றாவது G-20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் (Finance Ministers and Central Bank Governors - FMCBG) கூட்டம் சவுதி அரேபிய தலைமையின் கீழ் காணொளிக்காட்சி மூலமாக நடத்தப்பட்டது. இந்தியா சார்பாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அதில் கலந்துகொண்டார்.**

❖ **"வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தி தொழில்நுட்பங்கள்" (Aerospace and Defence Manufacturing Technologies) மீதான ஐந்தாவது மாநாட்டை மத்திய அமைச்சர் ஸ்ரீபத் யசோநாயக் தொடங்கி வைத்தார்.**

- இம்மாநாடு, "Aatma Nirbhar Bharat Mission" உடனான 'அதிகாரத்துவம் அடையும் இந்தியா' என்ற மையக் கருத்துடன் நடத்தப்பட்டது.
- இம்மாநாட்டை, இந்திய பாதுகாப்பு உற்பத்திசெய்வோர் சங்கம் (Society Indian Defence Manufacturers – SIDM) மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry – CII) ஆகிய இரண்டு அமைப்புகளுடன் இணைந்து, தமிழ்நாடு தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (Tamil Nadu Technology Development & Promotion Centre – TNTDPC) ஏற்பாடு செய்துள்ளது.

❖ **மெய்நிகர் ரீதியான இந்திய-அமெரிக்க யுக்தி ஆற்றல் பங்காண்மையின் (Strategic Energy Partnership – SEP) இரண்டாவது அமைச்சகக் கூட்டத்தில் தர்மேந்திரப்**

பிரதான் மற்றும் டான் பிரௌளலிட்டி ஆகிய இருவரும் இணைந்து தலைமை வகித்தனர்.

- ❖ இந்தியக் கொள்கைகள் உச்சி மாநாடு (India Ideas Summit), ஜுலை-21-22,2020ல் அமெரிக்க இந்திய வர்த்தக கவுன்சிலால் (US-India Business Council – USIBC) நடத்தப்பட்டது. ‘சிறந்த எதிர்காலத்தை உருவாக்குதல்’ என்பது இந்த உச்சிமாநாட்டின் மையக்கருத்தாகும்.

- ❖ ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank –AIIB) இயக்குநர்கள் வாரியத்தின் மெய்நிகர்ரீதியான ஐந்தாவது வருடாந்திரக் கூட்டத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். இக்கூட்டத்தின் மையக்கருத்து ‘அடுத்த பத்தாண்டுகளுக்கு ஆசியாவின் மேம்பாட்டுக்கு ஆதரவளிப்பதாகும்’.

- ❖ பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் புதுடெல்லியில் மூன்று நாட்கள் நடைபெறும் இந்திய விமானப்படை தளபதிகள் மாநாட்டை தொடங்கி வைத்துள்ளார். ‘அடுத்த பத்தாண்டில் இந்திய விமானப்படை’ என்பது இம்மாநாட்டின் மையக்கருத்தாகும்.

- ❖ இந்தியா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளும் மெய்நிகர் ரீதியாக 14-வது கூட்டுப் பொருளாதாரம் மற்றும் வர்த்தகக்குழு கூட்டத்தை ஜுலை-24,2020ல் நடத்தியது.

- ❖ இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry- CII) என்ற அமைப்பு “Easing Doing Business For Aatma Nirbhar Bharat” மாநாட்டை நடத்தியுள்ளது.
    - ➢ வர்த்தகம் மற்றும் தொழிலுக்கான மத்திய அமைச்சர் பியுஸ் கோயல் தேசிய எண்ணியல் மாநாடு தொடர்பான இம்மாநாட்டை தொடங்கிவைத்தார்.
    - ➢ இம்மாநாடு, இந்தியாவின் வர்த்தக சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு முதலீடு மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டிற்கான துறையுடன் (Department for Promotion of Investment and Internal Trade – DPIIT) இணைந்து இந்தியத் தொழில் கூட்டமைப்பால்(CII) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- ❖ மெய்நிகர் ரீதியாக பாராளுமன்ற சபாநாயகரின் ஐந்தாவது உலக மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாடு ஆகஸ்ட்-20,2020ல் நடத்தப்பட்டது. சிறந்த உலகை ஏற்படுத்தி பன்னாட்டு ஒத்துழைப்பை பலப்படுத்தும் பிரதான நோக்கத்துடன் இம்மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டின் தொடக்க விழாவில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா பங்கேற்றார்.

- காணொளிக்காட்சி மூலமாக புதுடெல்லியில் ஆகஸ்ட்-8,2020ல் **'India@75 Summit Mission 2022'** ல் தரைவழிப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைக்கான மத்திய அமைச்சர் நிதின் கட்கரி உரையாற்றினார்.

- மெய்நிகர் ரீதியாக ஆகஸ்ட்-17,2020ல் வர்த்தகம் மீதான இந்தியா-ஐக்கிய அரபு எமிரேட் கூட்டு ஆணையக் கூட்டத்தின் **(Joint Commission Meeting – JCM)** 13-வது அமர்வு நடத்தப்பட்டது.

- கடல்வழிப் பாதுகாப்புக் கூட்டுறவின் மீதான கவனத்துடன் 14-வது இந்திய-சிங்கப்பூர் பாதுகாப்புக் கொள்கைப் பேச்சுவார்த்தை **(Defence Policy Dialogue – DPD)** நடத்தப்பட்டது. இப்பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கிடையேயான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை பலப்படுத்தும் நோக்கத்தில் மெய்நிகர் ரீதியாக ஆகஸ்ட்-28,2020ல் நடத்தப்பட்டது.

- இமயமலையின் உயரந்த பகுதிகளில் நீர் ஆதாரங்கள் மற்றும் உயிர் வாழ்வினங்கள் மீதான தூசிக் காற்று தன்மை, காலநிலை மாற்றம் மற்றும் தாக்கம் **(Aerosol Air Quality, Climate Change and Impact on Water Resources and Livelihoods in the Greater Himalayas)** மீதான பன்னாட்டு மாநாடு நைனிடாலில் செப்டம்பர்-2020ல் நடத்தப்படவுள்ளது.

APPOLO STUDY CENTRE

# பாதுகாப்பு

- சமுத்திர சேது (Samudra Setu) என்றழைக்கப்படுகின்ற பிரதான மீட்பு செயல்பாட்டின் முதல் கட்டத்தின் கீழ் இரண்டு யுத்தக் கப்பல்கள் (INS Jalashwa & INS Magar) மூலம் மாலத்தீவிலிருந்து ஏறக்குறைய 1000-சிக்கித் தவிக்கும் இந்தியர்களை கொண்டுவருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
  - இந்த செயல்பாடு இந்தியக் கப்பற்படையால் மே-5,2020ல் தொடங்கப்பட்டது.

- சாகர் திட்டம்:
  - கொரானா பரவுவதால் இந்தியப் பெருங்கடலிலுள்ள 5-தீவு நாடுகளுக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அனுப்புவதற்கு இத்திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது.
  - ஹைட்ராக்ஸிகுளோரைன் (HCQ) மாத்திரைகள், சிறப்பு ஆயுர்வேத மருந்துகள் மற்றும் மருத்துவ குழுக்கள் உள்ளடங்கிய COVID-19 தொடர்பான மருந்துகள் மற்றும் உணவுப்பொருட்களை, மாலத்தீவு, மொரீசியஸ், ஜெய்சல்ஸ், மடகாஸ்கர் மற்றும் கோமராஸ் ஆகிய ஐந்து தீவு நாடுகளுக்கு இந்தியக் கப்பற்படைக்கப்பல் 'கேசரி' கொண்டு சென்றது.

- பாதுகாப்பு சோதனைக் கட்டுமானத் திட்டத்தை (Defence Testing Infrastructure Scheme – DTIS) தொடங்குவதற்கு மே-15,2020இல் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

- தமிழ்நாட்டில் சூலூரில் அமைந்துள்ள இந்திய விமானப்படையின் 18-ம் படைப்பிரிவான Flying Bullets மே-27ல் தேஜாஸ் (Tejas) என்ற Light Combat Aircraft – LCA நாட்டிற்குள்ளேயே இயக்கப்படும் இரண்டாவது போர்விமானமாகும்.

- இந்திய விமானப்படை மே-27ல் தேஜாஸ்-MK1 என்ற முதலாவது Light Combat Aircraft ஐ செயல்பாட்டிற்குள் முறைப்படியாக புகுத்தியுள்ளது.

- இந்திய விமானப்படை சமீபத்தில் தனிப்பட்ட போக்குவரத்திற்கான வான்வெளி மீட்புப் கோதுவை (Airborne Rescue Pod for Isolated Transportation – ARPIT) மீட்புப் பணிக்காக உருவாக்கியுள்ளது. இந்தக் கோது(Pod) கொரானாவால் பாதிக்கப்பட்டுள்ள சிக்கலான நோயாளிகளை மீட்பதற்கு பயன்படுகிறது.

- பூனேயில் அமைந்துள்ள மேம்பட்ட தொழில்நுட்பத்தின் பாதுகாப்பு நிறுவனம் (Defense Institute of Advanced Technology – DIAT), கொரானாவுக்கு

**எதிரான தொற்றுநீக்கத் தெளிப்பான் அடிப்படையிலான நானோ தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. இந்தத் தெளிப்பான் ANANYA எனப் பெயரிடப்பட்டுள்ளது.**

- **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO), 'GermiKlean' என்ற ஒரு சுத்திகரிப்பு அறையை ஏற்படுத்தியுள்ளது. இது பாதுகாப்பு மற்றும் காவல்துறை அலுவலர்களின் சீருடைகளை சுத்திகரிப்பதற்கு உதவுகிறது.**

- **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO), 'Ultra Swachh' என்று அழைக்கப்படும் ஒரு தொற்றுநீக்க அலகை உருவாக்கியுள்ளது. இந்த அலகு மின்னணுப்பொருட்கள், தனிப்பட்ட பாதுகாப்புக்கருவிகள் போன்ற பொருட்களை தொற்றுநீக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது.**

- **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO), தனிப்பட்ட பாதுகாப்புக்கருவி அணிகலன்களின் வியர்வையைக் குறைப்பதற்கு உதவும் 'SUMERU PACS' என்பதை உருவாக்கியுள்ளது.**

- **முதலாவது ரபேல் போர்விமானம் இந்திய விமானப்படையில் இணைகிறது.**
  - பிரெஞ்ச் டாசெல்ட் விமானப்போக்குவரத்தின் ரபேல் போர்விமானம் ஜுலை-2020 வாக்கில் இந்தியா வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
  - இவ்வகையான போர்விமானம் இந்திய விமானப்படையிலுள்ள போர்விமானங்களுடன் எளிதில் ஒருங்கிணைக்கப்படும்.

- **சமுத்தர சேது செயல்பாட்டின் இரண்டாவது கட்டம் தொடங்கியுள்ளது.**
  - இந்தியக் கப்பற்படைக்கப்பல் 'INS Jalashwa' ஜுன்-1,2020ல் ஸ்ரீலங்காவிலுள்ள கொழும்பு துறைமுகத்திலிருந்து ஏறக்குறைய 700-இந்தியர்களை தமிழ்நாட்டிற்கு கொண்டுவரப் புறப்பட்டது.
  - இது, வந்தே பாரத் திட்டத்தின் ஒரு பகுதியான சமுத்திர சேது செயல்பாட்டின் முதல் கட்டமாகும்.
  - ஏற்கனவே, இந்திய கப்பற்படைக்கப்பல் 1488-இந்தியர்களை மாலியிலிருந்து கொச்சிக்கு கொண்டுவந்தது.

- **இந்திய-சீன எல்லைப்பகுதியான கால்வான்வேலி பகுதியில் ஜுன்-15,2020ல் 20-இந்திய வீரர்கள் சீன வீரர்களால் கொள்ளப்பட்டனர். இவ்விடம் லடாக்கிலுள்ள பாஹோம் ஏரிக்கு அருகிலுள்ளது. கடந்த 45-வருடங்களில் இதுவே இந்தியா-சீனா இடையேயான முதலாவது மோசமான மோதலாகும். அந்த மோதலில் ஏறக்குறைய 43-சீன வீரர்கள் காயமடைந்தனர்.**

- **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO), IIT–ஹைதராபாத்தில் அதன் ஆராய்ச்சிப்பிரிவை அமைக்கவுள்ளது.**

- **இந்திய விமானப்படை, MI-17 ஹெலிகாப்டர்கள் மீதான வான்வழி வெட்டுக்கிளி கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்கியுள்ளது.**

- **இராணுவத்திற்கு கருவிகள் வாங்கும் அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியுள்ளது. இதன்மூலம், ரூ.300-கோடி அளவிற்கு இராணுவத் தளவாடங்களை வாங்கிக்கொள்ளலாம்.**

- **ஓரிசாவின் சந்தீப்பூரிலுள்ள ஒருங்கிணைந்த சோதனை வளாகத்திலிருந்து "Dhruvastra" என்ற டாங்க் எதிர்ப்பு ஏவுகணையை DRDO-வெற்றிகரமாக சோதனை செய்தது.**

- **PASSEX – Passing Exercise.**

  - ஜுலை-20,2020ல் அந்தமான்-நிக்கோபார் தீவுகள் அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் அமெரிக்க கப்பற்படை மற்றும் இந்திய கப்பற்படை ஆகிய இரண்டும் இணைந்து PASSEX என்ற கடல்சார் பயிற்சியை மேற்கொண்டன.

- **DRDO-வின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்ட சீன எல்லைப்பகுதியின் வழியாக தெளிவான கண்காணிக்கக்கூடிய 'Bharath Trone' ஐ இந்திய இராணுவம் பெற்றுள்ளது.**

- **ரபேல் போர்விமானங்களின் முதல் பிரிவு அம்பாலாவை வந்தடைந்துள்ளது மற்றும் அது வெகுவிரைவில் இந்திய விமானப்படைக்குள் புகுத்தப்படவுள்ளது. ஏற்கெனவே செப்டம்பர்-23,2016ல் ரூ.59,000-கோடி மதிப்பீட்டில் 36-ரபேல் போர்விமானங்களை வாங்குவதற்கு இந்தியாவும், பிரான்சும் ஒப்பந்தம் மேற்கொண்டன.**

- **'ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்தை' மேம்படுத்துவதற்கு 101-பாதுகாப்புப் பொருட்களின் இறக்குமதியை இந்திய அரசாங்கம் தடைசெய்துள்ளது.**

  - 'ஆத்ம நிர்பார் பாரத் அபியான்' என்பது சுயசார்பு இந்திய இயக்கமாகும். இதை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். அதன்படி 101-வெளிநாட்டுப் பாதுகாப்புப் பொருட்களின் இறக்குமதியை மத்திய அரசு தடைசெய்துள்ளது.
  - அவ்விதப் பொருட்கள் இந்தியாவிற்குள் செய்ய முற்பட்டால் ஏறக்குறைய 6-லிருந்து 7-வருடங்களாகும் மற்றும் நாட்டிற்கு ரூ.4-லட்சம்கோடி லாபம் கிடைக்கும் என மதிப்பிடப்படுகிறது.

- **ICG-யின் நான்காவது கடலோர ரோந்துக்கப்பல் 'Sarthak' தொடங்கப்பட்டுள்ளது.**

❖ **கேரளாவில் முதலாவது கடல்சார் மருத்துவ வாகனப்படகு ‘PRATHEEKSHA’ தொடங்கப்பட்டுள்ளது. ‘Prathyasha’ மற்றும் ‘Karunya’ என்ற மற்ற இரண்டு கடல்சார் மருத்துவ வாகனப்படகுகளும் அதே நாள் தொடங்கப்பட்டுள்ளன.**

❖ **பொருளாதார வெடிபொருள்கள் நிறுவனத்தால் (Economic Explosives Ltd – EEL) உற்பத்தி செய்யப்பட்ட First Pinaka Rockets–களை வெற்றிகரமாக DRDO சோதனை செய்துள்ளது.**

❖ **ரஷ்யாவில் நடத்தப்படவுள்ள ‘Kavkaz 2020’ என்ற பலதரப்பட்ட ராணுவப் பயிற்சியிலிருந்து இந்தியா விலகிக்கொள்கிறது.**

- ‘Kavkaz-2020’ என்ற பலதரப்பட்ட ராணுவப்பயிற்சி தெற்கு ரஷ்யாவின் அஸ்ட்ராகான் பிராந்தியத்தில் நடத்தப்படவுள்ளது.
- அது, ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் (SCO) உறுப்புநாடுகள் மற்றும் மத்திய ஆசிய நாடுகள் பங்கேற்கவுள்ளன.

APPOLO STUDY CENTRE

# பொருளாதாரம்

- மார்ச் 31, 2021 வரை TDS (மூலத்தில் கழிக்கப்படும் வரி) மற்றும் TCS (மூலத்தில் வசூலிக்கப்படும் வரி) 25% குறைக்கப்பட்டுள்ளது.
    - இந்த முடிவு ரூ 50000 கோடிக்கும் மேல் பணப்புழக்கத்தை அதிகரித்து பொது மக்களுக்கு பயனளிக்கும் வகையில் இருக்கும்.
    - கடந்த நிதியாண்டிற்கான வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்வதற்கான தேதியும் நவம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**ஆத்ம நிர்பார் பாரத் அபியான் பேக்கேஜ்:**

- மத்திய அரசு ”ஆத்ம நிர்பார் பாரத் அபியான் பேக்கேஜ்” என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் ”வேலைக்குத் திரும்புவது” (Getting back to work) என்பதில் கவனம் செலுத்தகின்றன. இத்திட்டம் ஊழியர்கள், முதலாளிகள் மற்றும் வணிகங்கள் ஆகியோரை உற்பத்திக்குத் திரும்பவும், தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்பைப் பெறவும் உதவுகிறது.
    - 73.46 பில்லியன் (18%) FDI 2020 நிதியாண்டில் அதிகரித்துள்ளன.
- 2019 – 2020 நிதியாண்டிற்கான அந்நிய நேரடி முதலீடு (FDI) 73.46 பில்லியன் டாலர் (18%) அதிகரித்துள்ளது.
- உலக வங்கி 400 மில்லியன் டாலர் நிதி உதவியை இந்தியாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் இந்தியாவின் கடலோர வளங்களை மேம்படுத்தவும், கரையோர மக்களை மாசுபாடு, அரிப்பு மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கவும், கடலோர சமூகங்களுக்கு வாழ்வாதாரம் வாய்ப்புகளை மேம்படுத்தவும் உதவுகிறது.
- புதிய மேம்பாட்டு வங்கி (NDB) யின் 1 பில்லியன் டாலர் “அவசர உதவித் திட்டக் கடன்“ இந்தியாவிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கோவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்தவும் இந்த ”அவசர உதவித் திட்டக் கடன்” இந்திய அரசுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா கோவிட் - 19 அவசரகால பதில் மற்றும் சுகாதார அமைப்புகள் தயாரிப்பு திட்டத்திற்கு ”ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) 500 மில்லியன் டாலர் கடனை இந்தியாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- நிதித் தேவைகளை பூர்த்தி செய்ய தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) க்கு ரூ 25000 கோடி மறுநிதியுதவி வசதியை RBI வழங்கியது. இது மண்டல கிராமப்புற வங்கிகள் (RRB), கூட்டுறவு வங்கிகள் மற்றும் சிறு பொருளுதவி நிறுவனங்களுக்கு (MFI) ஆகிய வங்கிகளுக்கு மறுநிதியுதவி அளிக்கப்படும்.

- மைக்ரோ சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) பங்குதாரர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஒரு டிஜிட்டல் தளத்தை ”இந்தியா எஸ்எம்இ (SME) சேவை தளம் (India SME Services platform) சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தியாவில் நிதி உள்ளிணையை (Financial inclusion) மேம்படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான உதவியாளர் pai-யை இந்தியத் தேசிய கொடுப்பனவு நிறுவனம் (NPCI) அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்திய பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையத்தின் படி (CHIE) இந்தியாவின் வேலையின்மை 27.11% விகிதம் அதிகரித்துள்ளது.

- அரிசி ஏற்றுமதிக்கு உத்வேகம் அளிப்பதற்காக வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) உதவியுடன் அரிசி ஏற்றுமதி ஊக்குவிப்பு மன்றம் (REPF) என்ற புதிய அமைப்பை மத்திய அரசு அமைத்துள்ளது.

- நிதி நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சிக் குழுவின் (FSDC) கூட்டத்திற்கு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை தாங்கினார். தற்போதைய உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பெரும் - பொருளாதார நிலைமை, நிதி நிலைத்தன்மை மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய விஷயங்கள், ஒழுங்குமுறை அளவிலான பதில் நடவடிக்கைகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள், சிறு கடன் நிறுவனங்களின் பணப்புழக்கம் மற்றும் இதர தொடர்புடைய விஷயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

- RESTART – என்னும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மொழி பெயர்ப்புகள் மூலம் பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்டுவது தொடர்பான உயர் மட்ட டிஜிட்டல் மாநாடு அறிவியல் தொழில்நுட்பத் துறையின் சட்டப்பூர்வ அமைப்பான தொழில்நுட்ப வளர்ச்சி வாரியம் (TDB) மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (CII) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- MSME – ன் புதிய வரையறையை மத்திய குறு, சிறு நடுத்தரத் தொழில் அமைச்சகம் மீண்டும் மாற்றி அமைக்கப்பட்டது. இதற்கு முன் மத்திய நிதி அமைச்சர், ஆத்ம நிர்பார் பாரத் - சுயசார்பு இந்தியா பொருளாதாரத் தொகுப்பு அறிவிக்கப்பட்ட போது MSME நிறுவனங்களுக்கான வரையறையில் திருத்தமும் அறிவிக்கப்பட்டது.

- MSME நிறுவனங்களுக்கான புதிய வரையறை மூலதனம் (capital) மற்றும் வர்த்தகம் (Turnover) ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இருக்கும்.

| வகைகள் | புதிய மூலதனம் | புதிய வர்த்தகம் | பழைய மூலதனம் | பழைய வர்த்தகம் |
|---|---|---|---|---|
| குறு | 1 கோடி | 5 கோடி | 25 லட்சம் | 10 லட்சம் |
| சிறு | 10 கோடி | 50 கோடி | 5 கோடி | 2 கோடி |

| | | | | |
|---|---|---|---|---|
| நடுத்தர | 50 கோடி | 250 கோடி | 10 கோடி | 5 கோடி |

**SWADES; வேலைவாய்ப்பு உதவிக்காக திறன்வாய்ந்த பணியாளர்கள் வருகைத் தகவல் தளம்:**

- தற்போதைய பெருந்தொற்றின் காரணமாக நாடு திரும்பும் திறன்வாய்ந்த பணியாளர்களை சிறப்பாகப் பயன்படுத்தி கொள்ளும் நோக்கில், SWADES – என்னும் வேலைவாய்ப்பு உதவிக்காக திறன்வாய்ந்த பணியாளர்கள் வருகை தகவல் தளத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது.

- இந்த தகவல் தளம் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைதல் அமைச்சகம், விமானப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் கூட்டு முயற்சி ஆகும்.

- கட்டுமானத் துறையில் முதன் முதலில் (முழுமையாக டிஜிட்டல்" நிறுவனமாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NAAI) ஆகும்.

- ஆசிய அபிவிருத்தி வங்கி மின் (ABD) ஆசிய அபிவிருத்தி மேற்பார்வை என்ற அறிக்கையில் 2020 – 21 ம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 4 சதவிகிதம் சுருங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- 2020 – ஆம் ஆண்டின் இந்தியாவின் பொருளாதாரம் 4.5 சதவீகிதம் சுருங்கும் என் சர்வதேச நிதி நாணயம் கணிக்கப்பட்டுள்ளது. இது வரலாறுகாணாத வீழ்ச்சி ஆகும்.

- 2040-க்குள் நிகர பூஜ்ஜிய கார்பனாக மாற வேண்டும் (Net zero carbon) என்று அமேசான் மற்றும் குளோபல் ஒப்டிசிம் நிறுவனத்துடன் முதல் இந்திய நிறுவனமாக இன்ஃபோசிஸ் (Infosys) காலநிலை உறுதிமொழி (climate pledge) கையெழுத்திட்டது.

**தூய்மையான எரிசக்திப் பொருளாதாரம்:**

- கோவிட்டுக்குப் பிந்தைய காலத்தில் எரிசக்தி மற்றும் போக்குவரத்துத் துறைகளில் இந்தியாவுக்கான வாய்ப்புகள் என்ற தலைப்பிலான அறிக்கையை நிதி ஆயோக் அமைப்பும், ராக்கி மவுன்டெயின் கல்வி நிறுவனமும் வெளியிட்டது.

**சிறப்பு நிதி ஒட்டத் திட்டம் (Special Liquidity scheme)**

- சிறப்பு முகமை மூலம் (Special purpose vehicle) வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் வீட்டுக்கடன் நிறுவனங்களின் பணப்புழக்க சிக்கலைக்களை தீர்வு காணும் வகையில் சிறப்பு நிதித் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) NGFS – ல் சேர்ந்தது:**

- பசுமையாக்குவதற்கான நிதி அமைப்பு நெட்வொர்க்கின; (NGFS) பார்வையாளராக ADB ஆனாது. இதன் மூலம் காலநிலை மாற்றத்தை கையாள்வது, காலநிலை மற்றும் பேரழிவு பின்னடைவை உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துதல், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை வளர்ப்பது, ஆட்சி மற்றும் நிறுவன திறனை வலுப்படுத்துதல் போன்ற NGFS பணிகளை ஆதரிக்கும்.

- கோவிட் - 19 நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (M.S.M.E) அதிக நிதி கிடைக்கச் அவசரகால நிதியுதவித் திட்டத்திற்கு இந்திய அரசுக்கும் உலக வங்கிக்கும் இடையில் 7590 மில்லியன் டாலர் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

- இந்திய பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையத்தின் (MIE) படி 2020 ஆண்டின் ஜீன் மாதத்தில் இந்தியாவின் வேலையின்மை 10.9% இருக்கிறது. (நகர்ப்புற 12.02%, கிராமப்புற – 10.52%)

- சூரிய மற்றும் வெப்ப மின் சொத்துக்களை 5000 மொகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்வதற்காக என்.எல்.சி. (NLC) இந்தியாவும் கோல் இந்தியாவும் கூட்டு துணிகர ஒப்பந்தத்தை நிறைவேற்றியது.

**அடுத்த 5.7 ஆண்டுகளில் இந்தியாவில் ரூ 75000 கோடி முதலீடு செய்வதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.**

- ஜீலை 13, 2020 அன்று கூகுள் ∴பார் இந்தியா மெய்நிகர நிகழ்வின் ஆறாவது பதிப்பில் இந்தியாவை மின்னனுமயமாக்குவதற்காக ஆல்பாபொட் மற்றும் கூகுள் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சாய் இந்த அறிவிப்பை கூறினார்.

**2019 – 2020 நிதியாண்டின் இந்தியாவின் சிறந்த வர்த்தக நாடாக அமெரிக்கா மீண்டும் உள்ளது.**

- வர்த்தக அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2019 – 2020 நிதியாண்டில் அமெரிக்கா தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக இந்தியாவின் சிறந்த வர்த்தகம்.
- தரவுகளின்படி அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் 2018 – 19ல் 87.96 பில்லியன் டாலர்களிலிருந்து 2019 – 20ல் 88.75 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

- 2013 – 14 முதல் 2017 – 18 நிதியாண்டில் வரை இந்தியாவின் சிறந்த வர்த்தகமாக சீனா இருந்தது.

- டிஜிட்டல் பரிவர்த்தனைகளைக் கையாள ரூ 500 கோடி முதலீட்டில் ஹைதராபாத்தில் "ஸ்மார்ட் டேட்டா மையம்" (smart data centre) ஒன்றை இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI) அமைக்க உள்ளது.

**IRDAI கொரேனா கவாச் காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது:**

- ”கொரோனா கவாச்” என்பது இழப்பீட்டு அடிப்படையிலான குறுக்கிய காலம் ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டமாகும். இத்திட்டம் கொரேனா பரவல் மூலம் ஏற்படும் அதிகப்படியான செலவுகளிலிருந்து பாதுகாக்கும்.

- மத்திய அரசு 2018 – 2019 நிதி ஆண்டிற்கான வருமானவரி தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவை மேலும் இரண்டு மாதங்கள் (30th செப்டம்பர் வரை) நீடிக்கப்பட்டுள்ளது.

- இந்திய ரிசர்வ் வங்கி இலங்கைக்கு ”400 மில்லியன் அமெரிக்க டாலர் பரிவர்த்தனை வசதி” – கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- SIDBI டிரான்ஸ்யூனியன் சிபில் நிறுவனத்துடன் இணைந்து MSME நிறுவனங்களுக்கான அறிவு தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- டிரான்ஸ் யூனியன் சிபில் நிறுவனத்துடன் இணைந்து இந்திய சிறுதொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான விரிவான நிதிக் கல்வி மற்றும் ஒரு நிறுத்த அறிவு தளத்தை – MSME சாக்சம் (MSME Saksham) அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இந்த தளம் அவர்களின் கடன் கடமைகளை நிர்வகிப்பதில், தடையற்ற மற்றும் விரைவான நிதியை அணுக வழிகாட்டவும் ஆதரவளிக்கும்.

- ரிலையன்ஸ் மற்றும் ஜப்பானிய எரிசக்தி நிறுவனமான ஜெரா வங்காள தேசத்தில் தங்கள் புதிய எரிவாயு எரிபொருள் வெப்ப மின் உற்பத்தி திட்டத்திற்காக மொத்த நிதியுதவிக்காக ஒரு வங்கி குழுவுடன் ஒப்பந்தம் செய்துள்ளன.

**நிதி ஆயோக் தன்னார்வ தேசிய மீளாய்வு – 2020 அறிக்கையை சமர்ப்பித்துள்ளது:**

- நிலைத்த வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட அரசியல் மன்றம் (HLPF) 2020ல், இந்தியாவின் 2-வது தன்னார்வ தேசிய மீளாய்வு அறிக்கையை (VNR) அறிக்கையை நிதி ஆயோக் சமர்ப்பித்துள்ளது.

- ”செயல்பாடுகள் நிறைந்த பத்தாண்டு: நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளை சர்வதேச அளிவிலிருந்து உள்ளூர் மட்டத்திற்கு கொண்டு செல்லுதல்” என்ற தலைப்பில், 2030 நிகழ்ச்சி நிரலை இந்தியாவில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்திய. பற்றிய விரிவான தகவல்களை இந்த அறிக்கையில் உள்ளது.

- கொரோனா வைரஸ் நோயின் கடுமையான பொருளாதார தாக்கத்தை எதிர்கொள்ளும் உறுப்பினர்களுக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் பசுமை காலநிலை நிதியம் (GCF) ”பசுமை மீட்பு” யில் கூட்டுசேர ஒப்புக் கொண்டுள்ளன.

- கோவிட் - 19 தொற்று நோய்க்கு அரசாங்கத்தின் அவசரகால பதிலை மேலும் ஆதரிப்பதற்காக அதன் ஆசிய பசிபிக் பேரிடர் மறுமொழி நிதியிலிருந்து (Aisa pacific disaster response fund) இந்தியாவுக்கு 3 மில்லியன் அமெரிக்கா டாலர் மானியம் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஒப்புதல் அளித்துள்ளது.

- ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) அறிக்கையின் படி, கோவிட் - 19 இன் பொருளாதார தாக்கம் ஆண்டு முழுவதும் நீடித்தால் 2020-ஆம் ஆண்டில் உலகளாவிய பணம் அனுப்புவது (Remittance) 108.6 பில்லியன் டாலர்களாக குறையக்கூடும்.

- இந்திய நாட்டில் முதன் முறையாக ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி செயற்கைக்கோள் தரவுயை பயன்படுத்தி (பூமியை கண்காணிக்கும் செயற்கைக்கோளின் புகைப்படங்கள்) விவசாயிகளின் கடன் தகுதியை மதிப்பிடுகிறது.

# விளையாட்டுகள்

கிரிக்கெட்:

- பன்னாட்டு கிரிக்கெட் கவுன்சில் (ICC Rank) டெஸ்ட் தரங்களில் முதலிடத்திலிருந்த இந்தியா 2016லிருந்து முதல்முறையாக மூன்றாவது தரத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. முதலிடத்தை ஆஸ்திரேலியாவும் மற்றும் இரண்டாம் இடத்தை நியூசிலாந்தும் பெற்றுள்ளன.

- இந்திய நடுவரான நித்தின்மேனன் பன்னாட்டு கிரிக்கெட் கவுன்சிலின் உயர்மட்ட நடுவர்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

- இந்தியாவின் K.N.அனந்தபத்மநாபன், ICC-யின் நடுவர்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- 233-வருட மேரிலபோன் கிரிக்கெட் மன்றத்தின் முதலாவது பெண் தலைவராக, முன்னாள் இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் தலைவர் கிளார் காணர் பொறுப்பேற்றுள்ளார்.

- 21ம் நூற்றாண்டு இந்தியாவின் மிகச்சிறந்த மதிப்புமிக்க டெஸ்ட் விளையாட்டாளராக விஸ்டன் இதழால்(Wisden Magazine) ரவீந்திர ஜடேஜா அறிவிக்கப்பட்டுள்ளார்.

- சிறந்த இந்திய டெஸ்ட் பேட்ஸ்மேனாக ராகுல் டிராவிட் ‘விஸ்டன் இந்தியா’வால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

- 143-வருட டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல்முறையாக இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் பார்வையாளரின்றி நடைபெற்றது. அதில், இங்கிலாந்து வெற்றிபெற்றது.

- ICC ஆண்கள் T-20 உலகக்கோப்பைப் போட்டியை 2021ல் இந்தியா நடத்தவுள்ளது.

- ICC ஆண்களின் T-20 உலகக்கோப்பை போட்டி 2022ல் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

- டெஸ்ட் கிரிக்கெட்டில் 500-விக்கெட்டுகளை எடுத்துள்ள 7-வது பந்துவீச்சாளராக இங்கிலாந்து கிரிக்கெட்டர் ஸ்டுவர்ட் பிராட் முன்னேறியுள்ளார். அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | பந்துவீச்சாளர் | அணி | டெஸ்ட் விக்கெட் எண்ணிக்கை |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | முத்தையா முரளிதரன் | இலங்கை | 800 |
| 2 | சான் வார்ன் | ஆஸ்திரேலியா | 708 |
| 3 | அனில் கும்ளே | இந்தியா | 619 |
| 4 | ஜேம்ஸ் ஆன்டர்சன் | இங்கிலாந்து | 589 |
| 5 | கிளன் மெக்ராத் | ஆஸ்திரேலியா | 563 |
| 6 | கோர்ட்னி வால்ஷ் | மேற்கு இந்தியத் தீவுகள் | 519 |
| 7 | ஸ்டுவர்ட் பிராட் | இங்கிலாந்து | 500 |

- டெஸ்ட் கிரிக்கெட்டில் 600-விக்கெட்டுகளை எடுத்துள்ள முதலாவது வேகப்பந்துவீச்சாளராக ஜேம்ஸ் ஆன்டர்சன்.

- T-20 கிரிக்கெட் போட்டியின் 500 விக்கெட்டுகள் எடுத்த முதல் பந்துவீச்சாளர் மேற்கு இந்தியத் தீவுகளைச் சேர்ந்த டுவைன் பிராவோ.

- தென்-ஆப்ரிக்காவின் ஜேக்கஸ் காலிஸ், ஆஸ்திரேலியாவின் லிசா ஸ்தலேகர் மற்றும் பாகிஸ்தானின் ஜாகிர் அப்பாஸ் ஆகிய மூவரும் சிறப்புமிக்க ICC-யின் புகழ்மிக்க வீரர்கள் பட்டியலில் (ICC Cricket Hall of Fame) இணைக்கப் பட்டுள்ளனர்.

கால்பந்து:

- உலகில் கொரானா வைரஸ் பரவலுக்குப்பிறகு முதலில் நடைபெற்ற விளையாட்டு ஜெர்மனியில் Bundesliga என்ற நகரில் நடைபெற்ற கால்பந்து விளையாட்டு.

- 17-வயது குறைந்தோருக்கான FIFA உலகக்கோப்பை பிப்ரவரி-21ல் இந்தியாவில் நடத்தப்படவுள்ளது.

- பெண்களின் ஆசியக்கோப்பைக்கான கால்பந்துப் போட்டியை 2022ல் இந்தியா நடத்தவுள்ளது.

  - 1979லிருந்து இவ்விளையாட்டை இந்தியா நடத்துவது இதுவே முதல்முறையாகும்.

- FIFA தரவரிசையில் இந்தியா கால்பந்து அணி 108வது இடத்தைப் பெற்றுள்ளது. பெல்ஜியம் முதலிடத்தையும், பிரான்ஸ் இரண்டாமிடத்தையும், பிரேசில் மூன்றாம் இடத்தையும், இங்கிலாந்து நான்காம் இடத்தையும் மற்றும் உருகுவே ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

- 2019-2020ம் ஆண்டுக்கான பிரிமியர்-லீக் பட்டத்தை லிவர்பூல் வென்றுள்ளது.

- முதல்முறையாக அரேபிய நாடுகளில் ஒன்றான கத்தாரில் 2022ல் FIFA உலகக்கோப்பை கால்பந்துப்போட்டி நடத்தப்படவுள்ளது.

❖ 2020ம் ஆண்டுக்கான FWA-கால்பந்து வீரர் விருதை லிவர்பூல் நிறுவனத்தின் ஜோர்டான் ஹெண்டர்சன் வென்றுள்ளார்.

சதுரங்கம்:

❖ சென்னையைச் சேர்ந்த ஆகாஸ் கணேசன் என்பவர் இந்தியாவின் 66-வது சதுரங்க கிராண்ட் மாஸ்டராக பட்டத்தை வென்றுள்ளார். இவர் தமிழ்நாட்டிலிருந்து கிராண்ட் மாஸ்டராக வந்த 24-வது விளையாட்டாளராவார்.

❖ சிவகங்கை மாவட்டத்தின் சேக்கலைக்கோட்டை கிராமத்தைச் சேரந்த 13-வயதுடைய M. பிரானேஷ் சதுரங்க விளையாட்டில் நாட்டின் தற்போதைய International Master என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

❖ 2020-FIDE ஆன்லைன் சதுரங்க ஒலிம்பியாடின் கூட்டு வெற்றியாளர்களாக ரஷ்யா மற்றும் இந்தியா அறிவிக்கப்பட்டது.

டென்னிஸ்:

❖ போர்ப்ஸ் இதழின் (Forbes Magazine) தரவரிசைப்படி உலகின் அதிகபட்ச வருமானத்தைப் பெற்ற பெண் தடகள டென்னிஸ் வீராங்கணை - நௌமீ ஒசாகா (ஜப்பான்)

❖ Fed Cup Heart Award - சானியா மிர்சா

குத்துச்சண்டை:

❖ ஆசிய விளையாட்டு குத்துச்சண்டைப் போட்டியில் நடப்பு சாம்பியனும், உலக குத்துச்சண்டைப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றவருமான இந்தியாவின் அமீத் பாங்கால் என்பவர் 52-கிலோ எடைப்பிரிவில் உலகின் நெம்பர்-1 குத்துச்சண்டை வீரர் என அறிவிக்கப்பட்டுள்ளார்.

கார் பந்தயம்:

❖ பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ்-2020 மற்றும் ஹங்கேரியன் கிராண்ட் பிரிக்ஸ்-2020 பட்டங்களை லீவிஸ் ஹேமில்டன் வென்றுள்ளார்.

தடகளம்:

❖ 2018-ஆசிய விளையாட்டுக்களின் இந்தியஅணி பெற்ற வெள்ளிப்பதக்கம், தங்கப்பதக்கமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- 2018ல் ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் 4x400 தொடர் ஓட்டத்தில் இந்தியஅணி வெள்ளிப்பதக்கம் வென்றது. அது தற்போது தங்கப்பதக்கமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- அதற்குக் காரணம் அதில் தங்கப்பதக்கம் பெற்ற பஹ்ரைன் தகுதியிழந்ததாகும்.

- **நான்கு வருடங்களுக்கு ஆசிய சேம்பியன்ஷிப் தங்கப்பதக்க வெற்றியாளர் கோமதி மாரிமுத்து தடைசெய்யப்பட்டுள்ளார்.**

- **4வது ஆசிய மாற்றுத் திறனாளிகளுக்கான இளைஞர் விளையாட்டுகள் பஹ்ரைனில் டிசம்பர்-2021ல் நடத்தப்படவுள்ளன.**

- **2022-தாக்கர் இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டு 2026ல் நடத்தப்படவுள்ளது.**

- **2021-டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டிற்குப் பின்பு 4-வது கேலோ இந்திய இளைஞர் விளையாட்டுகளை ஹரியானா நடத்தவுள்ளது.**

# விருதுகள்

❖ **சென்னை IIT-யின் வேதியியல் துறைப் பேராசிரியர் T. பிரதீப், 2020-ம் ஆண்டிற்கான நிக்கை ஆசியா விருது (Nikkei Asia Prizes), அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.**

- ➢ இவருக்கு, பிராந்திய நிலையான மேம்பாட்டு பங்களிப்பிற்கான விருதும் வழங்கப்பட்டுள்ளது.
- ➢ இவர் சமீபத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் பத்மஸ்ரீ-விருதினையும் பெற்றுள்ளார்.

❖ **தேனி மாவட்டம், தேசிய அளவில் நீர்நிலை அமைப்புகளின் நீர்ப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான 'Skoch Gold Award'-டைப் பெற்றுள்ளது.**

❖ **e – SanjeeviniOPD - திருப்பூர் மாவட்டம்.**

- ➢ இது, சுகாதார மற்றும் குடும்ப நலத்திற்கான மத்திய அமைச்சகத்திலிருந்து செயல்படும் தேசிய தொலைதூர ஆலோசனை சேவையாகும்.
- ➢ இச்சேவையில் தமிழகத்தில் திருப்பூர் மாவட்டம் முதலிடம் வகிக்கிறது.

**முதலமைச்சரின் வீரதீர பதக்க விருதுகள்:**

❖ **மாநில புலனாய்வு பிரிவில் உள்ள ஐந்து காவல் அலுவலர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர பதக்கத்தை அறிவித்துள்ளது.**

- ➢ இந்த அலுவலர்களுக்கு, அவர்களின் சிறந்த பணிக்காக தலா ரூ.5-லட்சம் பரிசாகப் பெறுவார்கள்.
- ➢ அந்த ஐந்து காவல்துறை அலுவலர்கள்.
  1. N. கண்ணன் - Deputy Inspector General of Police (Internal Security).
  2. J. மகேஷ - Superindent of Police, Q-branch.
  3. S. அரவிந்த் - SP of Special Division.
  4. P. பண்டரிநாதன் - DSP, Special Intelligence Unit, Coimbatore.
  5. M. தாமோதரன் - Inspector of Special Division.
- ➢ இவர்கள் அனைவரும் Operation Quanto என்ற நடவடிக்கையில் வெற்றிகரமாக

❖ **பால் ஹாரிஸ் விருது - தமிழக முதல்வர் எடப்பாடி K. பழனிச்சாமி**

- இவ்விருது, குடிதண்ணீர் விநியோகம், சுகாதாரம், நோய்க்கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் குழந்தைகள், சுற்றுச்சூழல் மற்றும் உலக அமைதி போன்றவற்றில் மனிதர்களுக்கு சேவை புரிந்த மாமனிதர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இவ்விருது, அமெரிக்காவில், சிகாகோ நகரத்தில் அமைந்துள்ள Rotary Foundation of Rotary International என்ற அமைப்பால் வழங்கப்படுகிறது.

❖ **டோரண்டோ பல்கலைக்கழகம் நெடுஞ்செழியன் விருதினை அறிமுகப்படுத்துகிறது.**

❖ **தமிழ்நாடு முதலமைச்சரின் சுதந்திர தின விருதுகள்:**

- **அப்துல்கலாம் விருது:**

S. செல்வக்குமார் - ஆனந்தம் இளைஞர் அமைப்பின் நிறுவனர், இவர், 365-மாணவர்கள் உயர்கல்வி கற்க கடந்த 23-ஆண்டுகளாக ஆதரவும் வழியும் காட்டியுள்ளார்.

- **கல்பனாசாவ்லா விருது:**

செந்தமிழ்ச்செல்வி, முத்தம்மாள் மற்றும் ஆனந்தவள்ளி - இம்மூவரும் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்களது உயிரைப் பணயம் வைத்து கோட்டரை கால்வாயில் உயிருக்காகப் போராடிய இரண்டு இளைஞர்களைக் காப்பாற்றியவர்கள்.

- **COVID-19 கான சிறப்பு விருது:**

டாக்டர் சௌமியா சாமிநாதன், இவர் தலைமை விஞ்ஞானி, உலக சுகாதார அமைப்பு, ஜெனிவா. இவர், இந்தியாவில் பசுமைப்புரட்சியின் தந்தை என்று அறியப்படும் டாக்டர். M.S. சாமிநாதன் என்ற விவசாய விஞ்ஞானியின் மகளாவார்.

- **முதலமைச்சரின் சிறந்த செயல்பாட்டு விருதுகள்:**

1. கருவூலம் மற்றும் கணக்கீட்டுத் துறை
2. பெருநகர சென்னை மாநகராட்சி
3. விவசாயம் தோட்டக்கலை மற்றும் தோட்டப்பயிர்கள் மற்றும் விவசாயப் பொறியியல் துறை
4. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு பாராட்டுச்சான்று
5. தமிழ்நாடு காவல்துறையின் கணினிக் குற்றப் பிரிவிற்குப் பாராட்டுச்சான்று

- **மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான சிறந்த சேவைக்கான விருதுகள்:**

1. சிறந்த நிறுவனம் - காது கேளாதவர்களுக்கான CSI-மேல்நிலைப்பள்ளி, மயிலாப்பூர், சென்னை.

2. சிறந்த மருத்துவர் - டாக்டர் ஜி. ஷியாமலா, ஜாகிர்- அம்மாபாளையம், சேலம்.
3. சிறந்த தனியார் முதலாளி – சக்தி மசாலா தனியார் நிறுவனம், மாமரத்துப்பாளையம், ஈரோடு.
4. சிறந்த சமூக சேவகர் - C. சாந்தகுமார், திருமலை, திருச்சிராப்பள்ளி.
5. சிறந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி - சேலம்.

➢ **பெண்களின் நலத்திற்கு சிறந்த சேவைக்கான விருது:**

1. சிறந்த சமூக சேவகர் - கோதனவள்ளி, கோயம்புத்தூர்.
2. சிறந்த நிறுவனம் - கிராமியக் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான மையம்.

➢ **சிறந்த செயல்பாட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சரின் விருதுகள்:**

1. சிறந்த மாநகராட்சி – வேலூர்.
2. சிறந்த நகராட்சி – 1. விழுப்புரம், 2. கரூர், 3. கூத்தாநல்லூர்.
3. சிறந்த பேரூராட்சி – 1. வனவாசி – சேலம் மாவட்டம்.
2. வீரப்பாண்டி – தேனி மாவட்டம்.
3. மதுக்கரசி – கோயம்புத்தூர் மாவட்டம்.

➢ **முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது:**

1. S. அருண்குமார் - மதுரை மாவட்டம்.
2. R. ராம்குமார் - கடலூர் மாவட்டம்.
3. S. புவனேஸ்வரி – கடலூர் மாவட்டம்.

❖ **தொடர்ந்து மூன்றாவது வருடமாக 2019-2020ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சியில் தேசிய சராசரியைவிட அதிகமாக தமிழ்நாடு பதிவு செய்துள்ளது.**

➢ 2019-2020ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் வளரச்சி விகிதம் 8.03% ஆகும். இது அகில இந்திய சராசரியான 4.2% போல் ஏறக்குறைய 2-மடங்காகும்.
➢ 2019-2020க்கான வளர்ச்சி விகிதம் மத்திய அரசால் சமீபத்தில் இறுதிநிலைப் படுத்தப்பட்டுள்ளது.
➢ ஒட்டுமொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி(Gross State Domestic Product - GSDP) மீதான கணக்கீடுகள் 2011-2012ஆம் ஆண்டை அடிப்படை வருடமாகக் கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **2020ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான டாக்டர் M.S. சுவாமிநாதன் விருது - R.S. பரோடா**

- **ஜீவன் ரக்ஷா-பதக்கம் - தஞ்சாவூர் மாவட்த்தைச் சேர்ந்த R. ஸ்ரீதர்**

- **தேசிய நல்லாசிரியர் விருது - 2020**

1. **R.C.சரஸ்வதி** – தலைமை ஆசிரியை, அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி, அசோக் நகர்.
2. **S.திலீப்** - ஆங்கில ஆசிரியர், அரசு மேனிலைப்பள்ளி.

**மெகா நகருக்கான விருது:**

- **சென்னை மாநகரம், 40-இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகையுள்ள நகரங்களிடையே திடக்கழிவு மேலாண்மையில் புத்தாக்க மற்றும் சிறந்த செயல்பாடுகளைக் மேற்கொள்வதில் நாட்டின் சிறந்த மெகா நகருக்கான விருதைப் பெற்றுள்ளது.**

  - இந்த விருது, 2020-க்கான ‘swachh Survekshan ’ வருடாந்திர தூய்மையை மதிப்பிடும் அறிக்கையின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

- **Swachha Hi Seva–2019 விருது - நெய்வேலி NLC**

**ஐ.நா.வின் ராணுவ பொது ஆலோசகர் விருது:**

- **இந்தியத் தரைப்படையின் மேஜர் சுமந்த் கவாணி, பெருமைக்குரிய ஐ.நா.வின் இந்த வருடத்திற்கான இராணுவ பொது ஆலோசகர் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.**

  - இவர் நவம்பர்-2018லிருந்து டிசம்பர்-2019வரை தெற்கு சூடானில் ஐக்கிய நாடுகள் திட்டத்துடன் இணைந்து ஒரு பெண் அமைதிப் பராமரிப்பாளராக பணியாற்றினார்.

**புலிட்சர் விருது:**

- **ஜம்மு மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த மூன்று இந்திய புகைப்படம் எடுப்போர்களான முத்தர்கான், யாசின்தார் மற்றும் சென்னி ஆனந்த் ஆகிய மூவரும் சிறந்த புகைப்படம் எடுப்போர்க்குரிய 2020க்கான புலிட்சர் விருதை வென்றுள்ளனர்.**

- **Deutsche Welle பேச்சு சுதந்திர விருது–2020 - சித்தார்த் வரதராஜன்**

❖ **SKYTRAX விருது - பெங்களூரிலுள்ள கேம்பக்கவுடா பன்னாட்டு விமான நிலையம்**

❖ **இரண்டாம் உலக யுத்த பதக்கம் - வடகொரிய பிரிமியர் (பிரதமர்) Kim Jong-Un என்பவருக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் வழங்கியுள்ளார்.**

❖ **பிரான்ஸ் நாட்டின் மிக உயர்ந்த அறிவியல் விருதுகளில் ஒன்றான 'Christophe Merieux Prize', தென்னாப்பிரிக்க HIV-ஆய்வாளர் Quarraisha Abdool Karim என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

❖ **இந்தியாவில் ஜப்பானின் சிறந்த புரிதலை மேம்படுத்தியதற்காக ஜப்பான் நாட்டு அரசாங்கத்தால் "Order of Rising Sun – Gold and Silver Rays" என்ற விருது மணிப்பூர் மருத்துவர் Thangiam Dhabali Singh என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

❖ **அறிவியலின் நார்வேயன் கல்விக்கழகம் (Nor wegian Academy of Science), 2020ம் ஆண்டுக்கான ஏபெல் பரிசை Hillel Frustenberg மற்றும் Gregory Margulis ஆகிய இரண்டு கணிதவியல் அறிஞர்களுக்கு வழங்கவுள்ளது.**

- ➢ எண்ணியல் கோட்பாட்டில் நிகழ்தகவு மற்றும் இயக்கவியல், சேர்மானவியல் மற்றும் குழுக்கோட்பாடு போன்றவற்றில் அவர்களின் இணைப்பணிக்காக இவ்விருது வழங்கப்படுகிறது.
- ➢ Hillel Frustenberg என்பவர் இஸ்ரேல் நாட்டின் ஜெருசலம் ஹெப்ரு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர். மற்றும் Gregory Margulis என்பவர் அமெரிக்காவின் நியூஹெவனில் உள்ள ஏல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவராவார்.

❖ **பெருமைக்குரிய அமைதிப்பரிசை அமர்த்தியாசென் வென்றுள்ளார்.**

- ➢ நோபல் பரிசைப் பெற்றவரான இந்தியப் பொருளாதார நிபுணர் அமர்த்தியாசென், 'உலக நீதியின் கேள்விகள்' (Questions of Global Justice) மீதான அவரின் பத்து வருட பணிக்காக ஜெர்மன் புத்தக வர்த்தகத்தின் (German Book Trade) பெருமைக்குரிய அமைதிப்பரிசை வென்றுள்ளார்.

❖ **2020ம் ஆண்டிற்கான உலக உணவுப் பரிசை (World Food Prize) டாக்டர் ரத்தன்லால் பெற்றுள்ளார்.**

- ➢ உணவு உற்பத்தியை அதிகப்படுத்தவதற்கு மண்ணின் மையவள அணுகுமுறையில் மேம்பாட்டைக் கண்டுபிடித்ததற்காக இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

- நாடு முழுவதுமுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இடையேயான கிராமப்பஞ்சாயத்துக்களின் சமூகப்பொருளாதார மேம்பாட்டிற்கு சிறந்த பங்களிப்பிற்கான மூன்று பெருமைக்குரிய 'தீன் தயாள் உபாத்தியாய் சஷக்திக்காரன் புரஸ்கார் விருது' ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 2020ம் ஆண்டிற்கான e–பஞ்சாயத்து புரஸ்கார் விருதை ஹிமாச்சலப்பிரதேசம் வென்றுள்ளது.

- ரிச்சர்டு டாக்கின்ஸ் விருதைப் பெறும் முதலாவது இந்தியர் ஜாவிட் அக்தர்.

- பல்வேறு சுற்றுச்சூழல் நட்பான செயல்பாடுகளை அமல்படுத்தியதற்காக இந்தியத் தொழில்களின் கூட்டமைப்பால் (Confederation of Indian Industries – CII) பொன்தரம்(Gold rating) திருச்சி ரயில்வே சந்திப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.

- 2020ம் ஆண்டிற்கான 'உயிரிப் பன்முகத்தன்மை விருதை' டெக்கான் மேம்பாட்டு சங்கம் (Deccan Development Society – DDS) வென்றுள்ளது.

  - இவ்விருது, மொனாக்கா நிறுவனத்தின் இளவரசர் ஆல்பர்ட்-2 என்பவரால் வழங்கப்படுகிறது.
  - இவ்விருது, கோள்கள் பற்றிய சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் நோக்கத்தில் ஒரு தனி நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ வழங்கப்படுகிறது.

- 2020ம் ஆண்டின் EY-உலக தொழில்முனைவோர் விருதிற்காக கிரன் மாஜ்முதார் ஷா பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதின் 20-வருட வரலாற்றில், இந்த விருதை வெல்லும் முதலாவது பெண்மணி மற்றும் மூன்றாவது இந்தியர் ஆவார்.

- செய்ஜோபெரினியா பன்னாட்டு சங்கத்தால் (Schizophrenia International Research Society) 2020ம் ஆண்டிற்கான சிறந்த மருத்துவ மற்றும் சமூக ஆராய்ச்சி விருதிற்கு, சென்னையைச் சேர்ந்த டாக்டர் ரங்கசாமி தாரா பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

- சென்னையைச் சேர்ந்த பரதநாட்டிய தம்பதியர் V.P. தனஞ்செயன் மற்றும் சாந்தா தனஞ்செயன் ஆகியோருக்கு 'சங்கீதகலா விபூசன் விருது' வழங்கப்பட்டுள்ளது.

- 2020ம் ஆண்டின் பல்வேறு விருதுகள் பல்வேறு நிபுணர்களால் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு:

| வ. எண் | விருதுகள் | பெற்றவர் |
|---|---|---|
| 1 | P.C. மெஹலநோபிஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது | C. ரங்கராஜன் |
| 2 | நியூயார்க்கின் கார்னேட் மாநகராட்சி அட்டவணையின்படி சிறந்த குடியேற்றம் பெற்றோர். | சித்தார்த்த முகர்ஜி மற்றும் ராஜ் செட்டி |
| 3 | டயானா விருது | ப்ரியா தாக்ரல் |
| 4 | காமன்வெல்த் சிறுகதை ஒட்டுமொத்த வெற்றியாளர் பரிசு | கிருத்திகா பாண்டே |
| 5 | VRAAM - விருது | லெப்டினன்ட் கலோனல், பாரத் பன்னு |
| 6 | கல்கத்தாவிலுள்ள மோகன் பாகன் தடகள கால்பந்து மன்றத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது | ஹாக்கி வீரர் அசோக்குமார். |
| 7 | மோகன் பாகன் ரத்னா விருது | ஹாக்கி ஜாம்பவான் குர்பக் சிங் மற்றும் முன்னாள் முதல்தர கிரிக்கெட்டர் பாலாஸ் நந்தி |
| 8 | வீரதீர செயலுக்கான பன்னாட்டு பத்திரிக்கை சுதந்திர விருதுகள் | பத்திரிக்கையாளர்களைப் பாதுகாக்கும் குழு, வங்காளதேசத்தின் ஜாகிதுள் அலாம், ஈரான் நாட்டின் முகமத் மோசத், நைஜீரியாவின் தாபோ ஓலோருன்யோமி மற்றும் ரஷ்யாவின் சுவெர்ட்லானா புரோக்கோபியாவா ஆகிய நால்வருக்கும் இவ்விருதை அறிவித்துள்ளது. |
| 9 | மேம்பாட்டு சந்தை வளாக விருது | லாபநோக்குசாராத இந்திய நிறுவனமான மனித மேம்பாட்டுக்கான நிறுவனம் (IHD) |
| 10 | ஏலைட்ஸ் சீர்மை விருதுகள் | சட்டீஸ்கர் மாநிலம் (எண்ணியல் இந்தியா திட்டத்தின்கீழ்) |
| 11 | சிகாகோ ரோட்டரி பன்னாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பால் ஹாரிஸ் மேதை விருது | தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி K.பழனிச்சாமி |
| 12 | வுானியல் பன்னாட்டுக்கழகத்தின் (IAA) வான் ஹர்மன் விருது | ISRO தலைவர் K. சிவன் |
| 13 | உலக மனிதாபிமான விருது | சச்சின் அவஸ்தி(இவர் கங்கை நதியைத் தூய்மைப்படுத்தும் விழிப்புணர்வுப் பயணத்தில் ஹரித்துவாரிலிருந்து வாரணாசி வரை 5-நாட்கள் பயணம் செய்தவர். |
| 14 | இவ்வருட இன்ஃப்ரா வர்த்தக தலைவர் -விருது | வேத பிரகாஷ்டுடேஷா |
| 15 | உலகத்தலைமை விருது | டாடா குழுமத்தலைவர் நடராஜன் சந்திரசேகர் மற்றும் லாக்கிட் மார்ட்டின் நிறுவனத்தலைவர் ஜிங் டாய்க்ளட். |

| | | |
|---|---|---|
| 16 | நெல்சன் மண்டேலா விருது | கென்னியா டாக்டர் மோரிஷானா கௌயாட்டி மற்றும் கிரிஸ் நாட்டின் மேரியன்னா வார்டினோயானிஷ் |
| 17 | லெபனான் நாட்டில் ஐ.நா.வின் இடைக்காலப்படையில் இணைந்துள்ள இந்தியப் படைப்பிரிவு (INDBATT) சுற்றுச்சூழல் விருதை வென்றுள்ளது. | |
| 18 | பெருமைக்குரிய (CII-ITC) நிலைநிறுத்துதல் விருது-2019 NTPC நிறுவனம் பெற்றுள்ளது. | |
| 19 | ஷாங்காய் எலக்ட்ரிக் நிறுவனம், உலக செயற்கை நுண்ணறிவு மாநாட்டின் (World Artificial Intelligence Conference - WAIC) உலகின் முதலாவது தொழில் நுண்ணறிவு விருதைப் (Industrial Intelligence Award) பெற்றுள்ளது. | |
| 20 | சுவீடனைச் சேர்ந்த 17-வயதான காலநிலை ஆர்வலர் கிரேட்டா தும்பர் என்பவரின் பெயர், 'Inaugural Gulbenkian Prize Humanity' என்ற விருதின் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 21 | டூன்ஸ் மீடியா விருது, இறப்பிற்குப் பின்பு புகழ்பெற்ற இந்திய அனிமேட்டர் அர்னாப் சௌத்ரிக்கு வழங்கப்பட்டு கௌரவப்˙படுத்தப்பட்டுள்ளார். | |
| 22 | SS ஊக்கமூட்டுதல் நிறுவனர் மற்றும் தலைமைச்செயல் நிர்வாகி 'சுனீல் யாதவ்' ஐ.நா.வின் கரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டுள்ளார். | |
| 23 | இந்தியாவின் முதலாவது சூரியசக்தி படகான ஆதித்யா, மின்படகுகள் மற்றும் படகுப்போக்குவரத்தின் சீர்மைக்கான Gustave Trouve விருதைப் பெற்றுள்ளது. | |

❖ **புவி அறிவியல்களுக்கான மத்திய அமைச்சகம் (MoES), புவிமுறைமை அறிவியலில் சீர்மைக்கான தேசிய விருது வெற்றியாளர்களை அறிவித்துள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:**

| வ. எண் | விருதுகள் | பெற்றவர்கள் |
|---|---|---|
| 1 | வாழ்நாள் சீர்மை விருது | பேரா. அசோக் ஷானி |
| 2 | வளிமண்டல அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது | டாக்டர் S. சுரேஷ் பாபு |
| 3 | புவி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது | N.V. சலபதி ராவ் |
| 4 | பெருங்கடல் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது | டாக்டர் M.A. ஆத்மானந்த் |
| 5 | பெண் விஞ்ஞாணிக்கான அன்னமணி விருது | டாக்டர் லிடிதா D.S. காண்டிபர்க்கர் |
| 6 | இளம் ஆராய்ச்சியாளர் விருது | டாக்டர் இந்திராசேகர் சென் |
| 7 | பெருங்கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது | டாக்டர் V.V.S.S. ஷர்மா |

- **‘ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான்-2020’ (Smart India Hackathon)**

  - ‘ஸ்மார்ட் இந்தியா கேக்கத்தான்-2020’ன் முதல் பரிசை புனேயிலுள்ள மேம்பட்ட தொழில்நுட்பத்திற்கான பாதுகாப்பு நிறுவனம் வென்றுள்ளது.

- **ஸ்கோச் தங்க விருது (SKOCH Gold Award)**

  - இவ்விருது, பழங்குடியினர் விவகாரத்திற்கான மத்திய அமைச்சகத்திலுள்ள உதவித்தொகைப் பிரிவின் திட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.
  - இத்திட்டம், பழங்குடியினரை தகவல்தொழில்நுட்பத்தில் அதிகாரப் படுத்துவதற்கு வழங்கப்படும் உதவித்தொகைத் திட்டமாகும்.

- **பன்னாட்டு புக்கர் பரிசு–2020 (International Booker Prize)**

  - இவ்விருதைப் பெறும் மிகவும் இளமையானவரான 29-வயதுடைய டச்சு நாட்டின் நூலாசிரியரான Marieke Lucas Rijneveld-என்ற பெண் வென்றுள்ளார்.
  - இந்த இளவயதுப் பெண் தனது ‘மாலை வசதியின்மை’ (The Discomfort of Evening) என்ற புதினத்திற்காக இப்பரிசைப் பெற்றுள்ளார்.

- **மனநலக் கணக்கீடு உலக ஜாம்பியன்ஷிப்-2020 (Mental Calculation World Championship)**

  - லண்டனில் சமீபத்தில் நடைபெற்ற மன விளையாட்டுகள் ஒலிம்பியாட்டில் (Mind Sports Olympiad – MSO) மனநலக் கணக்கீட்டு உலக ஜாம்பியன்ஷிப்-2020ல் தங்கப்பதக்கத்தை வென்று முதல் இந்தியராக ஹைதராபாத்தின் நீல்காந்த பானுபிரகாஷ் முன்வந்துள்ளார்.

- **தொடர்ந்து இரண்டாவது வருடமாக பெருமைக்குரிய மௌலான அபுல்கலாம் ஆசாத் கோப்பையை பஞ்சாப் பல்கலைக்கழகம் வென்றுள்ளது.**

- **தேசிய விளையாட்டு விருதுகள்-2020**

  - ராஜீவ்காந்தி கேல்ரத்னா விருது-5
  - துரோணாச்சாரியா விருது–13
  - அர்ஜுனா விருது–27
  - தயான்சந்த் விருது-15
  - டென்சிங் நார்கே தேசிய சாகச விருதுகள்(2019)-8
  - மௌலானா அபுல்கலாம் ஆசாத்(MAKA) கோப்பை-1
  - ராஷ்ட்ரீய கேல் ப்ராட்சகன் புரஸ்கார் விருது-4

❖ **ராஜீவ்காந்தி கேல்ரத்னா விருது-5**

1. ரோஹித் சர்மா – கிரிக்கெட் (சச்சின் டெண்டுல்கர், M.S. தோனி மற்றும் வீராட் கோலிக்கு அடுத்து நான்காவது வீரர்)
2. மாரியப்பன் தங்கவேலு – பாரா தடகளம்
3. மானிகா பத்ரா (பெண்) – டேபிள் டென்னிஸ்
4. வினெய்ஸ் போகத் (பெண்) – மல்யுத்தம்
5. ராணி ராம்ப்பால் (பெண்) - ஹாக்கி

➢ **முதல்முறையாக இவ்விருதிற்கு 5-விளையாட்டாளர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.**

❖ **அர்ஜுனா விருது-27 (சிறந்த சாதனைகளை அங்கீகரிப்பதற்கு)**

| **வ.எண்** | **பெயர்** | **விளையாட்டு** |
|---|---|---|
| 1 | ஸ்ரீ அதானுதாஸ் | வில்வித்தை |
| 2 | செல்வி டுட்டிசந்த் | தடகளம் |
| 3 | ஸ்ரீ சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி | பேட்மிட்டன் |
| 4 | ஸ்ரீ சிராக் சந்திரசேகர செட்டி | பேட்மிட்டன் |
| 5 | ஸ்ரீ வைசேஷ் பிரிக்குவான்ஷி | கூடைப்பந்து |
| 6 | சுபேதார் மானிக் கௌசிக் | குத்துச்சண்டை |
| 7 | செல்வி லவ்லினா போர்கோகெய்ன் | குத்துச்சண்டை |
| 8 | ஸ்ரீ இசாந்த் சர்மா | கிரிக்கெட் |
| 9 | செல்வி தீப்தி சர்மா | கிரிக்கெட் |
| 10 | ஸ்ரீ சாவந்த் அஜய் ஆனந்த் | குதிரையேற்றம் |
| 11 | ஸ்ரீ சந்தேஷ் ஜிங்கன் | கால்பந்து |
| 12 | செல்வி ஆதித்தி அசோக் | கோல்ப் |
| 13 | ஸ்ரீ ஆகாஷ்தீப் சிங் | ஹாக்கி |
| 14 | செல்வி தீபிகா | ஹாக்கி |
| 15 | ஸ்ரீ தீபக் | குபடி |
| 16 | ஸ்ரீ காலி சரிகா சுதாகர் | கொக்கோ |
| 17 | ஸ்ரீ டாட்டு பாபன் போகானால் | ரோயிங் |
| 18 | செல்வி மனுபாக்கர் | துப்பாக்கிச்சுடுதல் |
| 19 | ஸ்ரீ சௌரவ் சௌத்ரி | துப்பாக்கிச்சுடுதல் |
| 20 | செல்வி மாதுரிகா சுகாஷ் பாட்கர் | டேபிள் டென்னிஸ் |
| 21 | ஸ்ரீ திவிஸ் சரன் | டென்னிஸ் |
| 22 | ஸ்ரீ சிவகேசவன் | குளிர்கால விளையாட்டு |
| 23 | செல்வி திவ்ய காக்ரான் | மல்யுத்தம் |
| 24 | ஸ்ரீ ராகுல் அவார் | மல்யுத்தம் |
| 25 | ஸ்ரீ சுயேஷ் நாராயண் ஜாதவ் | பாரா நீச்சல் |
| 26 | ஸ்ரீ சந்தீப் | பாரா தடகளம் |
| 27 | ஸ்ரீ மணிஷ் நார்வால் | பாரா துப்பாக்கிச்சுடுதல் |

❖ **துரோணாச்சாரியா விருது-13 (வாழ்நாள் பிரிவு – விளையாட்டுப் பயிற்சியளிப்பிற்காக)**

| வ.எண் | பயிற்சியாளர் பெயர் | விளையாட்டு |
|---|---|---|
| 1 | ஸ்ரீ தர்மேந்திர திவாரி | வில்வித்தை |
| 2 | ஸ்ரீ புருஷோத்தம் ராய் | தடகளம் |
| 3 | ஸ்ரீ சிவ் சிங் | குத்துச்சண்டை |
| 4 | ஸ்ரீ ரோமேஷ் பதானியா | ஹாக்கி |
| 5 | ஸ்ரீ கிருஷான்குமார் ஹூடா | கபடி |
| 6 | ஸ்ரீ விஜய் பாலசந்திர முனிஷ்வர் | பாரா பளுதூக்குதல் |
| 7 | ஸ்ரீ நரேஷ்குமார் | டென்னிஸ் |
| 8 | ஸ்ரீ ஓம்பிரகாஷ் தஹியா | மல்யுத்தம் |

❖ **தயான்சந்த் விருது-15 (வாழ்நாள் சாதனையாளர்)**

| வ.எண் | பெயர் | விளையாட்டு |
|---|---|---|
| 1 | ஸ்ரீ குல்தீப் சிங் புல்லர் | தடகளம் |
| 2 | செல்வி ஜிங்சி பிலிப்ஸ் | தடகளம் |
| 3 | ஸ்ரீ பிரதீப் ஸ்ரீ கிருஷ்ணா காந்தே | பேட்மிட்டன் |
| 4 | செல்வி திருப்தி முர்குண்டே | பேட்மிட்டன் |
| 5 | செல்வி N. நிஷா | குத்துச்சண்டை |
| 6 | ஸ்ரீ லாக்கா சிங் | குத்துச்சண்டை |
| 7 | ஸ்ரீ சுக்கிந்தர் சிங் சாந்து | கால்பந்து |
| 8 | ஸ்ரீ அஜித் சிங் | ஹாக்கி |
| 9 | ஸ்ரீ மன்பிரிப் சிங் | குபடி |
| 10 | ஸ்ரீ J. ரஞ்சித்குமார் | பாரா தடகளம் |
| 11 | ஸ்ரீ சத்யபிரகாஷ் திவாரி | பாரா பேட்மிட்டன் |
| 12 | ஸ்ரீ மன்சீத் சிங் | ரோயிங் |
| 13 | மறைந்த ஸ்ரீ சச்சின் நாக் | நீச்சல் |
| 14 | ஸ்ரீ நந்தன் பால் | டென்னிஸ் |
| 15 | ஸ்ரீ நாட்டார்பால் ஹூடா | மல்யுத்தம் |

➢ தமிழகத்தைச்சேர்ந்த ஸ்ரீ J. ரஞ்சித்குமார் பாரா தடகள விளையாட்டுக்காக தயான்சந்த் விருது பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் கிர்ரன் ரிச்சு, தேசிய விளையாட்டு தினமான ஆகஸ்ட்-29,2020ல் பின்வரும் விருதுகளுக்கான பரிசுத்தொகையை உயர்த்தி அறிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:**

| வ.எண் | விருது | பழைய பரிசுத்தொகை | உயர்த்தப்பட்ட பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 1 | ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது | ரூ.7.5லட்சம் | ரூ.25லட்சம் |
| 2 | அர்ஜுனா விருது | ரூ.5லட்சம் | ரூ.15லட்சம் |
| 3 | துரோணோச்சாரியா விருது (வாழ்நாள்) | ரூ.5லட்சம் | ரூ.15லட்சம் |
| 4 | துரோணோச்சாரியா விருது (இயல்பானது) | ரூ.5லட்சம் | ரூ.10லட்சம் |
| 5 | தயான்சந்த் விருது | ரூ.5லட்சம் | ரூ.10லட்சம் |

➢ விளையாட்டு விருதுகளுக்கான பரிசுப்பணம் இறுதியாக 2008ல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நூல்கள் மற்றும் ஆசிரியர்கள்

| வ.எண் | நூல்கள்/புதினங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| 1 | The Ickabog | J.K. ரௌலிங் |
| 2 | ஊகன் நாட்குறிப்பு | பேங் பேங் |
| 3 | கடவுள் பயம் | வாதன் |
| 4 | கார்கிலில் விஜயந்த் | கலனல் V.N. தாப்பர் மற்றும் நெகா டெய்வ்டு |
| 5 | Hop on; My Adventures on Boats, Trains and Planes | ரஸ்கின்பாண்டு |
| 6 | Legend of Suheldev; The King Who Saved India | ஆமிஷ் திரிபாதி |
| 7 | 'Metoo' | கரன்கூரி |
| 8 | "The Dry Fasting Miracle: From Deprive to Thrive" | லூக் குட்டின்கோ |
| 9 | முகக்கவசத்திற்கு பின்பு | முகமத் அப்துல் மன்னன் |
| 10 | மகாவீர்: இறவாத போர்வீரர்(1962- இந்தோ-சீன யுத்தம் பற்றிய புதினம்) | A.K. ஸ்ரீகுமார் மற்றும் ரூபா ஸ்ரீகுமார் |
| 11 | Getting Competitive: A Practioner's Guide for India | R.C. பார்கவா |
| 12 | Overdraft: Saving the Indian Saver | முன்னாள் RBI ஆளுநர் உர்ஜித் பட்டேல் |
| 13 | உயர்கல்வியின் எதிர்காலம்: ஒன்பது மெகா போக்குகள் | C.A.V. பட்டாபிராம் |
| 14 | 'His Holiness the Fourteenth Dalai Lama: An Illustrated Biography' | டென்சிங் கெய்ஜி டெத்தாங் |
| 15 | இந்தியாவின் ஒரு பாடல் | ரஷ்கின் பாண்டு |
| 16 | "If It Bleeds" | ஸ்டெபன் கிங் |
| 17 | இறுதி விளையாட்டு | S. குஷேன் ஜெய்தி (குற்றவியல் எழுத்தாளர்) |
| 18 | இந்தியாவில் நிதி ஸ்ரத்தன்மையை மீட்பதற்கான தேடல் | முன்னாள் R.B.I. துணை ஆளுநர். வைரல் ஆச்சார்யா |
| 19 | இந்திய வழி: உறுதியற்ற உலகத்திற்கான யுக்திகள் | S. ஜெய்சங்கர் (மத்திய வெளியுறவு அமைச்சர்) |
| 20 | Suraj Kade Marda Nahi (Sun never dies) | பல்தேவ் சிங் சதக் நாமா (சாகித்ய அகாடமி விருது பெற்றவர்) |
| 21 | வியப்பூட்டும் அயோத்தியா | நீனா ராய் |
| 22 | 'RAW': A History of India's Covert Operations' | யாட்டிஷ் யாதவ் |
| 23 | "Vishesh: Code To Win" | நிருபாமா யாதவ் |

| | | |
|---|---|---|
| 24 | 'Connecting, Communicating, Changing | ஸ்ரீ வெங்கய நாயுடு (துணை ஜனாதிபதி) |
| 25 | "Our Only Home: A Climate Appeal to the World" | தலாய் லாமா |
| 26 | "Full Spectrum: India's Was, 1972-2020" | அர்ஜுன் சுப்ரமணியம் (முன்னாள் வைஸ் மார்ஷல்) |
| 27 | 'ஒரு ஏற்பாடு செய்யப்பட்ட கொலை' | செட்டான் பாகத் |
| 28 | "Cricket Drona" | வாசோ பரஞ்சபி (பிரபலமான கிரிக்கெட் பயிற்சியாளர்) |
| 29 | "Who painted my lust red?" | ஸ்ரீ அய்யர் |

APPOLO STUDY CENTRE

# நினைவில் இருப்பவர்கள்

தமிழ்நாடு:

1. **தலீத் ஏழுமலை** - தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர்.
2. **மன்னர் மன்னன்** - பாரதிதாசனின் மகன் மற்றும் பிரபலமான தமிழறிஞர்.
3. தமிழறிஞர் மற்றும் மார்க்சீய இலக்கியத் திறனாய்வாளர் **கோவை.ஞானி.**
4. தமிழ்நாட்டைச் சேர்ந்த சாகித்ய அகாடமி விருது பெற்ற **சா. கந்தசாமி**.
5. புகழ்பெற்ற தமிழ் திரைப்பட பாடலாசிரியர் **P.K. முத்துசாமி**.
6. தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் **ஹரி கிருஷ்ணன் வசந்தகுமார்**.

இந்தியா:

1. **சுனி கோஸ்வாமி** - இந்தியாவின் கால்பந்து சாம்பவான் மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்றவர்
2. **அஜித் ஜோகி** - சட்டீஸ்கரின் முதலாவது முதலமைச்சர்.
3. **ரிஷி கபூர்** - பிரபலமான இந்தி நடிகர்.
4. **கீதா நாகபூசன் -** சாகித்ய அகாடமி விருது பெற்ற கன்னட எழுத்தாளர்.
5. **பாவ்லோ டொமாசி** - (ஆரவள்ளியில் மாத்ரிமந்திர் வடிவமைக்க உதவிய இத்தாலியக் கட்டிடக் கலைஞர்)
6. **நீலா சத்ய நாராயணன் -** முகாராஷ்டிரா மாநிலத்தின் முதலாவது பெண் மாநிலத் தேர்தல் ஆணையர்(SEC).
7. புகழ்பெற்ற கணிதவியல் அறிஞர் **C.S. செஷாத்ரி**. இவர் சென்னை கணிதவியல் நிறுவனத்தை நிறுவியவர் ஆவார்.
8. மத்தியப் பிரதேச ஆளுநர் **லால்ஜி டாண்டன்.**
9. குழந்தை உரிமைகள் ஆர்வலர் **அச்யுதா ராவ்**.
10. முன்னாள் சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர் மற்றும் ராஜ்யசபா உறுப்பினர் **அமர்சிங்.**
11. முன்னாள் மகாராஷ்டிரா முதலமைச்சர் **சிவஜிராவ் பாட்டீல்**.
12. நவீன இந்தியத் திரையரங்கின் தந்தை மற்றும் பத்ம விருது பெற்ற **இப்ரஹிம் அல்காஜி**.
13. பிரபலமான கலாச்சார வரலாற்று ஆசிரியர் **முகுந்த் லாத்**.
14. முன்னாள் கிரிக்கெட்டர் **கோபாலசாமி கஸ்தூரி ரங்கன்**.
15. முன்னாள் இந்தியக் கிரிக்கெட்டர் மற்றும் உத்திரப்பிரதேச அமைச்சர் **சேட்டன் சௌகான்.**

பிறநாடுகள்:

1. டான்சேனியாவின் முன்னாள் அதிபர் **பெஞ்ஜமின் காபா**.
2. **எவர்டன் வீக்ஸ் -** முன்னாள் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டர்.
3. **கௌலிபாலிக் -** ஐவரிகோஸ்ட்-ன் பிரதமர் அமாதவ் கோன்.

4. **ஜான் லீவிஸ் -** சிவில் உரிமைகளின் முன்னோடி.

5. முன்னாள் தைவான் அதிபர் **லீ டன் குய்**. (தைபை நகரின் மிஸ்டர் ஜனநாயகம் என அழைக்கப்பட்டவர்)

6. Computer Mouse -இன் இணை கண்டுபிடிப்பாளர் **வில்லியம் இங்கிலிஷ்**.

7. 'Black Panther' நட்சத்திரம் **சத்விக் போஸ்மேன்**.

8. Pixel-யை கண்டுபிடித்த கணினியறிஞர் **ரஷல் A. கிர்ச்**

APPOLO STUDY CENTRE

# செயலிகள் மற்றும் இணையதளங்கள்

| | |
|---|---|
| ”மின்னணு ரத்த சேவைகள்” கைபேசிக் செயலி (e blood services) | நேரடியாக ரத்தம் தேவைப்படுவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த செயலி எளிதாக்குகிறது. |
| NADA App | தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு முகமையின் முதல் கைபேசிக் செயலி (NADA App) |
| ∴ப்ளைஸி செயலி (FLYZY App) | ஐஐடி – குவஹாத்தி மாணவர்கள் தடையற்ற மற்றும் தொடர்பு இல்லாத விமான பயணத்திற்காக ∴ப்ளைஸி செயலியை உருவாக்கியுள்ளனர். |
| ஏர் - வென்டி” செயலி (Air-venti App) | மும்பை மாநகராட்சி “ஏர்-வென்டி“ கைபேசிக் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இந்த செயலி அப்பகுதியில் வாழும் மக்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் (ICU) உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை மற்றும் வென்டிலேட்டர்கள் குறித்த தகவல்களை வழங்க உதவுகிறது. |
| “சோடார் செயலி“ (Sodar App) | மக்கள் தங்கள் தினசரி வாழ்வில் சமூக தூரத்தை பராமரிக்க கூகுள் நிறுவனம் “சோடார் என்ற கைபேசி செயலியை உருவாக்கியுள்ளது. |
| கோவிட் BEEP APP | உடலியல் அளவுருக்கள் கண்காணிப்பு அமைப்புடன், கோவிட் - 19 பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கான முழுக்க முழுகக்க உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட, குறைந்த விலையில் இருக்கும் இந்தியாவின் முதல் செயலி ஆகும். |
| (வீட வீடாகக் கண்காணித்தல்) செயலி (Ghar Ghar Nigrani App) | கோவிட் 19 தொற்று பரவுவதைக் கண்காணிக்க வீடு வீடாகக் கண்காணித்தல் என்ற கைபேசி செயலியைப் பஞ்சாப் அரசு அறிமுகம் செய்துள்ளது. |
| மேகாசந்தேஷா செயலி (Meghasandesha App) | கர்நாடக அரசாங்கம் பெங்களூருவில் உள்ள நிகழ்நேர தகவல்களையும், மற்றும் மழை, வெள்ளம் இடியுடன் கூடிய எச்சரிக்கைகள் பற்றிய முன்னறிவிப்பையும் வழங்க ”மேகாசந்தேஷா” என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| டிஸ் - வானிலை (TS – Weather) | வானிலை நிலைமைகள் பற்றிய தகவல்களை அணுக மக்களுக்கு தெலுங்கானா அரசாங்கம் “டி.எஸ்-வானிலை” என்ற கைபேசிக் செயலியை அறிமுகப்படுத்தியது. |
| “மெரா வேட்டன்” செயலி (Meravetan) | ஜம்மு – காஷ்மீர் துணை நிலை ஆளுநர் கிரிஷ் சந்திர முர்மு அரசு ஊழியர்களுக்காக சம்பள டிராக்கர் கைபேசி செயலி “மெராவேட்டன்” அறிமுகப்படுத்தினார். |
| தேசிய தேர்வு பயிற்சி செயலி | JEE மெயின், NEET 2020 ஆகியவற்றுக்கான |

| | |
|---|---|
| (National Test Abhyas App) | தேர்வுகளில் கலந்து கொள்வோர், மாதிரி தேர்வுகளை எழுத வசதியாக தேசிய தேர்வு முகமையால் "தேசிய தேர்வு பயிற்சி" என்ற செயலியை மத்திய மனித வள மேம்பாடு அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் வெளியிட்டார். |
| ரோபோட் (கேப்டன் அர்ஜீன்) (Robot captain Arjun) | பயணிகளின் திரையில் மற்றும் கண்காணிப்பை தீவிரப்படுத்த மத்திய ரயில்வே (புனே பிரிவு) ரோபோடிக் கேப்டன் அர்ஜீன்" என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. "கேப்டன் அர்ஜீன்" – எப்போதும் பொறுப்புடன் இருங்கள் மற்றும் நன்றாக இருக்க வேண்டும், என்பதை குறிக்கும். |
| ரோபோட் "கோரோ – போட்" | நோயளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளின் தேவையை பூர்த்தி செய்ய மகாராஷ்டிரா பொறியாளர் உலகின் முதன் முதலில் (இணைய கட்டுப்பாட்டு ரோபோட்) கோரோ – போட்" என்ற செயலியை உருவாக்கியுள்ளார். |
| "ஆரோக்கியபத்" (Aarogyapath) | பல்வேறு காரணங்களால் முக்கியமான பொருள்களை உற்பத்தி செய்வது, வழங்குவது ஆகியவை தடைபட்டுள்ளன. மிகவும் அவசர கால உடல் நலத் தேவைகளுக்கான பொருள்கள் உடனுக்குடன் கிடைப்பதற்கு வகை செய்யும் நோக்கத்துடன் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மையம் (CSIR) தேசிய உடல்நலப் பொருள்கள் வழங்க தொடர் இணையதளம் "ஆரோக்கியபத்" என்ற செயலியை தொடங்கி வைக்கப்பட்டது. |
| "கார்மோ பூமி" (Karmo Bhumi) | தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு உதவும் வகையில் மேற்கு வங்காளம் அரசு "கார்மோ பூமி" என்ற ஒரு இணையதளத்தை தொடங்கிவைத்தது. |
| நுரையீரல் புறவொலி வரைவியல் (Lung ultrasound) App | ஐ.ஐ.டி. பாலக்காட், கிளவுட் அடிப்படையிலான பட பகுப்பாய்வு மற்றும் மதிப்பெண் முறை மூலம் கோவிட் 19 திரையிடல் மற்றும் கண்காணிப்புக்கான தானியங்கி நுரையீரல் புறவொலி வரைவியல் செயலியை உருவாக்கியுள்ளது. |
| "செல்ப்ஸ்கான்" செயலி (Self scan App) | மேற்கு வங்கத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி கேம்ஸ்கேனருக்கு (Cam scanner) மாற்றாக மாநில தகவல் தொழில்நுட்பத் துறையால் உருவாக்கப்பட்ட "செல்ப்ஸ்கான்" செயலியை அறிமுகப்படுத்தினார். |
| "எலிமெண்ட்ஸ்" (Elyments) | வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரால் ஈர்க்கப்பட்டு 1000-க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒன்றிணைந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் சமூக ஊடக சூப்பர் "எலிமெண்ட்ஸ்" |

| | |
|---|---|
| | செயலியை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு தொடங்கி வைத்தார். |
| லீட் இணையதளம் (LEAD – Portal | முதலாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான 10,000 படிப்பு பொருள் பாடப்புத்தங்கள் மற்றும் பாடநெறி உள்ளடக்கம் உள்ள லீட் (டெல்லிக்கு அணுகக்கூடிய மின்னணு வளங்கள் மூலம் கற்றல்) LEAD, என்னும் மின்னணு மூலம் கற்றல் இணையதளத்தை டில்லி கல்வி அமைச்சர் மணீஷ் சிசோடியா அறிமுகப்படுத்தினார். |
| MSME உதயம் | உதயம் பதிவு என்ற பெயரில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பதிவுக்கான புதிய இணையதளத்தை MSME அமைச்சகம் அறிமுகப்படுத்தியது. |
| ஜியோமீட் (Jio Meet) | ஜியோமீட் ஒரு வரம்பற்ற இலவச காணொலி காட்சி செயலி ரிலையன்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. |
| மகா வேலைகள் (Maha Jobs) | மகாராஷ்டிரா அரசாங்கம் ”மகாவேலைகள்“ என்ற இணையதளத்தை அந்த மாநிலத்தில் வசிக்கும் வேலையற்ற இளைஞர்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. |
| கூகுள் மின்னோட்டம் Google currents | கூகுள் நிறுவனம் தனது சமூக வலைதளம் செயலியான கூகுள் + என்பதை கூகுள் மின்னோட்டம் என்ற பெயர் மாற்றம் செய்துள்ளது. |
| இ - கிசான் தான் (e-Kisaan dhan) | விவசாயிகளுக்கு HDFC வங்கி “இ-கிசான் பணம் என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| ஐசிஏடி ASPICE என்ற இ- தளத்தை உருவாக்கியுள்ளது | சர்வதேச வாகனத் தொழில்நுட்ப மையத்தின் (ICAT) தொழில், ஆராய்ச்சி, கல்விக்கான வாகன தீர்வுகள் (ASPIRE) என்ற இ-தளத்தை உருவாக்கியுள்ளது. |
| ATL App உருவாக்கும் தொகுப்பு | நாடு முழுக்க உள்ள பள்ளிக்கூட மாணவர்களுக்காக ATL செயலி உருவாக்கும் தொகுப்பை நிதி ஆயோக்கின் அட்டல் புதுமை சிந்தனை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| பிரதமர் ஸ்வநிதி கைபேசி செயலி | கோவிட் - 19 காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள தெருவோர வியபாரிகள் தங்கள் வாழ்வாதாரங்களை மீண்டும் துவங்குவதற்காக திருப்பிச் செலுத்தக்கூடிய அளவிலான பணி மூலதனக் கடனுக்காக தொடங்கப்பட்ட கைபேசி செயலி ஆகும். |
| குர்மா செயலி | ஆமை பாதுகாப்புக்காக இந்திய அரசாங்கம் குர்மா கைபேசி செயலியை தொடங்கியுள்ளது. |
| மவுசம் | பொது மக்களுக்காக முதல் வானிலை செயலி “மவுசம“ என்னும் ஒன்றை இந்திய வானிலை ஆய்வு துறை அறிமுகப்படுத்தியது. |

| | |
|---|---|
| "மீண்டும் தொடங்கு இந்தியா" 'Restart India | மத்திய அமைச்சர் நிதின் கட்கரி குறு, சிறு மற்றும் நடுத்தர துறைக்காக மீண்டும் தொடங்கு என்ற ஆலோசனை தளத்தை அறிமுகப்படுத்தினார். |
| பிரவாசி ரோஜ்கர்" "Pravasi Rojgar' | புலம்பெயர்ந்தோருக்காக வேலை வாய்ப்புகளைக் கண்டறிய உதவும் வகையில் நடிகர் சோனுசூத் "பிரவாசி ரோஜ்கர்" என்ற கைபேசிக் செயலியை அறிமுகப்படுத்தினார். |
| "ரோஸ்கார் பஜார்" (Rozgar bazaar) | டெல்லி அரசாங்கம் "ரோஸ்கார் பஜார்" என்ற வேலைவாய்ப்பு இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| 'BIS – care' | இந்திய தர நிர்ணய அமைப்பின் கைப்பேசி செயலியான BIS – care யை மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான் தொடங்கிவைத்தார். |
| http://www.labour.tn.gov.in./ | தமிழக அரசு சார்பில் கொரோனா ஊரடங்கு சமயத்தில் வழங்கப்படும் நலதிட்ட உதவிகளை பெறமுடியாத அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு புதிய பதிவு செய்வதற்காக http://www.labour.tn.gov.in./ என்ற இணையதளத்தை தொடங்கியுள்ளது. |
| "இ-கியான் மித்ரா" E-Gyan Mitra | கொரோனா நோய் தொற்றை கருத்தில் கொண்டு யூனியன் பிரதேசமான தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் தமன் & டியு ஆகியவை ஆன்லைன் கல்விக்காக இ-கியான் மித்ரா செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| ஏர் சுவிதா" Air Suvidha' | டெல்லி விமான நிலையத்தின் சர்வதேச வருகையாளர்களுக்காக "ஏர் சுவிதா" என்ற இணையதளத்தை உருவாக்கியுள்ளது. |
| overhead equipment (OHE) ஆய்வு செயலி | ரயில் தாமதத்தைத் தடுக்க இந்திய ரயில்வே நிகழ்நேர கண்காணிப்புக்கு OHE ஆய்வு செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. |
| Surakhsya | மனிதர்கள் - யானைகள் குறுக்கீடு குறித்த தேசிய முனையம் "surakhsya'- என்னும் தளத்தை மத்திய அரசு தொடங்கி வைத்துள்ளது. |
| ஸ்வஸ்த்யா செயலி Swasthya app | "ஸ்வஸ்தயா" என்ற பழங்குடியினர் சுகாதாரம், ஊட்டச்சத்து போர்ட்டலை மத்திய பழங்குடியினர் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்த வகையான முதல் இ-போர்ட்டலில் இந்தியாவின் பழங்குடியின மக்கள் தொடர்பான அனைத்து சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான தகவல்களை ஒற்றை தளத்தில் வழங்கும் |
| ஸ்ரீஷன் (SRIJAN) | பாதுகாப்பு அமைச்சகத்தின் "சுயசார்பு இந்தியா" வாரம் (Aug 7 to 14) கொண்டாட்டத்தின் நிறைவாக "ஸ்ரீஷன்" என்ற |

| | |
|---|---|
| | போர்ட்டலை பாதுகாப்பு அமைச்சர் தொடங்கிவைத்தார். |
| VedKrishi.com | மத்திய குறு, சிறு, நடுத்திர நிறுவனங்களின் அமைச்சர் நிதின் கட்கரி ஆன்லைன் பண்ணை சேவை தளத்தை VedKrishi.com தொடங்கிவைத்தார். இந்த இணையதளம் விவசாயிகளை நேரடியாக நுகர்வோருடன் இணைக்கும் மேடையாக இருக்கும். |
| கோர்மோ செயலி (Kormo app) | நாடு முழுவதும் தேவையான வேலைகளைத் தேட கூகுள் நிறுவனம் "கோர்மோ" என்ற கைபேசி செயலியை இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. |
| ஹரித் பாத்" செயலி | தேசிய நெடுஞ்சாலைகளில் மரம் வளர்ப்பைக் கண்காணிப்பதற்காக "ஹரித் பாத்" என்னும் மொபைல் செயலியை நிதின் கட்கரி தொடங்கி வைத்தார். |
| 'My IAF' | தொழில் தொடர்பான தகல்வகளை வழங்குவதற்காக இந்திய விமானப்படை "MYIAF" என்னும் செயலியை தொடங்கியுள்ளது. |
| பென்ஷன் கார்னர்" செயலி | மத்திய தொழில்துறை மற்றும் பாதுகாப்பு படை (CISF) தங்களது ஓய்வுபெற்ற பணியாளர்களுக்காக பென்ஷன் கார்னர்" என்ற செயலியை தொடங்கியுள்ளது. |
| கிரண் | மனநல மறுவாழ்வுக்கான ஆலோசனைகளை வழங்க "கிரண்" என்ற இலவச ஹெல்ப்லைனை, மத்திய சமூக நீதி அமைச்சகம் தொடங்கி உள்ளது. |
| திறமை இணைவு தளம் (Skill connect Forum) | தனியார் தொழில் முனைவோர் மற்றும் வேலை தேடுபவர்களை ஒரே மேடையில் இணைக்கும் "திறமை இணைவு தளம்" (Skill connect Forum) என்ற இணையதளத்தை கர்நாடகா முதலமைச்சர் பி.எஸ். யெடியூரப்பா தொடங்கி வைத்தார். |

# குறியீடு, தரப்படுத்துதல் மற்றும் அறிக்கை

❖ **மே-13,2020ல் வெளியிடப்பட்ட வருடாந்திர உலக ஆற்றல் நகர்வுக் குறியீட்டில் (Global Energy Transition Index-2020) இந்தியா இரண்டு இடங்கள் முன்னேறி 74வது இடத்தைப் பெற்றுள்ளது என்று உலக பொருளாதார அமைப்பு (World Economic Forum – WEF) அறிவித்துள்ளது.**

➢ இத்தரப்படுத்துதலில் முதலிடத்தை சுவீடனும், இரண்டாமிடத்தை சுவிட்சர்லாந்தும் மற்றும் மூன்றாமிடத்தை பின்லாந்தும் பெற்றுள்ளன.

❖ **Open Budget Survey-2019 - வெளிப்படையான வரவு செலவுத்திட்ட ஆய்வு-2019**

➢ முதலிடம் நியூசிலாந்து
➢ இந்தியா -53வது இடத்தை பெற்றுள்ளது.

❖ **சிராமிக் (Shramik) சிறப்பு ரயில்கள் அறிக்கை**

➢ மே-1லிருந்து 3604-சிராமிக் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு 45-லட்சத்திற்கும் அதிகமான இடம்பெயர்வோர் ஏற்றிச் செல்லப்பட்டனர்.
➢ அந்தவகையில் முதல் ஐந்து இடங்களை குஜராத்(946-ரயில்கள்), மகாராஷ்டிரா (677), பஞ்சாப்(377), உத்திரப்பிரதேஷ்(243) மற்றும் பீகார்(215) ஆகிய மாநிலங்கள் பெற்றுள்ளன.
➢ இடம் பெயரும் தொழிலாளர்களை அவர்களின் சொந்த மாநிலத்திற்கு கொண்டு செல்வதற்கு இவ்வித ரயில்கள் மே-1லிருந்து இயக்கப்பட்டன.

❖ **பல்வேறு குறியீடுகள், தரப்படுத்துதல் மற்றும் அறிக்கைகள் ஆகியவற்றின் விவரங்கள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

| வ. எண் | குறியீடு/தரப்படுத்துதல்/அறிக்கை | முதலிடம் | கூடுதல் தகவல்கள் |
|---|---|---|---|
| 1 | சுற்றுச்சூழல் செயல்பாட்டுக் குறியீடு-2020 | டென்மார்க் | இந்தியா-168வது |
| 2 | IMDயின் உலகப் போட்டித்தன்மைக் குறியீடு-2020 | சிங்கப்பூர் | இந்தியா- 43வது |
| 3 | 2017க்கான PPP மீதான மிகப்பெரிய பொருளாதாரம்: உலக வங்கி அறிக்கை | அமெரிக்கா | இந்தியா–3வது |
| 4 | யங் பல்கலைக்கழக தரப்படுத்துதல் - 2020 | ஹாங்காங்க் அறிவியல் & தொழில்நுட்ப பல்கலைக்கழகம் | IIT–ரோபர் (பஞ்சாப்)–62வது |
| 5 | ஆசிய பல்கலைக்கழக | சிங்வா | இந்தியா |

| | | | |
|---|---|---|---|
| | தரப்படுத்துதல்-2020 | பல்கலைக்கழகம் (சீனா) | அறிவியல் நிறுவனம் |
| 6 | உலகின் அதிக சம்பளம் பெறும் விளையாட்டாளர்களின் போர்ப்ஸ்-2020 அட்டவணை | ரோஜர் பெடரர் | வீராட் கோலி மட்டும் உள்ளடக்கம் - 66வது |
| 7 | உலக முதலீட்டு அறிக்கை-2020ன்படி 2019ல் அதிகமான FDI பெற்ற நாடுகள் | அமெரிக்கா | இந்தியா-9வது |
| 8 | 'SIPRI yearbook-2020ன்படி அதிக அணுசக்தி கருவிகள் பெற்றுள்ளவை | அமெரிக்கா | இந்தியா-6வது |
| 9 | புளும்பர்க் பில்லியனர்ஸ் குறியீடு மற்றும் போர்ப்ஸ் ரியல் டைம் பில்லியனர் அட்டவணை | ஜெப் பெசோஸ் (CEO of Amazon) | முகேஷ் அம்பானி -9வது |
| 10 | Startup Ecosystem தர அறிக்கை-2020 | அமெரிக்கா | இந்தியா-23வது |
| 11 | உலக ஆற்றல் நுகர்வு-2019 | சீனா | இந்தியா-2வது |
| 12 | உலக e-கழிவு மதிப்பீடு-2020 – ஐ.நா அறிக்கை | சீனா | இந்தியா -2019ல் 3வது |
| 13 | நிலையான மேம்பாட்டு இலக்கு (SDG) குறியீடு-2020 | சுவீடன் | இந்தியா - 117வது |
| 14 | JLL-ன் உலக ரியல் எஸ்டேட் வெளிப்படைத்தன்மை குறியீடு | இங்கிலாந்து | இந்தியா-34வது |
| 15 | புற்றுநோய் சிகிச்சைத் தயாரிப்பு அறிக்கை | ஆஸ்திரேலியா | இந்தியா-8வது |
| 16 | உலகத் திறன் குறியீடு-2020 அறிக்கை | டேட்டா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப டொமைன் - ரஷ்யா, வர்த்தக டொமைன் - சுவிட்சர்லாந்து | இந்தியா வர்த்தக நிலையில் - 34வது இடம், டேட்டா அறிவியல் நிலையில்-51வது இடம் மற்றும் தொழில்நுட்ப நிலையில்-40வது இடம். |
| 17 | உலக அறிவுசார்சொத்து அடையாளங்கள்-2019 அறிக்கையின்படி, அறிவுசார் சொத்துரிமை தாக்கல் செய்யும் செயல்பாடு | சீனா | இந்தியா-7வது |
| 18 | நேரடி விற்பனைச் சங்கங்களின் உலகக் கூட்டமைப்பு அறிக்கை | அமெரிக்கா | இந்தியா-15 |
| 19 | கடந்த 10-ஆண்டுகளில்(2010-2020) உலக வன வளங்கள் மதிப்பீட்டு அறிக்கை | சீனா | இந்தியா-3வது |

| | | | |
|---|---|---|---|
| 20 | Hurun Global Unicorn அட்டவணை-2020 | அமெரிக்கா (233 -Unicorns) | இந்தியா-4வது (21-Unicorns) |
| 21 | Future Brand குறியீடு-2020 | ஆப்பிள் நிறுவனம் | ரிலையன்ஸ் தொழில்கள்-2வது இடம் |

- **ARIIA - 2020 IIT சென்னை முதலிடம்.**

  - இந்தியாவில் மத்திய அரசால் சிறந்த நிதியளிக்கப்படும் நிறுவனங்களுக்கான 'புத்தாக்க சாதனைகள் மீதான நிறுவனங்களின் அடல் தரப்படுத்துதலில்' (Atal Ranking of Institution on Innovation Achievement – ARIIA) சென்னை IIT முதலிடம் பெற்றுள்ளது.
  - இந்த அறிக்கை, ஆகஸ்ட்-18,2020ல் ஒரு மெய்நிகர் நிகழ்வில் மத்திய கல்வியமைச்சர் ரமேஷ் பொக்கிரியால் நிஷாந்த் முன்னிலையில் துணை ஜனாதிபதி வெங்கய நாயுடுவால் வெளியிடப்பட்டது.

- **சுவாட்ச் சர்வேக்ஷன்-2020**

  - மத்தியப் பிரதேசத்திலுள்ள **இந்தூர் நகரம்** தொடர்ந்து நான்காவது வருடமாக நாட்டில் தூய்மையான நகரங்கள் வரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
  - இத்தரப்படுத்துதலில் குஜராத்திலுள்ள சூரத் நகரம் 2-ம் இடத்தையும் மற்றும் மகாராஷ்டிராவிலுள்ள நாவி மும்பை நகரம் 3-இடத்தையும் பெற்றுள்ளன.
  - 2020ம் வருட சுவாட்ச் சர்வேக்ஷன் என்பது 5-வது அறிக்கையாகும் மற்றும் இத்திட்டம் இதுவரையில் 4242-நகரங்களை உள்ளடக்கியதாகும்.

- **சுவாட்ச் சர்வேக்ஷன்-2020 - மிகத்தூய்மையான நகரங்களுக்கான ஒட்டுமொத்தத் தரப்படுத்துதலில் சென்ற வருடம் 12-வது இடத்திலிருந்த தமிழ்நாடு இந்த வருடம் 10வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.**

- **நித்தி ஆயோக்கின் தொடக்க ஏற்றுமதி தயாரிப்புக் குறியீடு-2020ல் தமிழ்நாடு மூன்றாமிடம் பெற்றுள்ளது.**

  - இந்த அறிக்கையை (Export PreParedness Index – EPI) ஆகஸ்ட்-26,2020ல் நிதி ஆயோக் வெளியிட்டது.
  - ஒட்டுமொத்தக் குறியீட்டில் குஜராத் முதலிடம் வகிக்கிறது.
  - மகாராஷ்டிரா இரண்டாமிடத்தையும் மற்றும் தமிழ்நாடு மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.
  - எட்டு கடற்கரை மாநிலங்களில் ஆறு மாநிலங்கள் 10-தரங்களுக்குள் வந்துள்ளன.

- யூனியன் பிரதேசங்களிடையே டெல்லி முதலிடத்தையும், கோவா மற்றும் சண்டிகர் ஆகியவை முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

❖ **ராபோபேங்க் உலக முதல் இருபது பால்பண்ணை நிறுவனங்கள் வரிசையில் நெஸ்லே முதலிடத்தையும், இந்தியாவின் அமுல் 16-வது இடத்தையும் பெற்றுள்ளன.**

❖ **COVID-19 அறிக்கை**

- நாட்டின் முதலாவது நாட்டிற்குள்ளேயே உற்பத்தி செய்யும் COVID-19 தடுப்பூசிக்காக மருத்துவ ஆராய்ச்சியின் இந்தியக் கவுன்சிலால்(ICMR) காட்டாங்குளத்தூரிலுள்ள SRM மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- டெல்லிக்கு அடுத்து, ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில்(RGGGH) நாட்டின் இரண்டாவது பிளாஸ்மாவங்கியை சென்னை வெகுவிரைவில் பெறும்.
- மத்திய அரசால் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு மருத்துவ ஆலோசனைக்காக e-சஞ்சீவினி மூலமாக அதிக எண்ணிக்கையுள்ள மருத்துவ ஆலோசனைகளைப் பெறும் மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.
- அம்மா COVID-19 இல்லக்கவனத் திட்டத்தின்கீழ் ஆகஸ்ட்-14,2020ல் ஒவ்வொன்றும் ரூ.2500 மதிப்பிலான மருத்துவ உபகரணத் தொகுப்புகளின் பகிர்வை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கிவைத்தார். இந்தத் தொகுப்பு, COVID-19 அறிகுறியுள்ளவர்கள் மற்றும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்கு மட்டுமே வழங்கப்படும்.

# கலாச்சாரம் / பண்பாடு

- **பிரதமர் நரேந்திர மோடி ஜுலை-3ல் லடாக்கில் இந்திய இராணுவ வீரர்களிடையே உரையாற்றும்போது பின்வரும் திருக்குறளைக் குறிப்பிட்டார்.**

  - **மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**

**எனநான்கே ஏமம் படைக்கு. (குறள் - 766)**

  - இந்த குறளின் பொருள் வீரம்'', மானம், முன்னோர் சென்ற வழியை பின்பற்றி செல்லுதல், தலைவனின் நம்பிக்கையைப் பெற்று நடப்பது ஆகியவை ஒரு படையைப் பாதுகாக்கும் பண்புகளாகும் என்பதாகும்.
  - இக்குறளைக் கூறி, வீரர்களின் குணத்தையும், படையின் தன்மைகளையும் சுட்டிக்காட்டினார்.

- **கடந்த ஒரு வாரத்தில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடியில் பல்வேறு அளவிலான கோளவடிவுள்ள நான்கு கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

  - கீழடியில் தற்போது தொல்லியல் துறையால் நடத்தப்படுகின்ற ஆறாவது கட்ட அகழாய்வு சென்று கொண்டிருக்கிறது.
  - அந்த நான்கு கருப்பு நிற கற்களும் 300-கிராம், 150-கிராம், 18-கிராம் மற்றும் 8-கிராம் ஆகிய பல்வேறு அளவுகளில் பசால்ட் வகை பாறையால் செய்யப்பட்டதாகும்.

- **மதுரை அருகில் தமிழ் பிராமி மற்றும் வட்டெழுத்து படிவங்கள் கண்டறியப்பட்டன.**

  - மதுரை அருகிலுள்ள கிண்ணிமங்கலம் கிராமத்தில் ஏகநாதன் மடத்தின் வளாகத்தின்மீது 2000-ஆண்டு பழமையான பிராமி எழுத்துக்களோடு கூடிய ஒரு அரிதான நினைவுத்தூண் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தத் தூணில் பின்வரும் மூன்று வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன.

1. ஏகன் ஆதான் கோட்டம் (Ekan Athan Kottam)
2. இது ஏகன் ஆதான் என்ற அரசனின் ஆட்சிப் பகுதியைக் குறிக்கிறது.
3. முதன்முதலாக தமிழ்நாட்டில் எல்லைப்பரப்பை குறிப்பதற்கு கோட்டம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது.

- **மாநில தொல்லியல் துறை தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சிவகலையில் 13-முதுமக்கள் தாழிகளைக் தோண்டி எடுத்துள்ளது.**

  - இந்த வருடன் முதல்முறையாக தொல்லியல் துறையால் அகழாய்வுக்குப் எடுக்கப்பட்டது **'சிவகலை'** ஆகும்.
  - சிவகலை என்பது பண்டைய பாண்டிய அரசாட்சியின் இடைக்காலத்தில் ஏற்பட்டதாகும் மற்றும் தாமிரபரணியாற்றின் கரையில் அமைந்துள்ளதாகும்.

- சிவகலை, புதைக்குழித்தளம் காணப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரிலிருந்து 7-கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.
- இந்திய தொல்லியல் ஆய்வு 2004-ல் ஆதிச்சநல்லூரில் அகழாய்வை நடத்தி 169-முதுமக்கள்தாழிகளைக் கண்டெடுத்துள்ளது.
- ஆதிச்சநல்லூரைவிட சிவகலையில் அதிகமான முதுமக்கள்தாழிகள் இருக்குமென்று நம்பப்படுகிறது.

**❖ தமிழகப் பொதுப்பணித்துறை, சிவகங்கை மாவட்டத்திலுள்ள கொந்தகைக் கிராமத்தில் ஒரு அருங்காட்சியகத்தைக் கட்டுவது மீதான பணியைத் தொடங்கும்.**

- இந்த அருங்காட்சியகத்தின் கீழடி தொல்லியல் தளத்திலிருந்து பெறப்பட்ட பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும்.
- கடந்தகாலத்தில் தொல்லியல் அறிஞர்கள் பல்வேறு அகழாய்வுகளில் மேம்பட்ட கலாச்சாரத்தைப் பெற்றுள்ள கிராமமான கொடுமணலில் நடத்தியுள்ளனர்.
- இஸ்லாமிய நாடுகள் மற்றும் தமிழ்நாட்டிற்கிடையே வியாபாரத் தொடர்புகள் இருந்துள்ளதை கொடுமணல், கீழடி மற்றும் ஆதிச்சநல்லூர் கிராமங்களில் கண்டறியப்பட்டுள்ளது.
- இவ்வித ஆய்வுக்குழுக்கள் இவ்வித அகழாய்வுக் கிராமங்களில் முதுமக்கள்தாழிகளைக் கண்டெடுத்ததால் தமிழகத்திற்கும் ஆப்கானிஸ்தானிற்கும் தொடர்பிருந்தது தெரிய வருகிறது.
- வரலாற்று ஆதாரங்களுக்கு இணங்க ஆபர நகைகளுக்கு பாலிஸ் போடுவதற்கு ஆப்கானிஸ்தானிலிருந்து மக்கள் தமிழ்நாட்டிற்கு வந்தனர் என்றும் பின்னர் அந்த ஆபரணங்களை அவர்கள் எடுத்துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.
- இந்தக்குழு, அகழாய்வின் மூலமாக இரும்பு, இரும்புப் பொருட்கள், வளையல்கள், கண்ணாடிகள், மண்பாண்டங்கள் கூறை ஓடுகள் மற்றும் நெய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்கள் போன்றவற்றையும் தோண்டி எடுத்துள்ளது.

**❖ தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் தளத்தில் தொல்லியல் அறிஞர்களால் நாலடி உயரமுள்ள முதுமக்கள் தாழி தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.**

- இத்துடன், மே-25ல் தொடங்கி நிகழும் அகழாய்வில் இதுவரை 10-வேறுபட்ட அளவுகளில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**❖ தமிழ்நாடு தொல்லியல் துறை ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை அருகிலுள்ள கொடுமணல் கிராமத்தில் அகழ்வாராய்ச்சிகளைத் தொடங்கியுள்ளது.**

- அகழ்வாராய்ச்சியைத் தொடங்கிய அக்குழு அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் மூலமாக தமிழ்நாட்டிற்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையே வர்த்தக உறவு இருந்ததை கண்டறிந்தனர்.

- **மத்திய கலாச்சார அமைச்சர் பிரகலாப் சிங் பட்டேல், தமிழ்நாட்டில் இந்திய தொல்லியல் ஆய்வின்(Archaeological Survey of India – ASI) ஒரு புதிய வட்ட உருவாக்கத்தை அறிவித்தார்.**
  - அதன்படி, ASI-யின் சென்னை வட்டத்தைப் பிரித்து திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் ஏற்படுத்தப்பட்டு இரண்டாக்கப்படும்.
  - சென்னை வட்டம் அதிகபட்சமாக 411-நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களை பராமரிக்கிறது.

APPOLO STUDY CENTRE

# மே-2020ன் மிக முக்கியச் செய்திகள்

❖ **‘ஆத்மநிர்பார் பாரத் அபியான் திட்டம்’ பற்றிய அறிக்கை:**

- இத்திட்டத்தின் பொருள் சுயசார்பு இந்தியா என்பதாகும்.
- இத்திட்டம், COVID-19க்கு எதிரான செயல்படுவதில் இந்தியப் பொருளாதாரத்திற்கு ஆதரவு அளிக்கிறது.
- இத்திட்டம் என்ற அறைகூவலை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

- **இத்திட்டத்தின் 5-தூண்கள்(5-Pillars):**

1. பொருளாதாரம்
2. கட்டுமானம்
3. முறைமை
4. துடிப்பான மக்கள்தொகை
5. தேவை

- **இத்திட்டத்தின் 5-கட்டங்கள் (அ) பகுதிகள்(5-Phases/Parts):**

- கட்டம் -1 MSMEs உள்ளடங்க வர்த்தகங்கள்
- கட்டம் -2 இடம் பெயர்வோர் மற்றும் விவசாயிகள் உள்ளடங்க ஏழைகள்
- கட்டம் -3 விவசாயம்
- கட்டம் -4 வளர்ச்சியின் புதிய பக்கவாட்டுகள்
- கட்டம் -5 அரசாங்க சீர்திருத்தங்கள் மற்றும் இயக்குபவர்கள்

- **பகுதி வாரியான மொத்த ஒதுக்கீடுகள் மற்றும் முந்தைய திட்ட ஒதுக்கீடுகள்:**

| வ.எண் | விபரம் | ஒதுக்கீடு ரூ.(கோடியில்) |
|---|---|---|
| 1 | பகுதி-1 | 5,94,550 |
| 2 | பகுதி-2 | 3,10,000 |
| 3 | பகுதி-3 | 1,50,000 |
| 4 | பகுதி-4 மற்றும் பகுதி-5 | 48,100 |
| | **மொத்தம்** | **11,02,650** |
| 5 | PMGKP உட்பட முந்தைய திட்டங்களுக்கு | 1,92,800 |
| 6 | RBI செயல்பாடுகள் (நடைமுறை) | 8,01,603 |
| | **மொத்தம்** | **9,94,403** |
| | **ஒட்டுமொத்தம்** | **20,97,053** |

➢ **பகுதி-1ல் ஒதுக்கப்பட்ட விவரங்கள்:**

| **வ. எண்** | **விபரம்** | **ஒதுக்கீடு ரூ.(கோடியில்)** |
|---|---|---|
| 1 | MSMEs உட்பட வர்த்தகங்களுக்கான அவசர வசதிகள் | 3,00,000 |
| 2 | குறிப்பிட்ட MSMEs-களுக்கான துணைக்கடன் | 20,000 |
| 3 | MSMEs-கான நிதிகளின் நிதி | 50,000 |
| 4 | வர்த்தக மற்றும் பணியாளர்களுக்கான EPF-ஆதரவு | 2,800 |
| 5 | EPF விகிதங்களின் குறைப்பு | 6,750 |
| 6 | NBFC/HFC/MFIs-க்கான சிறப்பு நீர்மைத் திட்டம் | 30,000 |
| 7 | IBFCs/MFIs-க்களின் பொறுப்புகளுக்கான பகுதிக்கடன் உத்திரவாதத் திட்டம் 2.0 | 45,000 |
| 8 | DISCOMs-க்கான நீர்மைப் புகுத்துதல் | 90,000 |
| 9 | TDS/TCS விகிதங்களின் குறைப்பு | 50,000 |
| | **மொத்தம்** | **5,94,550** |

➢ **பகுதி-2ல் ஒதுக்கப்பட்ட விவரங்கள்:**

| **வ. எண்** | **விபரம்** | **ஒதுக்கீடு ரூ.(கோடியில்)** |
|---|---|---|
| 1 | 2-மாதங்களுக்கான இடம்பெயரும் தொழிலாளர்களுக்கு இலவச உணவுதானிய விநியோகம் | 3,500 |
| 2 | முத்ரா சிசு திட்டங்களுக்கான வட்டி பணஉதவி | 1,500 |
| 3 | தெருவோர விற்பனையாளர்களுக்கான சிறப்புக் கடன்வசதி | 70,000 |
| 4 | நடுத்தர வகுப்பினருக்கான வீட்டுவசதி | 5,000 |
| 5 | நபார்டு மூலமாக கூடுதல் அவசர செயல்முதலீடு | **30,000** |
| 6 | KCC மூலமாக கூடுதல் கடன் | 2,00,000 |
| | **மொத்தம்** | **3,10,000** |

➢ **பகுதி-3ல் ஒதுக்கப்பட்ட விவரங்கள்:**

| **வ. எண்** | **விபரம்** | **ஒதுக்கீடு ரூ.(கோடியில்)** |
|---|---|---|
| 1 | உணவு நுண் தொழில்கள் | 10,000 |
| 2 | மீனவர்களுக்கான பிரதான் மந்திரி மாட்சிய சம்படா திட்டம் | 20,000 |
| 3 | TOP to TOTAL: பசுமைச் செயல்பாடு | 500 |
| 4 | விவசாயக் கட்டமைப்பு நிதி | 1,00,000 |
| 5 | கால்நடைப் பராமரிப்பு கட்டமைப்பு மேம்பாட்டு நிதி | **15,000** |
| 6 | மூலிகைப் பயிரிடுதலின் மேம்பாடு | 4,000 |
| 7 | தேனீ வளர்ப்புத் திட்டம் | 500 |
| | **மொத்தம்** | **1,50,000** |

- **பகுதி-4 மற்றும் பகுதி-5ல் ஒதுக்கப்பட்ட விவரங்கள்:**

| **வ.எண்** | **விபரம்** | **ஒதுக்கீடு ரூ.(கோடியில்)** |
|---|---|---|
| 1 | சாத்தியக்கூறு இடைவெளி நிதியிடல் | 8,100 |
| 2 | கூடுதலான MGNREGS ஒதுக்கீடு | 40,000 |
| | **மொத்தம்** | **48,100** |

- **தொய்வான பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் ஒரு பகுதியாக பின்வரும் துறைகளில் சில சீர்திருத்தங்களை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார். அவ்விதத் துறைகள் பின்வருமாறு:**

1. நிலக்கரி – தனியார் துறைகள் ஏற்றுக்கொள்ளப்படும்
2. தாதுப்பொருட்கள் - 500-சுரங்கங்கள் ஏலம் விடப்படவுள்ளன
3. பாதுகாப்பு – பாதுகாப்பு கருவிகள் வாங்குவதில் இறக்குமதியை தடைசெய்தல்
4. விமானப் போக்குவரத்து – வான் எல்லைக் கட்டுப்பாடு எளிதாக்கப்படும்
5. மின்சாரம் - யூனியன் பிரதேசங்களில் உள்ள மின்சார பகிர்மான நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும்
6. வானியல் - இத்துறையில் தனியார்கள் அனுமதிக்கப்படுவர்
7. அணுசக்கதி – PPP அணுகுமுறைப் பின்பற்றப்படும்.

APPOLO STUDY CENTRE